# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 256 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 24, திங்கட்கிழமை 08.08.2016


ஆணைக் குழுக்களை அமைப்பதை விடுத்து மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்

பக்கம் 02

# விடுதலையை வலியுறுத்தி இன்று அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு

## ஆதரவாக யாழ்ப்பாணம், கொழும்பில் மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 8
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இன்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.
சம நேரத்தில், தடுப்பில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.
அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2012ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட டில்ருக்ஷனின் 4ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். படுகொலையை நினைவு கூர்ந்தும் அதற்கு நீதிகோரியும், ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியுமே போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.
இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்பாகவும் காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் நடுவண் பேருந்து பக். 24

## நல்லைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



யாழ்ப்பாணம்,ஓக.8
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய துர்முகி வருட பெருந்திருவிழா இன்று (08.08.2016) 24 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
தொடர்ச்சியாக இருபத்தைந்து தினங்கள் இடம் பெறவுள்ள திருவிழாவில், எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை மஞ்சத்திருவிழாவும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பைரதத் திருவிழாவும் 31ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திரு பக். 24

## முதல்வருக்கு எதிராகவும் மக்கள் முறையிடலாம்

### நியமிக்கப்படும் விசாரணைக் குழுவிடம்

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிப்பதற்கு நான் நியமிக்கும் குழுவிடம், எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கலாம்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.
வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைக் குழு தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
வடக்கு மாகாண அமைச்சர்களை மாற்ற வேண்டும் என்று வலுவான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. அமைச்சர்களை நியமிக்கும்போது, அவர்களுடைய சுயவிவரக் கோவைகள் பார்வையிடப்பட்டு, கட்சிகள் அடிப்படையில் ஆலோசிக்கப்பட்டே நியமனம் செய்யப்பட்டது. அவர்களை மாற்றுவது என்பது இலகுவானது அல்ல.
அமைச்சர்களுக்கு எதிராகப் பொதுமக்களால் பல்வேறு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் இதற்கான ஆதாரங்கள் சரியான வகையில் முன்வைக் பக். 25

## தீர்வை முன்வைத்து அரசு நழுவ முயற்சி

### முதலமைச்சர் விக்கி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 8
அரசியல் தீர்வைப்பேசி பொறுப்புக் கூறலை மறக்க வைக்க இடமளிக்கக் கூடாது. இதனைச் செய்வதற்கு தற்போதைய அரசு முயன்று வருவதாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
தமிழ் மக்கள் பேரவையின் நேற்றைய கூட்டத்தில், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உரையாற்றியதாகத் தெரிவித்து அவரது அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அதில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள்:

- அரசியல் தீர்வு நாம் எதிர்பார்ப்பது போன்று கிடைக்காது.
- சிங்கள அரசியல் தலைமை மட்டுமல்ல சிங்கள மக்களும், போர்க்குற்றங்களிலிருந்து பாதுகாப்புத் தரப்பினரைக் காப்பாற்றவே நினைக்கின்றனர்.
- அரசு எம்மை சகோதர இனங்களுடன் மோத விடுகின்றது.
- எம்மை முரண்பட வைத்து, எமது பலத்தை திசை திருப்பி, பலவீனமான அரசமைப்பைத் தயாரித்து ஏற்க வைக்க முயற்சிப்பார்கள்.
- அரசமைப்பு முரண்பாடு முடிவுக்கு வந்த பின்னரே, தென்னாபிரிக்காவில் உள்ளக விசாரணைப் பொறிமுறை ஆரம்பமானது.
- முன்னைய காலத்தில் இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். சிங்களவர்கள் இங்கு இருக்கவில்லை.
- அரசியல் தீர்வு மக்கள் கேட்டவாறு கிடைத்தாலே நல்லிணக்கம் ஏற்படும் . (விரிவு: பக்கம் 12 - 13)

## ஒரு குடும்பமே மறியலில் திருட்டுக் குற்றச்சாட்டில்

### நல்லூர் திருவிழாவுக்கு வந்தனரா? எனப் பொலிஸார் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஓக. 8
புத்தளத்திலிருந்துவந்து நாவற்குழிப் பகுதியில் தங்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
நல்லூர்த் திருவிழா இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், நல்லூர் ஆலயச் சுற்றாடலில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கே இந்தக் குழுவினர் இங்கு வந்துதங்கியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஒன்பது பேரில், பக். 24

## பொய் உரைக்கிறார் வடக்கு முதலமைச்சர்

### என்கிறார் சுவாமிநாதன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையினாலும், வடக்கு மாகாண சபையினாலும் நிராகரிக்கப்பட்ட பொருத்து வீட்டுத் திட்டத்தை வேறு இனத்தவர்களுக்கு, வடக்கில் அமைப்பதற்கு நான் முயற்சிப்பதாக வடக்கு முதல்வர் தெரிவிக்கும் குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் கிடையாது.
இவ்வாறு தெரிவித்தார் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.
வடக்கு மக்களுக்கு கிடைக்க வேண்டிய வீட்டுத் திட்டம் தடைப்படக் கூடாது. அதனை முதலமைச்சர் கூட ஏற்பாடு செய்து வழங்க முடியும். எனவும் அவர் தெரிவித்தார்.
(விரிவு: பக்கம் 03)

நெல்சிப் ஊழல்,மோசடி

## குற்றப்பத்திரிகை தயாரிக்கும் குழுவின் உறுப்பினர்கள் விலகல்

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கு மாகாண நெல்சிப் திட்டத் தில் இடம்பெற்ற ஊழல் மோசடி கள் தொடர்பில் குற்றப் பத்திரிகை தயாரிப்பதற்காக வடக்கு மாகாண தலைமைச் செயலரினால் அமைக்கப்பட்ட குழுவின் உறுப் பினர்கள் அதிலிருந்து விலகியுள் ளனர்.
இதனால் மாகாண தலைமைச் செயலரே குற்றப் பத்திரிகை தயாரிக்கும் நடவடிக்கையில் நேரடியாக ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது.
வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நெல்சிப் திட்டத்தின் போது, ஊழல் மோசடிகள் பக். 24

முச்சந்தி முனி



அவர்களின் போராட்டத்துக்கும் மதிப்பளிக்க வேண்டும் பாருங்கோ....

## ட்ரக்ரர் சில்லுக்குள் சிக்கி இளைஞன் பரிதாபச் சாவு

### முழங்காவிலில் நேற்றிரவு துயரம்

யாழ்ப்பாணம், ஓக. 8
முழங்காவில் வெள்ளாங்குளம் பகுதியில் உழவு இயந்திரத்தில் பயணித்தபோது தவறி வீழ்ந்ததில் சில்லில் அகப்பட்ட இளைஞன் பரிதாபகரமாக சாவடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
புஸ்பராசா கிருபானந்தன் (வயது - 23) என்ற இளைஞரே விபத்தில் உயிரிழந்தவராவார்.
முழங்காவில் வெள்ளாங்குளம் பகுதியில் மணல் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட இளைஞர்கள், குழுவாக உழவு இயந்திரத்தில் வீடு திரும்பும்போதே விபத்து நேற்றிரவு இடம்பெற்றது.
வீழ்ந்து விபத்திற்கு உள்ளான இளைஞனை உடனடியாக முழங்காவில் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர்.
அங்கு அவர் உயிரிழந்தார் என உறுதிசெய்யப்பட்டது. உயிரிழந்தவரின் சடலம் தற்போது உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
உழவு இயந்திரத்தின் சாரதி இலுப்பைக் கடவைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(வ-5-10)

## அழகிய ஆண் குழந்தையை வீதியில் வீசி எறிந்த பரிதாபம்



யாழ்ப்பாணம், ஓக. 8
பிறந்து சில வாரங்களேயான அழகான ஆண் குழந்தை ஒன்று கடதாசிப் பெட்டியில் வைக்கப்பட்டு வீதியோரம் கைவிடப்பட்ட நிலையில் நேற்றுஅதிகாலை மீட்கப்பட்டது. குழந்தையின் அழுகுரல் கேட்டு வீட்டிலிருந்த ஒரு தாய் அந்தக் பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஆணைக்குழுக்களை அமைப்பதை விடுத்து மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்

## செயலணியிடம் தென்மராட்சியில் வலியுறுத்தல்

தென்மராட்சி ஓக.8

ஆணைக்குழுக்கள், செயலணிகள் முன் சாட்சியமளிப்பது பொது மக்களுக்குத் திருப்தி தருவதை விட, அவர்களின் மனக்கவலைகளை மீண்டும் உருவாக்கும் நிலையே காணப்படுகின்றது. இவ்வாறான சாட்சியங்கள் பெறுவதை விடுத்து, மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் அரசு செயலாற்றவேண்டும்.

இவ்வாறு மக்கள் கருத்தறியும் செயலணியிடம் தெரிவித்தனர் தென்மராட்சிப் பிரதேச மக்கள்.

போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை எவ்வாறு அமைப்பது மற்றும் காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பது தொடர்பில் மக்களிடம் கருத்தறியும் செயலணியின் அமர்வு நேற்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது மக்களால் தெரிவிக்கப்பட்டதாவது:

காலத்திற்கு காலம் காணாமற்போனோர் தொடர்பாக சாட்சியம் பெற்று அரசிடம் அறிக்கை முன்வைக்கிறார்கள். அதற்கு என்ன நடந்தது என்று எவரும் தொடர் நடவடிக்கை எடுப்பதில்லை. ஏனெனில் அரசினால் நியமிக்கப்பட்டவர்கள் அரசிடம் கேள்வி கேட்கப் பயப்படுகிறார்கள். இந்த நிலையில் மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதில் என்ன பயன் உள்ளது.

சரணடைந்தவர்கள் தொடர்பாக நீதிமன்றினால் விடுக்கப்பட்ட உத்தரவையே மீறிச் செயற்படும் அரசு, எங்களைப் போல பாமர மக்களின் குரலுக்கு செவி மடுப்பார்கள் என்பது என்ன நிச்சயம். காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பது தொடர்பாக செயலணியினர் கேட்டபோது, அது எங்கு அமைத்தாலும் ஒரு பயனும் கிடைக்காது என்பது உறுதியாகத் தெரிந்தும், அதனை மக்களின் தேவை உள்ள இடங்களில் அமையுங்கள் என்று கூறுவதில் அர்த்தமில்லை. அதில் பணியாற்றுபவர்கள் அரசினால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களிடம் நாங்கள் சென்று கதைத்தால் முடியாது என ஒரு வசனமும் சொல்ல மாட்டார்கள். எம்மை ஆறுதல் படுத்தும் வசனங்களைச் சொல்வார்களே தவிர, காணாமற்போனவர்கள் தொடர்பான எந்தவொரு ஆக்கபூர்வமான பதிலும் தரமாட்டார்கள்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்போது, எமது கருத்துக்களைச் சேர்க்க அரசும், அதனுடன் செயற்படுபவர்களும் விரும்பமாட்டார்கள். இந்த நிலையில் மக்களின் கருத்துக்களைக் கேட்பதை விட நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பயன் பெறக்கூடிய வகையிலான அரசமைப்பை உருவாக்கினால், தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். புதிதாக உருவாக்கப்படும் அரசமைப்பு, தமிழ் மக்களின் ஆசைகளை நிராசையாக்கும் வடிவத்திலேயே கொண்டு வரப்படும் என்பது உலகறிந்த உண்மை. இதனால் காலத்தை இழுத்தடிக்காமல் மக்களுக்கு பயன்தரக்கூடிய வகையிலான அரசமைப்பைஉருவாக்குங்கள்.



இந்தச் செயலணியினர் காணாமற்போனோர், சரணடைந்தோர் எந்த முகாம்களில் உள்ளனர் என்ற விவரங்களைப் பெற்றுக் கொண்டு மக்களைச் சந்திக்க வந்திருந்தால், உண்மையில் செயலணியின் நோக்கத்திற்கு மக்கள் ஆதரவளிப்பார்கள். அரசினால் நியமிக்கப்படும் எந்தவொரு செயலணியிலும் மக்கள் நம்பிக்கை வைக்கமாட்டார்கள்.

பிரதேசங்கள் தோறும் பாதிக்கப்பட்ட மக்களை உள்ளடக்கிய குழுக்களை அமைத்து காணாமற்போனோரை வைத்திருக்கம் இடங்கள் என கருதப்படும் படை முகாம்கள், இரகசிய முகாம்கள் போன்றவற்றில் தேடவைக்க முயற்சிக்கவேண்டும்.

புதிய அரசு பதவியேற்றதும் மக்கள் அனுபவித்த இடர்கள் தீரும் என்ற நம்பிக்கை பலருக்கு இருந்தது. காணாமற்போன தமது உறவுகள் விரைவில் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆனால் அரசு ஆணைக்குழுக்களையும் செயலணிகளையம் அமைப்பதில் காட்டும் அக்கறையைப் பொது மக்களின் ஆவலைத் தீர்க்க ஆக்கபூர்வமான எந்தவொரு வேலைத்திட்டமும் மேற்கொள்ளவில்லை. நீதிபதி முன்னிலையில் எம்மால் சாட்சியமளித்தபோது, எமக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. அந்த அறிக்கையை முன்வைக்க ஆணைக்குழு இழுத்தடிப்பு செய்வது சாட்சியமளித்த எம்மைப் போல பலருக்கு வேதனையைத் தருகிறது - என்றனர். (வ- 9)

## சுயதொழில் தேடுவோருக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக. 8

இளைஞர் தொழில் முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாண முகாமையாளர் சங்கத்தின் அனுசரணையுடன் சுய தொழில் தேடுவோருக்கான பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இந்தச் சுயதொழில் முயற்சியில் ஈடுபடவுள்ளவர்கள் முதலில் ஆர்வமுள்ளவர்களாகவும் மற்றும் இளம் தொழில் ஆர்வலர்கள், முயற்சியுடைய பட்டதாரிகள், ஜீ.சீ.ஈ.சாதாரண தர மற்றும் உயர்தரம் முடித்து தொழில் தேடுவோர், விசேடமாக போரினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள் தலைமையிலான குடும்ப உறுப்பினர்களாக இருப்பதோடு இவர்கள் 20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கவும் வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் 20 தொடக்கம் 30 பயனாளிகளுக்கு 14 நாள்கள் முழு நேரப் பயிலரங்கு நடைபெறும். முதலாவது பயிற்சி இந்தமாத நடுப்பகுதியிலும், இரண்டாவது பயிற்சிப் பட்டறைகள் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களிலும் நடைபெறும். இந்தப்பயிற்சிப் பட்டறையும், வழிகாட்டல்களும் வெளிநாட்டு நிறுவனமொன்றின் அனுசரணையுடன் இலவசமாக நடத்தப்படுகிறது.

பயிற்சியின் முடிவில் தகுதியானவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இந்த பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை சுயவிவரக்கோவையுடன் இணைப்பாளர், யாழ். முகாமையாளர் சங்கம், இல. 17, கமத்தொழில் திணைக்கள வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது bmsjaffna@yahoo.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## தோட்டத்தில் கம்பிச் சுருள்கள் திருட்டு

தோட்டக்காணியில் வைக்கப்பட்டிருந்த இரண்டு தொகுதி கம்பிச் சுருள்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை திருடப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அச்சுவேலி கைத்தொழில் பேட் டைப் பகுதியில் உள்ள தோட்டக்காணியிலேயே இந்தச் சம் பவம் இடம்பெற்றது. திருட்டுப்போன கம்பிச் சுருளின் பெறுமதி 10 ஆயிரம் ரூபா என தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-5-107)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தன் ஆலயத் திருவிழாவுக்கான கொடிச்சீலை நேற்றுக் காலை ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு தலைமைக் குருக்களிடம் கையளிக்கப்பட்டது. (5)

# அனுமதியின்றி கல் அகழ்வு; 3 பெக்கோ, ரக்ரர் பறிமுதல்

புத்தூர் மற்றும் குட்டியப்புலம் பகுதிகளில் அனுமதிப் பத்திரம் இல்லாமல் கல் அகழ்விற்கு பயன்படுத்திய குற்றச்சாட்டில் பெக்கோ வாகனங்கள் மற்றும் உழவு இயந்திரம் என்பவற்றைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கனிய வளங்கள் மற்றும் சுரங்க அகழ்வு பணியகத்தின் அனுமதிப் பத்திரம் இல்லாமல் சுண்ணக் கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே அந்த வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன. மூன்று பெக்கோ இயந்திரங்களும், ஒரு உழவு இயந்திரமுமே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் உள்ள காணி உரிமையாளர்கள், கல் அகழ்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டாலும், பெக்கோ வாகனங்கள் மூலம் கல் அகழ்வதற்கு கனியவளங்கள் மற்றும் சுரங்கப் பணியகத்திடம் அனுமதி பெறவேண்டும் என்று பொலிஸார் கூறினர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களில் ஒன்று இதே குற்றத்திற்காக பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றினால் பிணையில் எடுத்து செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது. அதே பெக்கோ வாகனம் மீண்டும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனங்களின் உரிமையாளர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (வ-5)

# தங்கூசி வலை பாவித்த மீனவர்களுக்கு தண்டம்

கிளிநொச்சி, ஓக. 8

தடை செய்யப்பட்ட தங்கூசி வலையைப் பாவித்து இரணைதீவு கடற்பரப்பில் மீன்பிடித்த நான்கு மீனவர்கள் நாச்சிக்குடா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டது நீதிமன்றம்.

இரணைதீவு கடற்பரப்பில் கடந்த வெள்ளிக்கிழமை ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் நாட்டுப் படகில் வந்து மீன்பிடித்த மீனவர்களின் படகுகளை அவதானித்துள்ளனர். படகை கடற்படையினர் சோதனையிட்டபோது, தடை செய்யப்பட்ட தங்கூசி வலையைப் பாவித்தமை கண்டறியப்பட்டது. கைதான நான்கு மீனவர்களும் கிளிநொச்சி நீரியல்வளத் துறை மாவட்ட அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்திய போது, தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-5-101-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்து வீட்டுத் திட்டத்தை சிங்களக் குடியேற்றத்துக்கு மாற்ற முயற்சி

# முதலமைச்சர் விக்கியின் குற்றச்சாட்டை அடியோடு மறுக்கிறார் நடுவண் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக. 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையினாலும், வடக்கு மாகாண சபையினாலும் நிராகரிக்கப்பட்ட பொருத்து வீட்டுத் திட்டத்தை வேறு இனத்தவர்களுக்கு, வடக்கில் அமைப்பதற்கு நான் முயற்சிப்பதாக வடக்கு முதலமைச்சர் தெரிவிக்கும் குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் கிடையாது.

இவ்வாறு தெரிவித்தார் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.



வடக்கு மாகாண முதலமைச்சர் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போது: நாம் நிராகரித்த பொருத்து வீட்டுத் திட்டத்தினை வேறு வடிவில் வேறு இனங்கள் ஊடாக வடக்கில் மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்திருந்தார். முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வடக்கு மாகாணத்துக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் வீடுகள் தேவைப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டது. வீட்டுத் தேவையை நாம் முழுமை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தோம். 60 ஆயிரம் வீடுகளை கடன் அடிப்படையில் நிர்மாணித்து வழங்குவதற்கு ஓர் நிறுவனம் மாத்திரமே முன்வந்தது.

இந்த வீட்டையும் அதற்கான பெறுமதி அதிகம் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும், வடக்கு மாகாண சபையும் நிராகரித்திருந்தன.

பெறுமதியைக் குறைத்து சுமார் 13 லட்சம் ரூபா செலவில் அதே வீட்டை அமைத்துக் கொடுப்பதற்கு நான் பரீட்சித்துப் பார்த்தேன். அதனை விட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முதலமைச்சர் சொல்வது போன்று, சிங்கள - முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றுவதற்கான செயலணி ஊடாக அந்த வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நான் முயற்சிக்கவில்லை.

வடக்கு மக்களுக்கு கிடைக்க வேண்டிய வீட்டுத் திட்டம் தடைப்படக் கூடாது. அதனை முதலமைச்சர் கூட ஏற்பாடு செய்து வழங்க முடியும். வடக்கு மக்களின் வீட்டுத் திட்டம் முழுமை செய்யப்பட்டால் போதுமானது. அதனை முதலமைச்சர் மேற்கொள்ள வேண்டும்.

நான் தமிழ் மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படாத அமைச்சராக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு சேவை செய்யும் ஓர் அமைச்சராகவே இருக்கின்றேன் - என்றார்.

(வ-5-101)

# சீமெந்து ஆலையில் பணியாற்றிய 142 பேர் யாழ். செயலரிடம் மனு

யாழ்ப்பாணம், ஓக. 8
காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் பணிபுரிந்து எந்த விதக் கொடுப்பனவும் இன்றி வேலையை இழந்த 142 பேர் தமக்கு நிவாரணம் வழங்கக் கோரி யாழ். மாவட்டச் செயலாளருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது:

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் பணிபுரிந்த ஊழியர்களில் 1995ஆம் ஆண்டு எந்த வித இழப்பீடோ அல்லது கொடுப்பனவோ அற்ற நிலையில் சுமார் 200 பணியாளர்கள் இடை நிறுத்தப்பட்டனர். இவ்வாறு இடை நிறுத்தப்பட்டமைக்கு 1990ஆம் ஆண்டு முதல் சிமெந்து ஆலை இயங்காதமையே காரணமாக காட்டப்பட்டது.

பணியை இழந்தவர்கள் பலரும் நாட்டின் வெவ்வேறு இடங்களில் வாழும் நிலையில் வாழ்வாதாரத்துக்குப் பெரும் நெருக்கடியினை எதிர்நோக்குகின்றனர். இவர்களில் சிலர் உயிரிழந்தும் உள்ளனர்.

இருப்பினும் தற்போது 142பேர் ஒன்றுகூடி தமக்குள் ஆராய்ந்து இந்தவிடயம் தொடர்பில் கருணை கொண்டு தமக்கு நிவாரணம் கோரி யாழ். மாவட்ட செயலாளரிடம் விண்ணப்பித்தனர். இவ்வாறு விண்ணப்பித்துள்ளமை தொடர்பில் மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்ததாவது:

142 முன்னாள் பணியாளர்கள் சார்பில் நேரில் சந்தித்தவர்கள் மேற்படி வேண்டுகோளை முன்வைத்தனர்.

இது தொடர்பில் ஆராயும் முகமாக ஆலையில் பணியாற்றிய பணியாளர்கள், கைத்தொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் எமது அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கிடையிலான ஓர் கூட்டுச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 200 பணியாளர்கள் என்பது கணிசமான தொகை என்பதனையும், அவர்கள் நீண்டகாலப் பணியாளர்கள் என்பதையும் கருத்திற் கொண்டு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும், இது தொடர்பான கலந்துரையாடலின் நிறைவிலேயே, இறுதி முடிவுகள் தெரிய வரும் - என்றார்.

(வ-101)

# கொழும்புக்கு வருகிறது இந்தியக் குழு

கொழும்பு, ஓக. 8
பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு தொடர்பாக, இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையில் நாளை செவ்வாய்க்கிழமை, பூர்வாங்கப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் பங்கேற்பதற்காக, இந்திய அதிகாரிகள் குழு கொழும்பு வரவுள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் கையெழுத்திடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள எட்கா உடன்பாட்டை இறுதி செய்வதற்கான பணிகள், இந்தப் பேச்சுக்களின் போது முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-5)

# போர்ட் சிற்றித் திட்டம் 16இல் பீஜிங்கில் கைச்சாத்து

கொழும்பு, ஓக. 8
கொழும்பு துறைமுக நகரத் திட்டம் (போர்ட் சிற்றி) தொடர்பான புதிய உடன்பாடு எதிர்வரும் 16 ஆம் திகதி சீனத் தலைநகர் பீஜிங்கில் கையெழுத்திடப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 2014 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்குப் பதிலாக, புதிய உடன்பாடு செய்து கொள்ளப்படவுள்ளது.

நிதி நகரம் என்ற பெயர் மாற்றத்துடன்செய்துகொள்ளப்படவுள்ள இந்த உடன்பாடு, 16ஆம் திகதி சுப வேளையில் கையெழுத்திடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த உடன்பாடு தொடர்பான விவகாரங்களைக் கவனிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நிதி நகரம் தொடர்பான முத்தரப்பு உடன்பாட்டில் அரசின் சார்பில், பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலர், நகர அபிவிருத்தி அதிகாரசபை, திட்டத்தை முன்னெடுக்கும் சீன நிறுவனம் ஆகியன கையெழுத்திடவுள்ளன.

அதேநாளில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சீன அதிபர் லி கெகியாங்கிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (வ-5)

# ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் தீ விபத்து

## கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் பொலிஸார்



வவுனியா, ஓக. 8
வவுனியா - ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டப்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து தொடர்பில் உடனடியாக அறிவிக்கப்பட்டமையால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வவுனியா - ஓமந்தைப் பகுதியில் வழங்கப்பட்ட அரசஊழியார்களுக்கான வீட்டுத் திட்டப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. அந்தத் தீ சுவாலையாகப் பல இடங்களில் பரவியது. இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு விரைந்த பொலிஸார் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

"அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள பல வீடுகளில் தீ பரவியுள்ளது என்று தகவல் கிடைத்தது. உடனடியாகத் தண்ணீர்த் தாங்கியுடன் அங்கு சென்று, சில மணி நேரங்களில் அந்தப்பகுதியில் பரவியுள்ள தீயைக் கட்டுப்படுத்தியுள்ளோம், இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. யாரோ ஒருவர் வைத்த தீ காற்றில் பரவி காய்ந்திருந்த புற்களில் பற்றி, இந்த வீடுகளிலுள்ள புற்கள், வாழைகள், தென்னை மரங்கள் என்பனவற்றில் பிடித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21)

# கிளிநொச்சி வைத்தியசாலை உணவக விலைமனுக் கோரலில் முறைகேடா?

## வழக்கு இன்று விசாரணை

யாழ்ப்பாணம், ஓக. 8
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உணவகத்தின் விலைமனுக் கோரலில் முறைகேடு இடம்பெற்றதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலையில் மாவட்ட வைத்தியசாலையின் உணவகத்தை தற்போது நடத்தி வந்தவர், அதிலிருந்து விலகுவதாக நேற்றைய தினம் கடிதம் மூலம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குத்தெரியப்படுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உணவகத்தை வாடகைக்கு விடுவதற்கு விலைமனுக் கோரல் இடம்பெற்றது. இதில் 21பேர் தமது விலை மனுக்களை முன்வைத்தனர். விலைமனுக்களின் அடிப்படையில் ஒருவர் உணவகத்தை நடத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக கடந்த மே மாதம் அறிவிக்கப்பட்டது.

உணவகத்தை நடத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் விலை மனுவில் குறிப்பிட்ட தொகையிலும் அதிக தொகையை குறிப்பிட்டு, விலை மனு சமர்ப்பித்தபோதும் தெரிவு செய்யப்படாமைக்கு எதிராக, கிளிநொச்சி நீதிமன்றத்தில் விலை மனு சமர்ப்பித்த நபர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கு இன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலையில் நேற்றையதினம், தற்போது உணவகத்தை நடத்தி வருபவர், உணவகத்தை நடத்துவதிலிருந்து விலகுவதாகக் கடிதம் கையளித்துள்ளார்.

"உணவகத்தை நடத்துபவர் ஒருவர் விலகுவதானால் ஒரு மாதத்துக்கு முன்னரே கடிதம் கையளிக்க வேண்டும்" என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

(வ-5-101-ரி3)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசதியற்ற இருக்கையில் அமர்ந்து கற்பதால் சிறார்களுக்கு ஆபத்து

வடமாகாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் சிறார்கள் வாங்குகளில் அமர்ந்திருப்பதால் அவர்களுக்கு முள்ளந்தண்டுப் பாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. மாணவர்களுக்கு நடத்தப்படும் மாலை நேர வகுப்புகளில் நிலத்தில் அமர்ந்திருந்து கல்வி கற்பதும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பாலர் கல்வி தொடக்கம் பல்கலைக் கழக அனுமதி வகுப்பு வரை தனியார் கல்வி நிலையங்களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்புவதில் பெற்றோர் அக்கறை கொண்டுள்ளனர். சனி ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் காலை தொடக்கம் மாலை வரை சிறார்களும் மாணவர்களும் சாய்வு வசதிகள் அற்ற வாங்குகளில் அமர்ந்திருந்து பாடங்களைக் கற்கின்றனர். இது எதிர்காலத்தில் அவர்களுக்கு முள்ளந்தண்டுப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், வாங்குகளில் நெருக்கமாக அமர்த்தப்படுவதால் சிறுநீரகப் பாதிப்புகளையும் உருவாக்கிவிடும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறான அபாயம் உள்ளதை பெற்றோரோ, சுகாதாரத் திணைக்களத்தினரோ உள்ளூராட்சி சபைகளோ கவனிப்பதில்லை என்றும் பாதிப்பு வந்த பின்னரே வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெற அழைத்துவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. வீடுகளிலும் நிலத்தில் அமர்ந்து சிறார்கள் கல்வி கற்கும் போது இவ்வாறான பாதிப்புகள் ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. (ற-9)


### வாடகைக்கு உண்டு

இல. 590, பருத்தித்துறை வீதி, நல்லூரில் (கோயில் தெற்குவீதியில்) 70 அடி நீளம், 22 அடி அகலம் உள்ள குளிரூட்டப்பட்ட சகல வசதிகளும் உடைய கட்டடம் வாடகைக்கு உண்டு. வர்த்தக நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு: 077 651 0434/021 221 9732

### பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடையை வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரியவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித்துதிக்கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.- ஆமென்

அடியார்.

### பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் நகை வியாபார நிலையத்தில் பணிபுரிய பணியாளர் தேவை.
(ஆண்கள் விரும்பத்தக்கது)

075 682 6168


# வெடுக்குநாறி இந்து மயானம் விரைவில் மக்கள் பாவனைக்கு

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 8

“இராணுவத்தினர் வசமிருந்த ஒட்டுசுட்டான்-வெடுக்குநாறி மயானம் விரைவில் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படும்.”

இவ்வாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அனுருத்தன் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள சிவநகர், வித்தியாபுரம், புதுக்குளம் போன்ற கிராமத்தில் வாழ்ந்து வரும் மக்கள் ஒட்டுசுட்டான் - வெடுக்குநாறியில் அமைந்துள்ள மயானத்தையே காலம் காலமாக பயன்படுத்தினர்.

இந்த மயானத்தில் இராணுவத்தினரது 64ஆவது படைப் பிரிவு தற்போது முகாமிட்டுள்ளது. அதனால் குறித்த மயானத்தில் உடல்களை தகனம் செய்யவோ புதைக்கவோ மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

சடலங்களை அடக்கம் செய்வதில் கடந்த ஏழு வருடங்களாக அந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். நீண்ட தூரம் சென்றே தகன காரியங்களை நிறைவேற்றினர்.

அண்மையில் வெடுக்குநாறி மயானத்துக்குப் பதிலாக புதுக்குளம் பகுதியில் மயானத்துக்கான இடம் ஒதுக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டது. அந்த மயானத்துக்குச் செல்லும் காலிக்காடு வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது.

ஒதுக்கப்பட்ட மயானம் பற்றைக்காடாக உள்ளது. மயானத்துக்குச் செல்லும் வீதி சேதமடைந்து போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளது. உடல்களைத் தகனம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம்.

இராணுவத்தின் வசமுள்ள வெடுக்குநாறி மயானத்தை மக்கள் பாவனைக்குப் பெற்றுக் கொடுக்க ஆவன செய்யவேண்டும்- என்று அந்தப் பகுதி மக்கள் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்களின் கோரிக்கை தொடர்பில் கடந்த மாதம் 27ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் கேட்டபோது- “மயானம் தொடர்பாக எந்தக் கோரிக்கைளும் எனக்குக் கிடைக்கவில்லை. கோரிக்கைகள் கிடைத்தால் தற்போது வழங்கப்பட்டுள்ள புதுக்குளம் மயானத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்” - என்று தெரிவித்தார்.

தற்போது இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்ததாவது:

“மக்களின் கோரிக்கைள் தொடர்பாக சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரியிடம் தெரிவித்தேன். வெடுக்குநாறி மயானம் அமைந்துள்ள பகுதி விடுவிக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்” - என்று தெரிவித்தார். (ற-21,ரி7)

## வரி செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

அரசுக்குக் கிடைக்கப் பெறவேண்டிய வரிப் பணத்தை செலுத்தத் தவறும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அனுராதபுரம் மாவட்ட வர்த்தகர்களுடன் நேற்று நடத்திய சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். வரி செலுத்தாதோரை இனங்கண்டு தொடர்ந்தும் வர்த்தக நிலையங்களை நடத்திச் செல்ல முடியாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களின் வரிப் பணத்தை அவர்கள் கைப்பற்றுகின்றனர்- என்றார். (ற-4)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில் நவீன வசதிகளுடன் பிரதே அறை

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பல இலட்சம் ரூபா செலவில் புதிய பிரேத அறை நவீன வசதிகளுடன், நான்கு குளிரூட்டிப் பெட்டிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி பிரேத அறை பாவனைக்குவிடப்பட்டுள்ளது. விசாரணை மேற்கொள்ளவேண்டிய உடல்கள், உரிமை கோரப்படாத உடல்களைப் பேணிப்பாதுகாத்து உரிய முறையில் உரியவர்களிடம் ஒப்படைக்கக் கூடியதாகவும், இனிவரும் காலங்களில் சட்ட வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக் கும் பட்சத்தில் இங்கு பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதுவரைகாலமும் பிரேத பரிசோதனைக்காக உடல்கள் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டதுடன், மிகவும் சிரமங்களை மக்கள் எதிர்கொண்டனர். கூடிய விரைவில் சட்ட வைத்திய அதிகாரி ஒருவரை எமது வைத்தியசாலைக்குநியமித்து மேற்படிபரிசோதனைகளை மேற் கொள்வது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம்கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளதுஎன்று வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார். (ற-36)


### மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடிவயிற்றுநோ கருச்சிதைவுமாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைகளுக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும் IVF, ICSI யும் கொடை முட்டை (Donor Egg) விந்து நன்கொடை (Donor Sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் **திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்தியசாலையில்** அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு : திருமதி ராஜேஸ்வரி
இல : 077 343 9988
021 221 9988, 021 221 9977 ,
021 222 2263


## துணுக்காய் வலயத்தில் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட 17 பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. அவற்றுக்குத் துணுக்காய் வலயத்தில் கடைமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், ஏனைய வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வகை II பாடசாலைகளுக்கு தரம் II அதிபர்களும்
02. வகை II பாடசாலைகளுக்கு தரம் II அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் பதில் அதிபர்களாக ஏற்கனவே சேவையிலுள்ள மற்றும் தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தை ஏற்றுக் கொண்டதரம் III அதிபர்களும்
03. வகை III பாடசாலைகளுக்கு தற்போது அதிபர் தரம் III போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர்களும் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 18.08.2016ஆம் திகதிக்கு முன்னர் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

வெற்றிடமுள்ள பாடசாலை விவரம் வருமாறு

| இல | பாடசாலை | வகை |
|---|---|---|
| 01 | மு/கூழாமுறிப்பு அ.த.க.பா. | II |
| 02 | மு/பழையமுறுகண்டி அ.த.க.பா. | III |
| 04 | மு/அமதிபுரம் அ.த.க.பா. | III |
| 05 | மு/மயில்வாகனம் த.வி. | III |
| 06 | மு/கொல்லவிளாங்குளம் அ.த.க.பா. | III |
| 07 | மு/பனங்காமம் பூவரசங்குளம் அ.த.க.பா. | III |
| 08 | மு/மூன்றுமுறிப்பு அ.த.க.பா. | III |
| 09 | மு/வவுனிக்குளம் மத்திய RYR அ.த.க.பா. | III |
| 10 | மு/பாலைப்பாணி அ.த.க.பா. | III |
| 11 | மு/பாண்டியன்குளம் ஆரம்பபாடசாலை. | III |
| 12 | மு/அலைகல்லுப் போட்டகுளம் அ.த.க.பா. | III |
| 13 | மு/ஒதியமலைதமிழ் வித்தியாலயம். | III |
| 14 | மு/அம்பகாமம் அ.த.க.பா. | III |
| 15 | மு/காதலியார் சமணங்குளம் அ.த.க.பா. | III |
| 16 | மு/புலுமச்சிநாதகுளம் அ.த.க.பா. | III |
| 17 | மு/பேராறுதமிழ் வித்தியாலயம். | III |

**திரு.பொ.ரவிச்சந்திரன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்.**

(சி.24561)(13.18)


### தேவை

**உதவி விடுதி மேற்பார்வையாளர்**

**மேற்படி பதவிக்கு 35 - 55 வயதுக்கு இடைப்பட்ட அனுபவம் வாய்ந்த க.பொ.த. (உ/த) கற்ற பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 15.08.2016 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கப் பெறக்கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.**

**அதிபர்,**
**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாட்டு நீதிபதிகள் எனும் தமிழரின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டும்

## மாவை சேனாதிராசா எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஓக. 8

போர்க்குற்றங்களுக்கு, மனித உரிமை மீறல்களுக்கு பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணை வேண்டும் என்றே மக்கள் கருத்தறியும் நல்லிணக்க செயலணியிடம் தமிழ் மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். தமிழ் மக்களின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உண்மைகள் கண்டறியப்பட்டு பொறுப்புக்கூறல் உரிய முறையில் நடைபெற்று பாதிக்கப்பட்ட மக் களுக்கு நீதி கிடைத்தால்தான் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும்.

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. போர்க்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக் கண்டறியும் அலுவலகத்தை எவ்வாறு அமைப்பது என்பன தொடர்பில் மக்கள் கருத்தறியும் நல்லிணக்க செயலணி' யால் தற்போது வடக்கில் மக்களிடம் கருத்தறியப்பட்டு வருகின்றது. இந்த அமர்வுகளில் பங்குபற்றும் மக்கள் போர்க்குற்ற விசாரணையிலும், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக் கண்டறியும் அலுவலகத்திலும் சர்வதேச நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும் என்றும், உள்நாட்டு நீதிபதிகளில் தமக்கு சிறிதளவேனும் நம்பிக்கை இல்லை எனவும் தெரிவித்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், தாம் பட்ட துன்ப துயரங்களை தற்போது நல்லிணக்கச் செயலணி அமர்வுகளில் பகிரங்கமாகவே வெளிப்படுத்தி வருகின்றனர். நடந்தேறிய போர்க்குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் சர்வதேச விசாரணையே வேண்டும் எனவும் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். உள்நாட்டு விசாரணையில் அவர்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்.

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைக் கமைய சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை அரசு உடன் அமைக்கவேண்டும். அந்த விசாரணை மூலம்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும். எமது இந்த நிலைப்பாடு தொடர்பில் சர்வதேச பிரதிநிதிகளிடம் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்" என்றார். (ற-4)

# புதிய சட்டம் உருவாக்கியாவது திருடர்களைப் பிடிக்க வேண்டும்

*பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வலியுறுத்து*

கொழும்பு, ஓக. 8

புதிதாக நீதிமன்றங்களை அமைத்தோ அல்லது புதிய சட்டங்களை உருவாக்கியோ திருடர்களை சட்டத்தின் முன் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சமூக நலத்துறை பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மேம்பாட்டு நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியும் பிரதமரும் ஜனவரி 8 ஆம் திகதி விமான நிலையத்தை மூடி திருடர்களை வெளிநாடு தப்பிச் செல்ல விடாமல் பிடிப்போம் என்று உறுதியளித்தனர். இவ்வாறு திருடர்களிடமிருந்து பெறப்படும் சொத்துக் களை அரசுடமையாக்கப்படும் எனவும் கூறினர்.

திருடர்களை சிறையில் இட்டு விசாரணை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வது அரசியல் பழிவாங்கல் அல்ல. இவை தேர்தல் வாக்குறுதியாகும்.– என்றார். (ற-4)

உ
"மாவடி நாதம் " பாகம் II
பக்திப் பாடல்கள் வெளியீட்டு விழா
இடம் : மீசாலை மாவடிப்பிள்ளையார் ஆலய திருமண மண்டபம்
காலம்: 09.08.2016 செவ்வாய் பி.ப 2.30 இற்கு
(கொடியேற்ற உற்சவத்தன்று)
பாடலாசிரியர்: மிருசுவில் தமிழ்தாசன்
இசை: ஈழ நல்லூர் ஜெகதீஷ் - அருணா
பாடகர்கள்: S.G. சாந்தன், சுகுமார், பேராசிரியர் சண்முகலிங்கன் இன்னும் பலர்
அனைவரும் வருக! ஐங்கரன் அருள் பெறுக!
விழா அமைப்பு:
ஆலய இளம் தொண்டர்களும்,
புலம் பெயர் தொண்டர்களும்
விளம்பர அனுசரணை:
நியூ கஜானன் பன்முக சேவை
மீசாலை.

## சு.க. தேசிய மாநாட்டுக்கு மகிந்தவுக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 8

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு மகிந்த ராஜபக்சவுக்கும் அழைப்பு விடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் என்ற வகையில் மகிந்தவுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு செப்ரெம்பர் 4 ஆம் திகதி குருநாகலில் நடைபெறவுள்ளது. அதில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற-4)

# அனுமதிக்கப்பட்ட அளவை விடவும் ஆயுள்வேத மருந்துகளில் அதிக மது

## சோதனைகள் நடத்த சுகாதார அமைச்சு முடிவு

கொழும்பு, ஓக. 8

மருந்துப் பொருள்களில் சுகாதார அமைச்சு அனுமதித்த அளவை விட அதிகளவு மதுபானத்தை பயன்படுத்தும் ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிறுவனங்களை சோதனையிட சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆயுள்வேத மருந்துப் பொருள்களுக்கு 4.5 வீத மதுபான சேர்க்கைக்கு சுகாதார அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதைவிட அதிகள விலான மதுபானம் சில ஆயுள்வேத மருந்துப் பொருள்களுக்கு சேர்க்கப்படுகின்றது என்று சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சில ஆயுள்வேத மருந்துப் பொருள்களில் 10 வீதத்தை விடவும் அதிகளவில் மதுபானம் சேர்க்கப்பட்டுள்ளது என்று பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதைக் கண்டறிய சுகாதார அமைச்சால் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ற-4)

# உயர் கல்வி அபிவிருத்திக்கு விசேட வேலைத் திட்டங்கள்

## இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரோ தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 8

நாட்டின் உயர்கல்வித் துறையில் விரிவான அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட விசேட வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரோ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உயர்கல்வித் துறைக்கு தகுதியான கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப் படவுள்ளது. இதற்காக விசேட ஆணைக் குழுவொன்றும் நியமிக்கப்படவுள்ளது. அதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சுயாதீன நிறுவனம் என்ற ரீதியில் செயற்படும் இந்த நிறுவனத்தின் மூலம் எதிர்காலத்தில் நாட்டின் உயர்கல்வி நிர்வகிக்கப்படும். பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 10 வீதத்தினால் அதிகரிக்கப்படும். பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது கல்விக்கான கால எல்லையை குறைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பல்கலைக்கழக மாணவர்கள் 6 ஆயிரம் பேருக்கு தங்குமிட வசதிகள் வழங்குவதற்கான 15 விடுதிகள் அமைக்கப்படும். அதற்கென 345 கோடி ரூபா ஒதுக்கப்படும். பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வாக தொழிற் சந்தையை இலக்காகக் கொண்ட புதிய கற்கை நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது – என்றார். (ற-4)

வாணி ரெக்ஸின்
விசேட ஆடித்தள்ளுபடி விற்பனை

வாணி ரெக்ஸ்ரைலின்
ஆடிமாதத்தை
முன்னிட்டு

விசேட ஆடித்தள்ளுபடி
16.07.2016 தொடக்கம் 16.08.2016 வரையிலான காலப்பகுதியில் சகலவிதமான ஆடைகளுக்கும் 10% தொடக்கம் 30% வரையிலான அசத்தலான விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
எமது அனைத்து வாடிக்கையாளர்களும் தங்களுக்குத் தேவையான சகல ஆடைத் தெரிவுகளையும் பெற்று விசேட ஆடித்தள்ளுபடியினை அள்ளிச் செல்லுங்கள்

Vani Tex
No.81, Grand Bazaar, Jaffna.
Tell: 021 222 5578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபவனியில் கலந்துகொண்ட சிறுவன் தொடர்பில் விசாரணை

## நாமலிடம் வாக்குமூலம் பெறவுள்ளது பொலிஸ்

கொழும்பு, ஓக. 8
கூட்டு எதிர்க்கட்சியின் நடைபவனியில் கலந்து கொண்ட சிறுவன் குறித்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் ஜனக பண்டாரதென்னகோன் ஆகியோரிடம் குறித்த சிறுவன் தொடர்பில் பொலிஸார் வாக்கு மூலம் பதிவு செய்ய உள்ளனர்.
கடந்த மாதம் 28 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் கண்டியிலிருந்து கொழும்பை நோக்கி நடைபவனியில் ஈடுப்பட்டனர். தொடர்ந்து 5 நாள்கள் இடம்பெற்ற இந்த நடைபவனியில் நிட்டம்புவ பகுதியில் வைத்துச் சிறுவன் ஒருவனை நடைபவனியில் ஈடுபட வைத்தமை குறித்துச் சர்ச்சை ஏற்பட்டது.
குறித்த சிறுவன் தொடர்பில் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு சிறுவர்களை அரசியல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது குற்றமாகும் என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.
நாமல் ராஜபக்ச மற்றும் ஜனக பண்டாரதென்னகோன் ஆகியோரிடம் சிறுவனை அடையாளம் காணும் பொருட்டு வாக்கு மூலம் பெறப்படவுள்ளது. ஊடகங்களில் பயன்படுத்தப்பட்ட காணொலி ஆதாரங்களைக் கொண்டு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ற-4)

# உள்ளூராட்சித் தேர்தலில் கைச் சின்னத்தில் சு.க.

கொழும்பு, ஓக. 8
சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
வடக்கு, கிழக்கிலுள்ள சில தமிழ் கட்சிகள் உட்பட 13 கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட இணக்கம் தெரிவித்துள்ளன.
இவ்வாறு அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி கைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. மக்கள் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சின்னமான கைச் சின்னத்தையும் நீல நிறத்தையும் இன்னும் மறக்கவில்லை. கிராமப்புறங்களிலுள்ள மக்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கைச் சின்னத்தில் போட்டியிடுவதையே விரும்புகின்றனர் - என்றார். (ற-4)




## கண்ணீர் அஞ்சலி

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி முகாமையாளராக கடமையாற்றும் **பொன்னையா சுரேஸ்குமார்** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **செல்லம்மா பொன்னையா**

அவர்கள் 05.08.2016 காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்வின் எழுச்சி முகாமையாளர் சங்கம்**
**யாழ். மாவட்டம்** (என்.106) (13.18)


# க.பொ.த. உயர் தரப் பரீட்சை தொடர்பில் 40 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 8
க.பொ.த. உயர் தரப் பரீட்சை யில் இடம்பெற்ற சட்ட மீறல்கள் தொடர்பில் 40 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம்.என்.ஜே. புஷ்ப குமார தெரிவித்தார்.
பரீட்சார்த்திகள் தொடர்பிலேயே முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், அவை தொடர்பில் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.
கடந்த வருடம் இடம்பெற்ற சட்ட மீறல்கள் தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளை விசாரணை செய்தபின்னர் 150 மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் ரத்துச் செய்யப்பட்டன என்றும் ஆணையாளர் சுட்டிக்காட்டினார். (ற-4)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகேசு சண்முகம்
திதி: பூர்வபக்க சஷ்டி

தோற்றம் 18.04.1926 — மறைவு 15.08.2010

ஆறாத துயர் தந்து சென்று
ஆண்டுகள் ஆறு ஆனது- ஐயா
வேறாகி நீங்கள் சென்றிட்ட போதும்
வேறாது உங்கள் அன்பிட்ட அறிவுரைகள்
யாரோடு நாம் சேர்ந்து வாழ்ந்தாலும்
யாதும் ஊர்போற்றும் உங்கள் உறவாமோ

**குடும்பத்தினர்.**
57, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



## கலையாத நினைவுடன் கலைந்த பதினைந்தாண்டுகள்



அமரர் **வயிரமுத்து வரப்பிரசிங்கம்**
(ஓய்வு பெற்ற அஞ்சலக ஊழியர்- கொல்லங்கலட்டி தெல்லிப்பழை)

திதி: பூர்வபக்க ஷஷ்டி (08.08.2016)

அன்னையின் மடியில் 07.09.1940
ஆண்டவன் அரவணைப்பில் 26.07.2001

குடும்பத்தின் குலவிளக்காய், பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய், ஊருக்கோர் எடுத்துக்காட்டாய் எம்மை வளர்த்த அப்பாவே! எமைத் தவிக்க விட்டுச் சென்று பதினைந்தாண்டுகள் மறைந்ததே அப்பா! எங்கள் உடலில் உயிர் இருக்கும் வரை உங்களை நம் உள்ளங்களில் நிறுத்தி வைத்திருப்போம் - உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
கொல்லங்கலட்டி தெல்லிப்பழை.
தற்காலிக முகவரி:
கலையோடை அம்மன் வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி இந்திராணி இராசரத்தினம்

தோற்றம் 23.08.1942 — மறைவு 22.07.2015

திதி: வளர்பிறை ஷஷ்டி- (08.08.2016)



வஞ்சனை இல்லா உள்ளம்
யாவர்க்கும் உதவிடும் குணம்
வேசமில்லா நேசந்தந்த ஞானம்
வீட்டுக்கொரு பெருவிருட்சம் என்று
உம் நிழலில் நாம் ஆற
கடமை முடிந்தது என்று காலைப்பொழுதில்
பாசக்கயிறு வீசிப் பறித்து சென்றதேனோ?
விழிகசிந்து இங்கு வேதனையில் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இணுவில் கிழக்கு, இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை இராணுவம் வைத்திருப்பதால் விவசாயம் செய்யமுடியாத அவலநிலை

## நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் கொய்யாக்குளம் பகுதி விவசாயிகள்

முல்லைத்தீவு, ஒக.8
முத்துஐயன்கட்டு, கொய்யாக்குளம் பகுதியில் உள்ள 500 ஏக்கர் விவசாயக் காணிக்கு செல்லும் கற்குளம் வீதியில் இராணுவம் முகாமிட்டுள்ளது. விவசாயக் காணிகளுக்குச் சென்று விவசாயம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு காணி உரிமையாளர்களான விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டது கொய்யாக்குளம். அங்குள்ள 500 ஏக்கர் விவசாயக் காணிகளுக்குச் செல்லும் வீதி போரின் பின்னர் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டது. வீதியின் இரு மருங்கும் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். அந்த வீதி மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது. முகாமுக்குச் செல்லும் இராணுவத்தினர் மட்டுமே அந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். அதனால் மக்கள் விவசாயக் காணிகளுக்குச் சென்று விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

எங்கள் காணிக்கு செல்லும் வீதியை இராணுவத்தினர் மறித்து வைத்துள்ளனர். அதனால் விவசாயம் செய்ய முடியாது மிகவும் வறிய நிலையில் வாழ கட்டாயப்படுத்தப்பட்டுள்ளோம். இது குறித்து மனித உரிமைகள் ஆணைக் குழு, கண்காணிப்புக் குழு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் எனப்பல இடங்களுக்கும் கடந்த 7 ஆண்டுகளாக அறிவித்தோம். எந்தப் பயனும் இல்லை.

எங்களின் பூர்வீகக் காணிகளுக்கு செல்லும் கற்குளம் வீதியின் இருமருங்கிலும் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். அந்த வீதி மட்டுமே எமது காணிகளுக்குச் செல்வதற்கான வீதி. மாற்றுவழி என்றால் நீர்ப்பாசனக் குளமான கொய்யாக் குளத்துக்குள்ளாகவே செல்ல வேண்டும். அது சாத்தியமற்றது எமது காணிகளுக்குச் செல்லும் வீதியைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

> வீதியின் இரு மருங்கும் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். அந்த வீதி மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது. முகாமுக்குச் செல்லும் இராணுவத்தினர் மட்டுமே அந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக எமது பூர்வீகக் காணிகளில் விவசாயம் செய்து வந்த நாம் தற்போது குத்தகைக்குக் காணிகள் எடுத்தே விவசாயம் செய்து வருகின்றோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். காணிகளை ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தை அகற்ற கால தாமதம் ஏற்படும் என்றால் வீதியைப் பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுத்தர வேண்டும். விவசாயமே எமது வாழ்வாதாரம். நாம் விவசாயத்தை மேற் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலராக கடமையேற்று குறுகிய காலம்தான் ஆகின்றது. இது வரை இந்த வீதி தொடர்பான முறைப்பாடுகள் எவையும் எனக்குக்கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் முறைப்பாடு செய்தால் இது குறித்து நடவடிக்கை மேற் கொள்ள முடியும் - என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அனுருத்தன் தெரிவித்தார். (ற-21,ரி7)

### ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

சாவகச்சேரி, ஒக. 8
**சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்று** கூடலும் கௌரவிப்புகளும் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஒரே ஆண்டில் கூட்டுறவு பரிசோதகர்களாக நியமனம் பெற்ற 48 பேரில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களாக கடமையாற்றிய நால்வர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.மோகன் முதன்மை விருந்தினராகவும், ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களான வி.கே.அருந்தவநாதன், சு.கணேஸ் இ.பாலச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகவும் கலந்து கொண் டனர்.

நிகழ்வில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர் களின் பிள்ளைகள்,சங்க கிளைக்குழு உறுப்பினர்களில் மூத்த உறுப்பினர்கள் சங்கப் பணியிலிருந்து ஓய்வுபெற்றமற்றும் விலகிய பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ற-9)

### இறுவட்டு வெளியீடு

சாவகச்சேரி, ஒக.8
மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய ' மதவடி நாதம்' பாகம் 11 இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை பி.ப. 2.30 மணிக்கு ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும்.

ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசியுரையை பிரம்ம ஸ்ரீ சிறி காந்தக் குருக்களும், சிறப்பு ஆசியுரையை நல்லை. திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்துவர். பாடல்கள் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் நிகழ்த்துவார்.

இறுவட்டின் முதற் பிரதியை கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் சமூகமாமணி அ.கிருபாகரன் பெறுவார்.

மிருசுவில் தமிழ்தாசனால் உருவாக்கப்பட்ட பக்திப் பாடல்களை இசையமைப்பாளர் அருணா மற்றும் ஜெகதீஸ் அருணா ஆகியோரின் இசையமைப்பில் எஸ்.ஜீ.சாந்தன் ஜே.ஆர்.சுகுமார், பேராசிரியர் நா.சண் முகலிங்கன் உட்பட பலர் பாடியுள்ளனர் 'மாவடி நாதம் பாகம் 1' கடந்த வருடம் ஆலய தேர்த் திருவிழாவின் போது வெளியிடப்பட்டது. (ற-9)


### ஒலிபெருக்கி சாதனங்கள் திருட்டு

தென்மராட்சி, ஓக.8
ஆலயத்தினுள் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்களை அபகரித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாணப் பிள்ளையார் ஆலயத்தில் நடந்துள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த வருடமும் இதே காலப் பகுதியில் ஆலயத்தில் நுழைந்த திருடர்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்த விலை உயர்ந்த மின்குமிழ்களை களவாடிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் சரவணபவன் அறக்கட்டளையால் வடமராட்சிக் கல்விவலயத்தைச் சேர்ந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நேற்று நடத்தப்பட்டது. வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 82 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் பரீட்சையில் தோற்றினர். (ற-108)

### பழுதடைந்த வீதி விளக்குள் மாற்றம்

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் பழுதடைந்த வீதி விளக்குகள் மாற்றப்பட்டன. மின்சார சபையால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா இன்று ஆரம்பமாவதை முன்னிட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ற-17)

# தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லும் மாணவிகளிடம் இளைஞர்கள் சேஷ்டை

## பொலிஸார் நடவடிக்கை எடுக்குமாறு தாண்டிக்குளம் மக்கள் கோரிக்கை

வவுனியா, ஓக.8
வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில்உள்ளதனியார்கல்விநிலையங்களுக்குச் சென்று வரும் மாணவிகளிடம் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் கலாசார சீர்கேடான முறையில் நடந்து கொள்கின்றனர். இது குறித்துப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தாண்டிக்குளம் பகுதியை சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

வவுனியா தாண்டிக்[illegible] பகுதியைச் சேர்ந்த மக்களுக்காக வவுனியா பொலிஸாரால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை யில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு கோரினர்.

தனியார்கல்விநிலையங்களை அண்மித்த பகுதியில் மாலை வேளையில் இளைஞர்கள் மாணவிகளின் மீது கலாசார சீர்கேடான முறையில் நடக்க முட்படுகின்றனர். இது தொடர்பாக மாணவிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். பெற்றோர்கள் [illegible] வீண் சண்டைகள் ஏற்படுகிறன. இதனைத் தவிர்க்க தனியார் கல்வி நிலையங்களை அண்மித்த பகுதியில் மாலை வேளை பொலிஸார் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் – என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நடமாடும்சேவைவவுனியாதாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் கண்சிகிச்சை, மருத்துவ சிகிச்சைகள், பிரதேச செயலக நடமாடும் சேவை, பொலிஸ் நிலைய நடமாடும் சேவை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டுபயன்பெற்றனர் பிரமண்டு பகுதி கிராமசேவகர், வவுனியா நகர சபை செயலாளர் கா.உதயராசா, வடக்குமாகாண பொதுமக்கள் சேவைக்கான மூத்த பொலிஸ் அதிகாரி கணேசநாதன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெனாந், வவுனியாபொலிஸ்நிலைய அதிகாரி சோமரத்ன, வவுனியா முன்னாள் உப நகரபிதா, மத தலைவர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (ற-21,402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதச் சார்பற்ற அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினால் வன்முறை நடக்காது

## மக்கள் கருத்தறியும் செயலணியிடம் சாவகச்சேரி மக்கள் கருத்து

தென்மராட்சி, ஓக.8
மதச் சார்பற்ற அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டாலே நாட்டில் மதங்களால் பரவும் வன்முறைகள் நிறுத்தப்படும். தனி மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாலே சந்திகளில் ஏட்டிக்குப் போட்டியாக விக்கிரகங்களை வைக்கும் நிலை உருவாகிறது. ஒரு சந்தியில் கணபதி சிலை வைத்தால் மறு சந்தியில் புத்தர் சிலை வைக்கப்படுகிறது. முன்னைய அரசமைப்புகளில் மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதால் மதம் சார்பான வன்முறைகள் எழுகின்றன. புதிய அரசமைப்பில் மதம் தொடர்பான எந்தவொரு அம்சத்தையும் சேர்க்கக்கூடாது.

இவ்வாறு சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நல்லிணக்கச் செயலணியிடம் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:
கீரிமலை இந்துக்களின் புனித தலம்என்பதுஎல்லோரும்அறிந்த விடயம். அங்கு மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு முன்வந்துள்ளது. அதன் உள்நோக்கம் மதவாதமே எனக் கூறலாம். புனிதப் பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்ட கீரிமலையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது இந்துக்களின் மனதுக்கு வேதனை தரும் செயற்பாடாகும். ஏனைய மதங்களை எவரும் புண்படுத்தக்கூடாது. அவரவர் தமது மதத்தைப் பின்பற்ற வாய்ப்பளிக்கவேண்டும். அரசின் தற்போதைய செயலானது இந்து மதத்தவரை அவமதிக்கும் செயலாகும்.

> கீரிமலை இந்துக்களின் புனித தலம் என்பது எல்லோரும் அறிந்த விடயம். அங்கு மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு முன்வந்துள்ளது. அதன் உள்நோக்கம் மதவாதமே எனக் கூறலாம். புனிதப் பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்ட கீரிமலையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது இந்துக்களின் மனதுக்கு வேதனை தரும் செயற்பாடாகும்.

கீரிமலையிலிருந்து குறைந்த அளவு தூரத்தில் மயிலிட்டி இறங்குதுறை உள்ளது. அது நீண்ட காலமாக அந்தப் பகுதி கடற்றொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டது. இடம்பெயர்வு காரணமாக தற்போது அது பாவனையில் இல்லை. போர் முடிந்துள்ள நிலையில் அதைப் புனரமைத்து வழங்க அரசு ஏன் பின்னடிக்கின்றது. அந்தப் பகுதியில் மீள்குடியமர்வு இடம்பெற்று வரும் நிலையில் இறங்குதுறை புனரமைக்கப்பட்டால் மக்கள் பயன்பெறுவர்.

காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்கு கற்கள் எடுப்பதற்காக அங்குள்ள அரச காணிகளில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு அந்த இடங்கள் பள்ளங்களாக மாறியுள்ளன. அவற்றுக்கு மண் போட்டு மூடி படையினர் முகாமிட்டுதனியார் காணிகளைக் கையளிக்கலாம். சதுப்பு நிலமான பகுதியில் மண் போட்டு நாடாளுமன்றம் அமைக்க முடியுமாயின் இதுவும் சாத்தியமே.

நாட்டில் இரு மொழிகளைப் பேசுவோர் உள்ளனர். மொழி புரியாததால் பல பிரச்சினைகள் இங்கு உருவாகியுள்ளன. படையினரால் பிடித்துச் செல்லப்பட்டபோது ஒருவர் மொழி ஒருவருக்கு புரியாததால் அநியாய உயிரிழப்புகள் ஏற்பட்டன. நாட்டில்உள்ள அனைவருக்கும் இரு மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும் என்பது அரசமைப்புச் சட்டத்தில் உருவாக்கப்படல் வேண்டும். தத்தமது தேவைகளை தத்தமது மொழிகளில் மேற்கொண்டாலும் இரு மொழிகளும் தெரிந்திருப்பது அனைவருக்கும் பயன் தரக்கூடியது.

அதிகாரப் பகிர்வு அரசமைப்பில் அவசியம் தேவை. வழங்கப்பட்ட அதிகாரங்களைத் திருப்பி எடுத்து, அதிகாரங்கள் ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருப்பது பாதகமாக உள்ளது.

போர் நடைபெற்ற காலத்திலும் அதன் பின்னரும் எந்தவொரு தேவைக்கும் கொழும்புக்குச் செல்லும் நிலை தமிழ் மக்களுக்குத் தொடர்கிறது. அது தவிர்க்கப்படல் வேண்டும். அங்குள்ள அலுவலகங்களில் கடமையாற்றுவோரில் பெரும்பான்மையினர் சிங்கள மொழி பேசுபவர்களாக உள்ளனர். அதனால் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான அலுவலகங்கள் தமிழ்மொழி பேசும் இடங்களிலும் அமைக்கப்படுவது அவசியம்- என்றனர்.(ற-9)

## நூல்கள் ஆவணக் காப்பகம் அமைக்க நடவடிக்கை

அச்சுவேலி, ஓக.8
வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேசசெயலகங்கள் தோறும் பிரதேச செயலக பிரிவு வாரியாக வெளிவந்த நூல் ஆக்கங்கள் ஆவணப்படுத்தப்படவுள்ளன. நூல்களைக் கொள்வனவு செய்வதற்கும் ஆவணக் காப்பகங்களை அமைப்பதற்கும் உரிய நிதியை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஒதுக்கீடு செய்து பிரதேச செயலகங்களுக்கு வழங்கியது. நூல்களை கொள்வ னவு செய்வதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலர்கள், கலாசார அலுவலர்கள் ஊடாக மேற்கொண்டனர்.

வடபகுதியில் வெளிவரும் நூல்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படாததையும், தேவைகளுக்கு அவற்றைப்பயன்படுத்த முடியாததையும் கருத்திற்கொண்டு நூல்களை நூல் ஆசிரியர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள், பதிப்பாசிரியர்களிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு கொள்வனவு செய்வதற்கும், நூல்களுக்கான பெறுமதியை (விலையை) வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ற-11)

## திணைக்கள அனுமதியின்றி மரக்கன்று விற்பனை

யாழ்ப்பாணம், ஓக. 8
யாழ். மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தின் அனுமதியின்றி தனியார் நிறுவனம் ஒன்று கிராமங்களுக்குச்சென்று மரக்கன்றுகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று யாழ்ப்பாண பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அந்த நிறுவனத்துக்கும் எமக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அத்துடன் இந்த விற்பனையில் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணை, ஆலோசனையுடனும் மேற்கொள்ளப்படுகின்றது என்று பொய்ப் பரப்புரையிலும் ஈடுபட்டனர்.

இதனைக் கருத்திற் கொண்டு மக்கள்விழிப்புடன்இருக்கவேண்டும். இதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு விவசாயத்திணைக்களம் பொறுப்பு இல்லை- என்று அவர் தெரிவித்தார். (ரி)

## தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 8
நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தினரால் தெய்வீக இசையரங்கு நடைபெறவுள்ளது என அதன் செயலாளர் தெரிவித்தார்.

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும் இந்த தெய்வீக இசையரங்கானது நல்லூர் உற்சவ காலங்களில் தொடர்ந்து 27 நாள்களும் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெறும் என அவர் குறிப்பிட்டார். (ற-ரி)





யாழ். சென் பீற்றர் கில்நர் முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. மழலைகளின் விளையாட்டு நிகழ்வுடன் பெற்றோர்களுக்கான விளையாட்டுக்களும் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியில் வெற்றியீட்டிய மழலைகளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ற-10)

## முன்னாள் போராளிகளுக்கு பெண் கொடுக்க அஞ்சும் நிலையே உள்ளது

மக்கள் கருத்தறியும் செயலணியிடம் தாய் ஒருவர் கருத்து

யாழ்ப்பாணம், ஓக. 8
முன்னாள் போராளிகளுக்கு பெண் கொடுக்க பெற்றோர் அஞ்சும் நிலமையே தற்போதும் தொடர்கின்றது. இவ்வாறு நல்லிணக்க பொறிமுறைக்காக மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வில் கலந்து கொண்ட தாய் ஒருவர் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் செயலணியின் அமர்வு நடைபெற்றது.

அவர் தெரிவித்ததாவது:
முன்னாள் போராளிகளுக்கு பெண் கொடுக்க பெற்றோர் தற்போதும் அஞ்சும் நிலமையே தொடர்கின்றது. ஏனெனில் இவ்வாறு எனது பிள்ளையை திருமணம் செய்து கொடுத்த பின்பும் அவரை இராணுவம்மீண்டும்கைதுசெய்துவிடுமோ? அல்லது தினமும் விசாரணை என்றபெயரில் அலைக்கழிக்கப்படுவோமோ என்ற ஏக்கம் ஒருபுறம் உள்ளது.

மறுபுறத்தில் ஊசிக் கதை. புனர்வாழ்வு பெற்று வந்தவனுக்கும் இங்கு நித்திய வாழ்வு இல்லாத நிலமையே உள்ளது. இதில் எங்கிருந்து நல்லிணக்கம் உருவாகும்?. புனர்வாழ்வு பெற்று வெளியேறிய இளம்சமுதாயம்மனவிரத்தியிலேயே வாழ்கின்றது.- என்றார். (ற-101)

## மீனவர்கள் வாழ்வாதார அபிவிருத்தி முன்மொழிவை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 8
மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு யாழ்.மாவட்டத்தில்உலகவங்கியின்நிதியுதவியுடன் கடற்றொழில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்மொழிவுகளை இந்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்களம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் என்.பொன்னம்பலம் கடற்றொழில் அமைப்புக்களைக் கோரியுள்ளார். யாழ். மாவட்டத்தில் 120 கடற்றொழில் அமைப்புக்கள் இயங்குகின்ற போதும் இதுவரை 70 அமைப்புக்கள் மட்டும் முன்மொழிவுகளை அனுப்பியுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டால் அபிவிருத்தியில் பின்னடைவு ஏற்படும் என்பதால் முன்மொழிவுகளை விரைவாக அனுப்பி வைக்குமாறு அமைப்புக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அண்மையில் யாழ்.செயலகத் தில் நடைபெற்ற கடற்றொழில் அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்தில் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்புத் திருமணம் செய்வதால் நல்லிணக்கம் ஏற்பட்டுவிடாது

## மக்கள் கருத்தறியும் செயலணியிடம் கருத்துத் தெரிவித்த பெண் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.8
நல்லிணக்கத்துக்காக கலப்புத் திருமணம் செய்யுமாறு வடக்கு ஆளுநர் கூறுகின்றார். அவ்வாறு இடம்பெற்றால் நல்லிணக்கம் வராது. இனப்பிரச்சனையும் தீராது. ஓர் இனம் அழியும். ஓர் இனத்தை அழிப்பதற்காக பெரும்பான்மை இனம் இன்னுமோர் இனத்தைப் பயன்படுத்தியது. அதன் வெளிப்பாடே கிழக்கில் இருந்த சைவக் கோயில் இருந்த இடத்தில் ஆலயம் இடிக்கப்பட்டு இன்று இறைச்சிக் கடை நடத்தப்படுகின்றது.
இவ்வாறு போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை மற்றும் நல்லிணக்கப்பொறிமுறைக்கான மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வில் கருத்துத் தெரிவித்த சிவமனோகரி- செல்லத்துரை தெரிவித்தார்.
யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

> "தாஜுதீன் வழக்கைத் தோண்டித் தோண்டி நடத்தும் இந்த அரசு ஏன் பட்டானிக் ராசிக்கின் வழக்கை நடத்தவில்லை. அரசு தமது இலாபத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளது."

அவர் தெரிவித்ததாவது-
இந்த அரசு தமது இலாபத்துக்காகச் செயற்படுகின்றது. அவ்வாறான அரசிடம் மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியாது. தாஜுதீன் வழக்கைத் தோண்டித் தோண்டி நடத்தும் இந்த அரசு ஏன் பட்டானிக் ராசிக்கின் வழக்கை நடத்தவில்லை. அரசு தமது இலாபத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளது.
இளைஞர்கள் பாழாகுவதற்கு திவி எனப் புகுத்தப்பட்ட கல்விக் கொள்கையே காரணமாக அமைந்தது. அதற்கு நல்ல உதாரணம் சிவகுமாரன். பொறியியலாளனாக வரவேண்டிய ஒருவன் இந்தக் கொள்கையின் காரணமாகவே சயனைட்டை அருந்த வேண்டிய நிலை ஏற்பட்டது. வீதியில் நின்ற இராணுவம் பெண் பிள்ளைகளின் அடையாள அட்டையைப் பறித்து வைத்துக் கொண்டு ஜலவ்யூ என்றால் தான் தருவேன் என்றால் நல்லிணக்கம் எப்படி உருவாகும். இவற்றை எல்லாம் மாற்றி அமைப்பதன் மூலமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் - என்றார். (ந-10)

## மரத்தடிச் சந்தியில் ரவைகள் மீட்பு

திருகோணமலை. ஓக. 8
திருகோணமலை தலைமைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரத்தடிச் சந்தியில் உள்ள வளவொன்றில் இருந்து ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 54, எம்.எம் துப்பாக்கி ரவைகள் 2 என்பன நேற்றிரவு மீட்கப்பட்டன என்று திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மலசலகூடம் கட்டுவதற்காக வீட்டு உரிமையாளர் குழி தோண்டியபோதே இவை கண்டுபிடிக்கப்பட்டன.
சம்பவம் தொடர்பில் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-4)

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு புள்ளியிடல் இவ்வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கில் பயனுறுதி வாய்ந்த சேவைகளை வழங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் மாவட்ட மட்டம், மாகாண மட்டத்தில் கருவிப் பகுப்பாய்வு அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு புள்ளியிடப்படவுள்ளன.
வடமாகாண உள்ளூராட்சி அமைச்சால் இந்தத் திட்டம் உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மட்டத்தில் நடுவர் குழாம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
வடமாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா யாழ்ப்பாணம் உள்ளிட்ட 34 உள்ளூராட்சிச் சபைகளில் செயலாற்றுகையை மேம்படுத்துவது மற்றும் கருவிப் பகுப்பாய்வு என்பன இடம்பெற ஏற்பாடாகியுள்ளன.
வடமாகாண நடுவண் குழு இதற்கான புள்ளியிடல்களை இந்த வாரத்தில் இருந்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்று வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்தது. (ந-50)

## நாய்களைக் கட்டி பராமரிக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 8
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா இன்று ஆரம்பமாவதை முன்னிட்டு நல்லூர் ஆலயச் சூழலில் தூய்மை பேணும் பொருட்டு அந்தப் பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்கள் மற்றும் விலங்குளைக் கட்டி வைத்துப் பராமரிக்குமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். உமாசுதன் தெரிவித்தார்.
நல்லூர்ப் பிரதேசத்துக்கு உட்பட்ட நாய்களுக்குத் தடுப்பு மருந்தேற்றி மாநகர சபையில் பதிவு செய்து அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும். பொதுச்சுகாதாரப் பரிசோதகர் திடீர் பரிசோதனை செய்யும்போது அனுமதிப் பத்திரம் வைத்திருக்காத நாய்களின் உரிமையாளர்கள் மீது பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-ரி)



தென்மராட்சி வீட்டுத் திட்டப் பயனாளிகள் 45 தினங்களுக்குள் தமக்கு வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தைப் பூர்த்தி செய்யும் நிலையை எட்டியுள்ளனர். கடந்த ஜூன் மாதம் வீடுகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்குள் வேலைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென பிரதேச செயலகத்தினால் விடுக்கப்பட்ட அறிவுரைக்கமைய துரித கதியில் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## பூநகரிப் பிரதேசத்தின் தேவைகள் குறித்து மக்களைச் சந்தித்து ஆய்வு



கிளிநொச்சி, ஓக.8
கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் அந்தப் பகுதி மக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்துரையாடினர்.
நேற்றுமுன்தினம் பூநகரி, நல்லூரில் ஆலங்கேணிக் கிராமத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பூநகரிப் பிரதேச அமைப்பாளர் அ.ஐயம்பிள்ளை தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.
வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, ப. அரியரத்தினம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அ.வேழமாலிகிதன், மாவட்ட இளைஞர் அணித் தலைவர் சு.சுரேன், பூநகரி பிரதேச வட்டாரங்களின் அமைப்பாளர் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.
போக்குவரத்து, வீதிப்புனரமைப்பு, விளையாட்டுக் கழகங்களின் தேவைகள், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இராணுவத்தின் சட்டவிரோத காணி அபகரிப்புக்கள், மருத்துவப் பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (ந-21)

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விடிவு கிடைக்கப் பிரார்த்திப்போம்

### வாசுதேவக்குருக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 8
காணாமற்போனோர் வாழ்வுக்கு விடிவு கிடைக்கவும், இடம்பெயர்ந்தோர் சொந்த இடம் திரும்பவும், செல்வவளம் கொழிக்கவும் வேண்டி இன்று ஆரம்பிக்கும் நல்லூர் திருவிழாக் காலங்களில் வழிபாடு செய்யுங்கள்.
இவ்வாறு சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் தெரிவித்தார்.
இன்று நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
திருவிழாவுக்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் மக்கள் வழங்க வேண்டும். சைவத் தமிழ்க் கலாசாரத்துக்கு அமைய ஆலயத்துக்கு வர வேண்டும். கண்ணியமான உடைகளுடன் வருவது ஒவ்வொரு அடியவர்களுடைய ஒழுக்கம் சார்ந்த பண்பியல்பை எடுத்துக்காட்டுவதாக அமையும். முருகன் வீதியுலா வரும் திருவீதியில் பாதணிகளுடன் வருவது, அசுத்தம் செய்வது முதலிய வற்றைத் தவிர்ப்பதால் அங்கப்பிரதட்டை முதலான வழிபாடுகளைச் செய்யும் அடியார்களுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய தொண்டாக அமையும். வழிபாட்டுக்கு உதவுதல் என்பதே மிகப்பெரிய வழிபாடாகும்.
இன்று தமிழினம் அடிமைப்பட்டு பேசாமடந்தையர்களாக அநாதைகளாக நிற்கும் சூழல் உருவாகியிருப்பதைக் காணமுடிகின்றது. தத்தமது இருப்பிடம் செல்ல முடியாது தவிக்கும் மக்கள் வாழ்வுக்காக அனைவரும் ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்ய வேண்டிய தேவை ஒன்று இருக்கின்றது. அதாவது தமது உறவுகளைக் காண முடியாமல் பரிதவிக்கும், காணாமற்போனோர் வாழ்வுக்கு விடிவு கிடைக்கப் பிரார்த்திப்போம்.
நித்தமும் போராடி வாழ்வை நகர்த்தும் மீனவர்களது வாழ்விற்காகவும், நற்பண்புகள் நிறைந்த நல்லதொரு இளையவர் சமுதாயம் உருவாகவும், தமிழ் அரசியல் தலைவர்கள் கருத்து முரண்பாடுகள் அற்று தமிழினத்தின் விடுதலைக்காய் ஒன்றுபட்டு ஓர் அணியாய் நின்றிடவும், நிரந்தர அரசியல் தீர்வும் அமைதியும், சுதந்திரமும் கிடைத்திடவும் பிரார்த்திப்போம் - என்றார். (ந-ரி)



பொருளாதார ரீதியில் நலிந்த குடும்பங்களுக்கு வவுனியா கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களத்தால் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன. வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசாவின் பரிந்துரையின் அடிப்படையில் வேப்பங்குளம், பாலமோட்டை ஆகிய கிராமங்களில் வசிப்போருக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. ஒருமாத வயதுடைய கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் போக்கைத் தீர்மானிக்கும் சக்தியாக ஹெல உறுமய மாறும்

## அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, ஓக.8
2020ஆம் ஆண்டு நாட்டின் போக்கைத் தீர்மானிக்கும் சக்தியாக ஹெல உறுமயவே இருக்கும்.
இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் கலந்துகொண்டார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் தெரிவித்ததாவது:
நாடு தற்போது கடும் கடன் சுமையில் உள்ளது. முன்னைய அரசு வாங்கிய கடன்களை அடைக்கும் முயற்சியில் தற்போதைய அரசு ஈடுபட்டுள்ளது.
2020ஆம் ஆண்டு நாட்டின் போக்கைத் தீர்மானிக்கும் சக்தியாக ஹெல உறுமய இருக்கும். அப்போது எம்மிடம் புதிய திட்டங்கள் தயார் நிலையில் இருக்கும் - என்றார். (ற-4)

# நிதி நகரமாக மாறுகிறது துறைமுக நகரத் திட்டம்

கொழும்பு, ஓக. 8
சீனாவின் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் திட்டம், நிதி நகரம் என்று பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது. அதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு மார்ச் மாதம் இடைநிறுத்தப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை, மீண்டும் புதிய உடன்பாடு ஒன்றுக்கு அமைய ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இது தொடர்பாக சீனாவின் துறைமுக பொறியியல் நிறுவனத்துடன் அரசு புதிய உடன்பாடு ஒன்றைச் செய்யவுள்ளது.
துறைமுக நகரத்திட்டம் என்பதற்குப் பதிலாக, நிதி நகரம் என்று பெயர் மாற்றம் இடம்பெறவுள்ளது.
இது முற்றிலும் ஒரு நிதிக் கேந்திரமாகவே இருக்கும். நிதி நகரம் என்றபெயர் இடப்படுவதே பொருத்தமானது என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் பணியாற்றும் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். (ற-5)



நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஸபான தோட்டக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில், இரு குடியிருப்புக்கள் நாசமாகின. நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் தற்காலிகமாக ஆலய மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். வீட்டிலிருந்த உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என பெருமளவிலான பொருள்கள் தீக்கிரையாகின. (ற)

# இலங்கையில் கால் பதிக்கிறது பெரும் வங்கியான சீன வங்கி

கொழும்பு, ஓக. 8
உலகின் மிகப் பெரிய வங்கிகளில் ஐந்தாவது இடத்தில் உள்ள சீன வங்கி இலங்கையில் கால்பதிக்கவுள்ளது. சீன வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான தலைமையகம் கொழும்பில் அமைக்கப்படவுள்ளது.
சீனாவிலும், ஏனைய 41 நாடுகளிலும் இந்த வங்கி, கிளைகளைக் கொண்டிருக்கிறது.
தெற்காசியாவில், கொழும்பிலேயே முதலாவது வங்கிக் கிளை அமைக்கப்படவுள்ளது.
இந்த வங்கியை அமைப்பது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு, விரைவில் சீன அதிகாரிகள் குழு கொழும்பு வரவுள் ளது என்று கொழும்பில் உள்ள சீனத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
தற்போது கொழும்பில் அமைக்கப்படவுள்ள சீன வங்கியின் கிளை, துறைமுக நகரத் திட்டம் நிறைவடைந்த பின்னர் அங்கு மாற்றப்படும்.
இலங்கையில் மேற்கொள்ளப்படும் சீனாவின் முதலீட்டிலான திட்டங்களுக்கான நிதி இந்த வங்கியின் ஊடாகவே கையாளப்படவுள்ளது. (ற-5)

# இந்திய அம்புலன்ஸ் சேவையில் இலங்கையர் மட்டுமே பணியில்

## வெளிவிவகார பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 8
இந்திய அரசின் உதவியுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அம்புலன்ஸ் சேவையில் இந்தியர்கள் எவருக்கும் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை.
இவ்வாறு வெளிவிவகார பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.
இந்திய - இலங்கை நாடுகளுக்கிடையான புரிந்துணர்வு அடிப்படையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய இந்திய அம்புலன்ஸ் சேவைகள் கடந்த 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.
புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நோயாளர் காவு வண்டியின் செயற்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் நேற்றுமுன்தினம் விளக்கமளித்தார்.
இந்தச் சேவைகள் ஊடாக இலங்கையைச் சேர்ந்த 470 பேருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைத்துள்ளன என்று பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.



இந்தச் சேவையில் இணைவதற்காக இந்தியத் தூதரகத்தால் தெரிவு செய்யப்பட்ட இலங்கையர்கள் 200 பேர் அண்மையில் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. (ற-4)

## பாக். விமானப்படைத் தளபதி இலங்கை வந்தடைந்தார்

கொழும்பு, ஓக. 8
பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல்சொகைல் அமான் நேற்று இலங்கை வந்தார். அவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இலங்கை விமானப் படையின் தளபதி எயர் மார்ஷல் கஹன் புலத்சிங்கள வரவேற்றார்.
இந்தப் பயணத்தில் பிராந்திய பாதுகாப்புத் தொடர்பில் கலந்துரையாடப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
பாகிஸ்தானிடமிருந்து ஜே.எவ் 17 விமானக் கொள்வனவு தொடர்பில் இழுபறி நிலை காணப்படும் நிலையில் பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி இங்கு வந்துள்ளார்.
இந்தியாவின் கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில் ஜே.எவ். 17 போர் விமானக் கொள்வனவு தொடர்பான பேச்சு வார்த்தைகள் இடம் பெற்று வருகின்றது. (ற-4)

# நடைபவனி விவகாரத்தில் கடும் நடவடிக்கை இல்லை

## சு.க. பிளவுபட்டுவிடும் என்பதால்

கொழும்பு, ஓக.8
கூட்டு எதிர்க்கட்சியில் உள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாது என்று தெரியவருகின்றது.
கடும் ஒழுக்காற்று விசாரணைகள் எடுக்கப்பட்டால் அது கட்சியைப் பிளவுபடுத்திவிடும் என்பதைக் கருத்திற் கொண்டே கட்சியின் உயர்மட்டம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது.
நடைபவனியில் கட்சியின் ஒழுக்கச் சட்டங்களை மீறி நடந்தவர்களிடம் விளக்கம் கோரல் கடிதங்களுடன் சாதாரணமான அணுகுமுறையுடன் ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்க கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# சு.க. அமைப்பாளர்கள் 46 பேரின் பதவிகளுக்கு வருகிறது ஆபத்து

கொழும்பு, ஓக. 8
கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிராகவும், கட்சியின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் செயற்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 46 தொகுதி அமைப்பாளர்கள் அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
கூட்டு எதிர்க்கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனியில் பங்கேற்றவர்களே பதவி நீக்கப்பட உள்ளனர் என்று சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரைச் சுட்டிக்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.
கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய குறித்த 46 பேரும் நீக்கப்படவுள்ளனர் என்று கூறப்படுகின்றது.
கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது தொடர்பில் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த கட்சி உறுப்புரிமையில் இருந்து ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளார்.
கூட்டு எதிர்க்கட்சிக்குச் சார்பான கருத்துக்களை வெளியிட்டு வரும், நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட உள்ளது என்றும் சுதந்திரக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.
எந்தவொரு விசாரணையையும் எதிர்கொள்ளத் தாம் தயாரென பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார். (ற-4)

## யானைக் குட்டிக்கு பெயர் சூட்டிய மகிந்த

கொழும்பு, ஓக. 8
கொரியாவிலுள்ள இலங்கை யானைக்குக் கிடைத்த குட்டிக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 'கொரிலங்கா' எனப் பெயர் சூட்டினார்.
தென்கொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த அரசின் காலத்தில் பரிசாக வழங்கப்பட்ட இலங்கை யானைக்குக் கிடைத்த குட்டிக்கே பெயர் சூட்டினார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,216 பொலிஸாருக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு

### *பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 8

பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்காமை, தமக்குள்ள அதிகாரங்களைத் தவறாகப் பாவித்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் நாடெங்குமுள்ள ஆயிரத்து 216 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு பொலிஸ் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31 வரை கிடைத்த முறைப்பாடுகளில் 355 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்தார்.

> **ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளில் 70 சதவிகிதமானவை அதிகார துஷ்பிர யோகம் தொடர்பானவை. ஏனையவை கடமையை உதாசீனம் செய்தல், பக்கச் சார்பாக நடந்து கொள்ளல் போன்றவை பற்றியவை.**

அவர் தெரிவித்ததாவது-

ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளில் 70 சதவிகிதமானவை அதிகார துஷ்பிரயோகம் தொடர்பானவை. ஏனையவை கடமையை உதாசீனம் செய்தல், பக்கச் சார்பாக நடந்துகொள்ளல் போன்றவை பற்றியவை. கிடைத்துள்ள பல முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழுபொலிஸ் மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் 14ஆம் திகதி பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்பட்ட பின்னர் கிடைத்த 467 முறைப்பாடுகளில் 272 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன- என்றார். (ற-4)

## பாலம் அமைப்பது குறித்த எந்தத் திட்டமுமில்லை!

கொழும்பு, ஓக. 8

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் வகையில் பாலம் அமைக்கும் எந்தவொரு திட்டமும் இந்தியாவிடம் இல்லை. இந்தியத் தூதரக காரியாலயம் உத்தியோகபூர்வமாக இதனை நேற்று அறிவித்தது.

இவ்வாறு அமைச்சர் மனோ கனேசன் தெரிவித்தார்.

குறித்த விடயம் சம்பந்தமாக இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்த போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது என்று அமைச்சர் கூறினார். (ற-4)

## 2016இல் ரயிலில் மோதி 250 பேர் இதுவரை சாவு

கொழும்பு, ஓக. 8

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் ரயிலில் மோதுண்டு 250 பேர் உயிரிழந்தனர் என்று ரயில்வேத் திணைக்களம் தெரிவித்தது.

உயிரிழந்தவர்களில் அதிகமானோர் தற்கொலை செய்து கொண்டவர்கள் என ரயில்வே பாதுகாப்பு அத்தியட்சகர் அநுர பிரேமரத்ன தெரிவித்தார்.

சமிஞ்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள ரயில் கடவைப் பகுதிகளிலும் அதிகமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரயில் விபத்துக்களைத் தடுப்பதற்கான பல்வேறு வழிமுறைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-4)

## புகையிலை வரியைஉயர்த்த நடவடிக்கை

கொழும்பு, ஓக. 8

புகையிலைக்கான வரியை 90 வீதமாக உயர்த்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் கையெழுத்திடப்பட்டது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தலை மற்றும் கழுத்தில் ஏற்படும் புற்றுநோயை ஒழித்தல் தொடர்பில் தெளிவூட்டுவதற்காக கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார். (ற-4)

## அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க அரசியல் கைதிகளை விடுவியுங்கள்

### *அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் வலியுறுத்து*

கொழும்பு, ஓக. 8



தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமானால் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.

இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் செயற்பாட்டாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் வலியுறுத்தினார்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பார்வையிட்ட பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்காக அரசு எடுத்துக் கொண்ட காலம்போதுமானது. சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்ட நிலையில், படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதியான எம்.டில்ருக்சன் சாவுக்கு நீதிகோரி எதிர்வரும் 8ஆம் திகதி போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது- என்றார். (ற-4)

## சமுர்த்தி உதவிகள் கோரி 11 லட்சம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஓக. 8

சமுர்த்தி உதவிக் கோரி 11 லட்சம் பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர் என்று திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்தப் புதிய விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்று திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரா விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

தற்போது 14 லட்சம் பேர் சமுர்த்தி உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்களின் ஆவணங்களை மீள்பரிசீலனை செய்யும் நடவடிக்கை உலக வங்கியின் தொழிநுட்ப உதவியுடன் முன் னெடுக்கப் பட்டுள்ளது. மீள்பரிசீலனையின் பின்னர் சமுர்த்தி உதவிப் பெறுவோரின் பெயர்ப் பட்டியல் கிராம சேவகர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்படும். பின்னர் பெயர் பட்டியல் மீதான ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கான கால அவகாசம் வழங்கப்படும். உரிய தரவுகளின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப் பட்ட சமுர்த்திப் பயனாளிகளின் பெயர்பட்டியல் அறிவிக்கப்படும் – என்றார். (ற-4)



# முதலாம் திருவிழா

(கொடியேற்றம்)

## நானிலம் வாழ கொடிஏற்று

வணங்குவார் துயர் துடைக்க வந்த சாமி
வளர் நல்லூர் தலம் மேவும் கந்தசாமி
வில்லங்கம் வேரறுக்கும் வேலுச்சாமி
வீரியத்தைத் தந்தருளும் பொன்னுச்சாமி
குன்றங்கள் ஆடிவரும் குழந்தைச் சாமி
குறவள்ளி கரம்பிடித்த பழனிச்சாமி
நன்மைகளே பெருக அருள் நல்லைச்சாமி
நானிலம் வாழக் கொடி ஏற்று சாமி

– கா.கார்த்திகேசு (நல்லூர்)

## கொடியேறும் குமரா! விடையொன்று பகர்வாய்!

விடையேறும் உமைபாகன் வரமான சீரே
விரைகின்ற மயிலேறும் திருஞானப் பேறே
படைகொண்டு தேவர்தம் பகைதீர்த்த நேசா
பதியாறு தனிலாறிப் பயன்சேர்க்கும் ஈசா
தடை வந்த போதுவேல் வீசும் தேவே
தகை கொண்ட அடியாரின் தனை தீர்க்கும் கோவே
கொடியேறும் திருநல்லைப் பதிவாழும் குமரா
குலம் வாழ துயர் போக வழிகாட்டு முருகா!!

உடல் கண்டு உயிர் கொண்டு உறவாடும் போதும்
உளம்மட்டும் தடுமாறி அலைகின்ற சோகம்!
கடலுண்டு பயிர் செய்யும் களமுண்டு இன்னும்
கலையுண்டு அழகுண்டு ககனத்தில் முன்னர்
அடலேறு பெருவீரம் அழியாத செல்வம்
அடைந்திட்ட வரலாறும் மிகவுண்டு! அந்(தே)த(ர)
அடையாளம் இல்லாத பெரும்பாவி ஆனோம்
அழகான கந்தா நீ புது வாழ்வு தாராய்!!

- அனலையூர்ச் சேந்தன்.

## கொடியேறிடுவான் நல்லைக்குமரன்

நல்லை நகர் நாதனுக்கு இன்று கொடியேற்றம்
நானிலம் நயந்திடும் நல்லாட்சியிலே
கொடிய வினை களைந்திடவே கொடியேறிடுவான்
கோடான கோடி பக்தர் குறை தீர்த்திடவே.

க. தர்ஷினி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

நல்லைக்கந்தனுக்கு
இன்று (08.08.2016) திங்கட்கிழமை
கொடியேற்றத் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
டோனிகா நகைத் தொழிலகம்
82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 888 6191 (சி.24217) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்கு ஜனாதிபதி மதிப்பளிக்க வேண்டும்

சர்வதேச நீதிபதிகளின் முன்னிலையிலேயே போரின் இறுதிக் காலத்தில் நடந்தேறிய குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெறவேண்டும் என்பதை வடக்கில் இப் பொழுது நடைபெற்றுவரும் நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான மக்கள் கருத்தறியும் செயலணியினரின் முன் தோன்றி கருத்துத் தெரிவித்துள்ள தமிழ் மக்கள் பலரும் வற்புறுத்தியுள்ளார்கள்.

பொறுப்புக்கூறும் பொறிமுறையில் கலப்பு நீதிமன்றுக்கோ வெளிநாட்டு நீதிபதிகளுக்கோ ஒருபோதும் இடம்தரப் போவதில்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதியாகிய எனது நிலைப்பாடே நிரந்தரமானது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடாப்பிடியாக வற்புறுத்திவரும் நிலையிலேயே போரினால் ஏற்பட்ட எல்லாவித வலிகளையும் தமது உடல்களிலும் உள்ளங்களிலும் சுமந்து நிற்கும் தமிழ் மக்கள் வேதனையோடும் வினயத்தோடும் வெளியிட்டு வருகிறார்கள்.

விசாரணைப் பொறிமுறையானது பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தறிந்து நிறுவப்பட வேண்டும் என்ற விதிக்கமைவாகவே இப்போது இந்தக் கருத்தறியும் செயலமர்வுகள் நடை பெறுவதாகத் தெரிகின்றது. ஜனாதிபதியின் கருத்துத்தான் நிலையானது, அசைக்க முடியாதது என்றால் இந்தச் செயலமர்வு எதற்கு? எனவேதான் எல்லாவித விசாரணை ஆணைக்குழுக்களையும் போலவே இதுவும் ஒரு கண்துடைப்பாகத்தான் இருக்கப் போகின்றதா என்ற கேள்வி பெரிதாக எழுந்திருப்பதைப் பார்க்கிறோம்.

ஐ.நா.மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையின் அனுசரணையுடனேயே நிறைவேற்றப்பட்டது. இறுதிப்போர் தொடர்பான விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு அதாவது பொதுநலவாய மற்றும் ஏனைய நீதிபதிகள் இணைக்கப்படுவதையும் அத்தீர்மானம் உள்ளடக்கியிருந்தது. இந்தக் கருத்தை பிரதம மந்திரியும் வெளியுறவு அமைச்சரும் ஆரம்பத்தில் அனுசரித்தே கருத்துக்களை வெளியிட்டு வந்தார்கள். பின்னர் இந்த நிலைப்பாட்டிலிருந்து பிரதமர் மெதுவாக வழுவிச் செல்வது தெரிந்தது. இருந்தாலும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு இருக்கும் என்பதை வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் பல தடவைகளிலும் உறுதிபடக் கூறிவந்தார். ஜனாதிபதியின் கருத்து அவருடைய அபிப்பிராயம் மட்டுமே. அரசு ஒரு தீர்மானத்துக்கு வரவில்லை என்பதாகவும் சமரவீர கூறியதாக செய்திகள் உண்டு. ஆனால் அவரும்கூட வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறமாட்டார்கள். அவ்வாறு மனித உரிமைகள் சபை வலியுறுத்தவில்லை என்பதாக தலை குப்புற வீழ்ந்தது போன்று தமது கருத்தைமாற்றிக் கொண்டமையால் தமிழ் தரப்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்த பெரும் நம்பிக்கை சின்னாபின்னமாக்கப்பட்டது.


இவ்வாறான நிலையில் மக்களின் கருத்தறியும் செயல் அமர்வுகள் ஏன் நடத்தப்படுகின்றன? கருத்தறியும் குழுவிடம் தோன்றிய பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலும் அனைவருமே வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தி வருவதனால் அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். அதுவே நீதி நியாயம், தர்மம் ஏன் ஜனநாயகமும் கூட -

இல்லை, குற்றம் புரிந்த படையினரையும் முன்னாள் ஆட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான ஜனாதிபதியின் கூற்றுக்குத்தான் முக்கியத்துவம் என்றால் ஜனநாயகம் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. இவ்வாறான விசாரணைகளும் தேவையில்லை.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை அகற்றுவதாகக் கூறியே மைத்திரிபால சிறிசேன மக்கள் ஆதரவைப் பெற்று பதவிக்கு வந்தார். அந்த அதிகாரங்களில் சிலவற்றைக் குறைத்து 19 வது திருத்தம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின் நிறைவேற்று அதிகாரம் தொடர்பாக நாடாளுமன்றமே முடிவெடுக்க வேண்டும் என்று அவர் கூறிவருகின்றார். எஞ்சியுள்ள நிறைவேற்று அதிகாரங்களை வைத்துக் கொண்டு வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை மறுக்கும் ஜனாதிபதியால், தமிழ் அரசியல் கைதிகளை முற்றாக விடுவிக்க முடியவில்லை. ராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை முற்றாக மக்களிடம் திருப்பி கொடுப்பிக்க முடியவில்லை, இந்துக்களே பெரும் எண்ணிக்கையில் வாழும் பகுதிகளில் அடாத்தாக பௌத்த ஆலயங்கள் அமைப்பதைத் தடுக்க முடியவில்லை, பாரம்பரியமாக தமிழ் மீனவர்களின் தொழிலுக்குரிய பகுதிகளில் ராணுவ மற்றும் பொலிஸ் உதவியுடன் பெரும்பான்மையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகளை தடுக்கமுடியவில்லை. இவ்வாறு இன்னும் பலவற்றை அடுக்கிக் கொண்டு போகலாம். மகிந்த ராஜபக்சவுக்குப் பதிலாக மைத்திரிபால சிறிசேனவை பதவியில் அமர்த்தியபோது தமிழ்மக்கள் எவ்வளவோ எதிர்பார்ப்புக்களுடன் இருந்தார்கள். அவை அனைத்துமே நிராசைகள் தானா என்ற நிலைக்கு அவர்கள் இப்போது தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சூழ்நிலையில் தான் ஐ.நா. பேரவை விரைவில் கூடவிருக்கின்றது. அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா உட்பட பல உலகத்தலைவர்களுடன் இலங்கை ஜனாதிதி மைத்திரிபால சிறிசேனவும் உரை நிகழ்த்தவிருக்கின்றார்.

இலங்கையின் இன்றைய நிலைமைகள் குறித்து பேசும் போது, விசாரணைப் பொறிமுறைகள் குறித்தும் அவர் ஏதும் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்க முடியாது என்றாலும், புறநிலையில் இந்த விவகாரம் சூடாகவே அலசப்படும் என்று கூறத் தேவையில்லை. எனவே விசாரணை பொறிமுறையை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது குறித்த ஒரு தீர்க்கமான முடிவை எதிர் பார்க்கலாம். எதுவானாலும் கருத்தறியும் குழுவில் தமிழ் பொதுமக்கள் முன்வைக்கும் கருத்துக்கள் வெறும் விழலுக்கிறைத்த நீராகிவிடக் கூடாது என்பதே எமது அபிப்பிராயம்.



*தமிழ் மக்கள் பேரவையின் நேற்றைய கூட்டத்தில், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உரையாற்றியதாகத் தெரிவித்து அவரது அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட முழுமையான உரை*

எமது நடுவண் அரசும் பொறுப்புக் கூறல் சம்பந்தமான ஜெனிவாத் தீர்மானத்தின் நோக்கை மழுங்கடையச் செய்யத் தன்னாலான சகலதையும் செய்து வருகின்றது. அண்மையில் அரச செயலணி ஒன்றில் பதவி வகிக் கும் நண்பர் ஒருவர் கொழும்பில் இருந்து என்னைக் காண வந்தார். அப்போது ஒரு முக்கிய விடயத்தைத் தெரிந்து கொண்டேன். எப்படியாவது வரும் செப்ரெம்பருக்கு முன்னர் தமக்கு வேண்டிய மக்கள் சிலரின் மனங்களை அறிந்து அவற்றின் அடிப்படையில் புதிய அரசமைப்புக்கான விவரங்களைச் சேகரிக்க வேண்டும். அதன்பின் அவற்றின் அடிப்படையில் புதியதொரு அரசமைப்பு வரைவை அடுத்த மார்ச் மாதத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மார்ச் மாதம் வந்ததும் ஜெனிவாவில் எமது அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட இருப்பதாக அறிவித்தால் பன்னாடும் அதன் பின்னர் இலங்கை பற்றி அலட்டிக் கொள்ளாது. பொறுப்புக் கூறல் விடயத்தில் இலங்கை தப்பி விடலாம் என்பதே அவர் தந்த தகவல்.


அதாவது அரசியல் தீர்வு வந்து விட்டதே, இனி பொறுப்புக் கூறலில் வேகம் தேவையில்லை என்று கூறலாம் என்ற விதத்திலேயே அவரின் கருத்து அமைந்திருந்தது. எம்முள் சிலரும் இவ்வாறே சிந்திக்கின்றனர். அதாவது வருங்காலம் பற்றிச் சிந்திப்போம். சென்ற காலத்தை மறந்து விடுவோம் என்பது போல இந்தச் சிந்தனை அமைந்திருக்கின்றது. அவர்கள் மனதில் எழும் சில உள்ளார்ந்த வெறுப்புக்களும் இதற்குக் காரணமாய் அமைந்துள்ளன. சரியோ பிழையோ இயக்க இளைஞர்களின் தியாகமே எங்கள் குறைகளை உலகறிய வைத்துள்ளது என்பதை நாம் மறந்துவிடலாகாது. வெறும் சிறுபான்மையினரின் கிளர்ச்சியாகக் காணப்பட்ட எமது போராட்டம் வடகிழக்கின் பாரம்பரிய பெரும்பான்மையினரின் போராட்டமாகப் பரிணாமம் பெற்றதென்றால் அதற்கு அவர்களே காரணகர்த்தாக்கள் என்பதை நாங்கள் மனதில் கொள்ள வேண்டும். வருங்காலம் பற்றிச் சிந்திப்போம், சென்றகாலம் போய் விட்டது என்ற சித்தாந்தம் பற்றிய ஒருமுக்கிய குறையை நாங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது இந்த அரசோ எந்தப் பெரும்பான்மையின அரசோ தரப்போகும் அரசியல் தீர்வு எமக்கு முழுமையான திருப்தியை அளிக்கப் போவதில்லை.அவற்றை ஏற்பதென்றால், போனால் போகட்டும் என்ற வகையில்தான் நாம் அவற்றை ஏற்கக் கூடும். ஏனென்றால் தற்போது இருப்பதிலும் பார்க்க சில முன்னேற்றங்களையே அரசு ஆங்காங்கே முன் வைக்கும். உடனே எம்மவர்கள் 'பார்த்தீர்களா? முன்பிலும் பார்க்க இது முன்னேற்றம்தானே' என்பார்கள். அது சரியாக இருக்க லாம். ஆனால் எமது எதிர்பார்ப்புக்கள் அரசியல் ரீதியாக மேற்படி அரசியல் யாப்புக்களால் முற்றிலும் திருப்திப்படுத்தப்படப் போவதில்லை. எனவே பொறுப்புக் கூறலை நாம் தியாகம் செய்து விட்டு பெறுமதியான நிலையான தீர்வொன்றையும் அரசியல் ரீதியாகப் பெறமுடியாத நிலைமையே உருவாகும். அங்கும் தோல்வி இங்கும் தோல்வியாகவே முடியும்.

சிங்கள அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரையில் எந்த ஒரு சிங்கள மகனும் போரின் போது அவன்செய்த அட்டூழியங்களுக்காகத் தண்டனை அனுபவிக்கக் கூடாது என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல மற்றையவர்கள் பலருங் கூட எப்படியாவது போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தப்ப வைக்கவே பார்க்கின்றார்கள். வழக்குகளின் தீர்ப்புப் பற்றி அவற்றைப் பரிசீலிக்காமல் நாங்கள் எங்கள் கருத்துக்களை வெளியிடக் கூடாது. ஆனால் நடைமுறைகள் சில வற்றை நாங்கள் கருத்துக் கெடுக் கலாம். பல வருட காலத்தின் பின்னர் ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினர் அனைவரும் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார்கள்.காரணம் இன்னும் தெரியவில்லை. ஆனால் இன ரீதியாகச் சிந்திக்கக்கூடிய பெரும்பான்மை மக்களிடையே, அவர்களை நீதி காண வைக்க வேண்டுமானால் பொறுப்புக் கூறலை இறுக்கிப் பிடிப்பதாலேயே அது சாத்தியமாகும். சிங்களத் தலைவர்கள் நெருக்குதல் இல்லாவிட்டால் தமிழர்களுக்கு எந்த வித சலுகையும் தர முன்வர மாட்டார்கள் என்பது கொழும்பில் பிறந்து வளர்ந்த என்னுடைய முடிவான கருத்து. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் தனது தொழிற் சங்க நெருக்குதல்கள் மூலமே தன் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தார்.

முன்னைய அரசும் வெளிப்படையாகத் தரமாட்டோம் என்றது. இப்போதைய அரசும் எல்லாம் தருவோம் என்று காலத்தைக் கடத்திக் கொண்டே செல்கின்றது. அது மட்டுமல்ல. சில யுக்திகளையும் கையாளுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது 'எல்லாம் தருவோம்' என்று எங்களுக்குக் கூறிவிட்டு எம்மை எம்மிடையே அல்லது எமது சகோதர இனங்களுடன் மோதவிடும் ஒரு பாங்கைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

வவுனியா பொருளாதார வலயத்தை எடுத்துக் கொள்வோம். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வவுனியா அரச அதிபர் தான் நிபுணத்துவ அலுவலர் குழு அமைத்து வலயம் எங்கு அமைய வேண்டும் என்று அவர்களிடம் இருந்து தெரிந்து கொண்டார். அது எமக்கு அறிவிக்கப்பட்ட போது அலுவலர் அறிக்கையைப் பரிசீலனை செய்து அவர்களின் முடிவு சரியே என்று கண்டு எமது வடமாகாண சபை அவர்களின் கருத்தை வலியுறுத்தி ஓமந்தையே சிறந்த இடம் என்று எமது கருத்தை அமைச்சர் ஹரிசனுக்குத் தெரியப்படுத்தினோம். ஆனால் இன்னொரு அமைச்சர் அதைத் தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என்று கூறி, நானில்லாத ஒரு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மாற்றி அமைக்கப்பார்த்தார். அதனால் ஊர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கும் கிழக்கும் இணைந்தாலே இன அழிப்பைத் தடுத்து நிறுத்தலாம்

## கூறுகிறார் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்

இரண்டுபட்டது. பின்னர் எமது முரண்பாடுகளைக் களையப் போவதாகக் கூறி ஒன்றிற்கு இரண்டு வலயங்கள் அமைக்கத் தீர்மானம் அரசால் எடுக்கப்பட்டுள்ளது. எந்த அளவுக்குத் தெற்கில் உள்ள மையம் மாங்குளத்தைப் பாதிக்கக் கூடும் என்பது சர்ச்சைக்குரிய விடயமாகியுள்ளது.

தெளிந்த ஒரு குளத்தின் நீரில் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டால் எவ்வாறு அந்த குளத்தின் அமைதியும் அதன் அசைவற்ற நிலையும் மாறிப் போகின்றதோ அவ்வாறே காலத்துக்குக் காலம் எம்மிடையே சில முரண்பாடுகளுடைய விடயங்களை உட்புகுத்தி எமது இனத்தின் ஒற்றுமையைக் குலைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் நான் கேட்டதொன்றைக் கூற விரும்புகின்றேன். 65 ஆயிரம் பொருத்து வீடுகள் வேண்டாம் என்று நாங்கள் கூறியதை ஏற்றுக் கொண்டுள்ளதாகக் காட்டிய அரசு அதனை இன்னொருவிதத்தில் உட்புகுத்த வழி அமைத்து வருவதாகக் கேள்விப்படுகின்றேன். அதாவது தமிழர்கள் வேண்டாம் என்றால் என்ன எமக்குக் கட்டித் தாருங்கள் என்று வேறு இனங்கள் கோர அந்தப் பொருத்து வீடுகளை அவர்களுக்குஅமைத்துக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிகின்றேன். அதனால்தான் வடமாகாண மக்கள் பிரதிநிதிகளைப் புறக்கணித்து முஸ்லீம், சிங்கள இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவதற்காக ஒரு ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணி தேவையில்லை என்று எங்கள் வடமாகாண சபை தீர்மானம் எடுத்திருந்தும் மேற்படி பொருத்து வீடுகளை மேற்கண்ட இரு இன மக்களுக்கும் கட்டிக் கொடுக்கும் விதத்தில் அதைக் கொண்டு வந்த அதே அமைச்சரும் அந்தச் செயலணியில் உள்வாங்கப்பட்டுள்ளார். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அந்த அமைச்சர் பொருத்து வீடுகளைப் பொருத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றார் போல் தெரிகின்றது. அதே நேரம் முஸ்லிம், சிங்கள மக்களின் மீள்குடியேற்றம் என்ற கருத்து சிரிப்புக்கிடமாகஅமைந்துள்ளது. பின்ஹெயிரோ கோட்பாட்டின்படி எவரொருவர் தன் வசிப்பிடத்தில் இருந்து வன்முறைச் சம்பவங்களினால் அல்லது அரசியல் ரீதியான காரணங்களினால் வெளியேற்றப்பட்டாரோ அவரைத் திரும்பவும் அவர் வாழ்ந்த இடத்தில் மீள்குடியேற்ற வேண்டும் என்றிருக்கின்றது. இதில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பாகுபாட்டுக்கே இடமில்லை. அவ்வாறு குடி பெயர்ந்த சகல மக்களையும் மீள் குடியேற்றப்போகின்றோம் என்று கூறாது அவர்களை இன, மொழி ரீதியாகப் பிரித்து குடியேற்றத்தில் ஈடுபடுத்துவது அரசியல் காரணங்களுக்காக என்று தெட்டத்தெளிவாகப் புலப்படுகிறது.

மீண்டும் எம்மிடையே குழப்பத்தை உண்டாக்கி எம்மக்களை முக்கியமான அவர்களின் குறிக்கோள்களில் இருந்து வழிமாற்ற முற்படுகிறது அரசு. நாங்கள் இப்பேர்ப்பட்ட முரண்பாடுகளில் எங்கள் சகல பலத்தையும் கவனத்தையும் பிரயோகித்துக் கொண்டிருக்கும் போது அரசியல் சம்பந்தமான மிகக் குறைந்த ஏற்பாடுகளுடன் அரசமைப்பு வரைவொன்றைத் தயாரித்து விடுவார்கள். எப்படியாவது மக்கள் அந்த வரைவை ஏற்றுள்ளார்கள் அல்லது அதற்குச் சார்பாக இருக்கின்றார் கள் என்று ஜெனிவாவுக்குக் காட்டுவதே அவர்களின் குறிக்கோளாக இருக்கின்றது.

நான் இப்பொழுது தான் அரசியல் சூழ்ச்சிகளைப் படித்து வருகின்றேன்.ஒரு தேர்தலில் வென்ற பின் எதிர்த்தரப்பாரை மேலெழும்ப விடக் கூடாது. வழக்கு மேல் வழக்கு வைத்து விசாரணை வைத்து அவர்களின் எதிர்ப்புச் சக்தியை மழுங்கடிக்க வேண்டும் என்பது நான் கற்ற ஒரு பாடம். எதிர்க்கட்சிகளிடம் அல்லது மாறுபட்ட கருத்துடையவர்களிடையேமுரண்பாடுகளை ஏற்படுத்தி அவர்களைத் தலை தூக்க முடியாமல் ஆக்குவது இன்னொரு யுக்தி. முடியுமானால் அவர்களைப் பொலிஸ் நிலையத்துக்கும் நீதிமன்றங்களுக்கும் அலைய விட வேண்டும். இது மற்றொரு பாடம்.

முன்னர் ஜே.ஆரிடம் இருந்து ஒரு பாடம் கற்றிருக்கின்றேன்.ஏதாவது மக்கள் எதிர்க்கக் கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்றால் அந்தச் சட்டத்தை உள்ளடக்கி அதிலும் பார்க்க மிக்க் கொடூரமான சில ரத்துக்களையும் அதனுடன் வரைவில் உள்ளடக்கி வைக்க வேண்டும். இது விவாதத்திற்கு வரும் போது மேலதிகமாக உள்ளடக்கிய ரத்துக்களை ஜனநாயக ரீதியில் கைவாங்குவதாகக் கூறித் தான் முதலில் கொண்டு வர இருந்த அந்தச் சட்டத்தை இலேசாக நிறைவேற்றி விடுவதே ஜே.ஆரின் யுக்தி.

தமிழ் மக்களாகிய நாங்கள் இதுவரையில் பல தடவைகள் ஏமாற்றப்பட்டே வந்துள்ளோம். படிப்பிலும் பண்பிலும் தான் நாங்கள் ஜாம்பவான்கள். குயுக்தியிலும் குதர்க்கத்திலும் நாங்கள் சிறு பிள்ளைகள். சென்ற ஜனாதிபதித் தேர்தலின் போது எந்த வித வாக்குறுதிகளையும் நாம் பெற முயலவில்லை. பண்புள்ள கனவான்களாக நாங்கள் நடந்து கொண்டோம். ஆனால் முன்னைய அரசுடன் நெருங்கிய ஒட்டுறவு வைத்துக் கொண்டிருந்த இன்னொரு கட்சியின் தலைவர் எனக்கு 'இது தர வேண்டும் அது தர வேண்டும்; எனக்கெதிராக இது செய்யக் கூடாது அது செய்யக் கூடாது' என்று உறுதிமொழிகளை இந்த அரச தலைமைத்துவத்திடம் இருந்து பெற்றுக் கொண்டே இந்த அரசுக்கு உதவ முன்வந்தார்.இப்பொழுது அந்த உறுதிமொழியைக் காரணம் காட்டி இந்த அரசை ஆட்டிப் படைத்து வருகின்றார்.

இதில் சரி பிழை சொல்ல நான் முயலவில்லை. நாம் யாருடன் தொடர்பு வைத்துள்ளோம், அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதும் அரசியலில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பாடமாக அமைந்துள்ளது. எனவே நாங்கள் எங்கள் கடப்பாடுகளை உணர்ந்து அவற்றை மறக்காமல் செயற்பட வேண்டியுள்ளது என்பதைக் கூறி வைக்கின்றேன்.

இன்றைய நிலையில் எமது பிரச்சனைகளை நாம் இனம் காண வேண்டும். அவற்றை முழுமனதுடன் முழு சக்தியுடன் நாம் முன்னெடுக்க முன்வர வேண்டும் என்று கூறுகின்றேன். அரசுகளின் குயுக்திகளுக்கு நாம் ஆளாகக் கூடாது என்று கூறுகின்றேன். எமது ஒற்றுமையைக் குலைக்க அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் பலியாகக் கூடாது.

அந்த விதத்தில் எமது வடமாகாணஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முரண்பட்ட விதத்தில் நடந்து கொள்ளாது எம்மக்கள் நலன் கருதி இதுகாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அனுசரணைச் சக்தியாகவே நடந்து கொண்டு வந்திருக்கும் உங்கள் தமிழ் மக்கள் பேரவையை மனதாரப் பாராட்டுகின்றேன். எமது சமூகத்தின் புத்திஜீவிகள் பலரை உள்ளடக்கியது உங்கள் கட்சி. அதனால்தான் போலும் முரண்பாடுகள் ஆங்காங்கே இருப்பினும் நீங்கள் அவற்றைப் பொருட்படுத்தாமல் மேலெழுந்த வாரியாக ஒட்டுமொத்த தமிழ் மக்களின் நலன் கருதி உங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றீர்கள். உங்கள் நடவடிக்கைகள் எங்கள் மக்களை நல்வழிப்படுத்த இறைவன் அருள் புரிவானாக! (16ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பவர் யார்?

ஆவணி மாதத்தை அண்மித்து விட்டால் திரிகோண உறவுகளான ஆசிரியர், மாணவர் மற்றும் பெற்றோர் ஆகியவர்களுள் ஒரு புதிய உத்வேகம் உருவாகிவிடும். இந்த மூன்று நிலையினரும், கல்வி நிலையிலே உயர் புள்ளிகளை இலட்சியமாகக் கொண்டு கருமமே கண்ணாயினராகச் செயற்படும்போது, சமூகத்திலே இன்னுமொரு நிலையினர் கேளிக்கை, களியாட்டம் மற்றும் கொண்டாட்டம் என்ற கூத்துக்களுக்குத் தங்களைத் தயார்ப்படுத்திச் செயற்படுகின்றமை வேதனைக்குரியதொன்றாகும்.

ஆலயங்களில் திருவிழா, சமூக நிலையங்களில் ஆண்டுவிழா, மின்னொளியில் விளையாட்டு விழா என விழாக்களுக்குக் குறைவில்லை. ஒலி பெருக்கிகளின் அலறல்களோடு இவையாவும் பூர்த்தி செய்யப்படும் தன்னிகரில்லாத் தனித்துவமுடன் சமூகம் செயற்படுகின்றது. கல்வியைப் புறந்தள்ளி புலம் பெயர் உறவுகளின் பணங்களை வீணடித்து க்ளியாட்டங்களை முன்னெடுத்து, கல்வி கலாசார சீரழிவுக்கு வழி வகுக்கின்றனர்.

மாணவர் மனதைத் திசை திருப்பும் ஒரு நிகழ்வாக இந்தச் செயற்பாடுகள் அமைந்து விடுவதை யாரும் அறியாமலில்லை.

பரீட்சைக்கும் தமக்கும் தொடர்பேதுமில்லை என்பது போல் செயற்படுகின்றார்கள்.

ஒவ்வொரு மாணவரினதும் உயர் கல்வியும் ஒவ்வொரு புள்ளியிலேயே தங்கியுள்ளது என்பதை யாவரும் அறியவேண்டும். அவர்கள் மன நிலையைக் குழப்பமின்றிப் பார்த்துக் கொள்வது சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரினதும் பெரும் பொறுப்பும் கடமையுமாகும்.

சமூகத்திலே உள்ள படித்தவர்கள், பெரியவர்கள், அனுபவசாலிகள் எனப் பலதரப்பினரும் இவ்வாறான இடையூறுகளுக்குத் தலைசாய்ப்பது ஆச்சரியத்திற்குரியதே.

இந்த நிலையில் மேற்கூறப்பட்ட திரிகோண உறவுகளும் ஆராய்ச்சி மணியை அடிப்பதற்குத் தயாராகி உள்ள நிலையில், அந்த ஆராய்ச்சி மணிக்கு உரியவர்களாகக் கருதப்படும் கல்வி அதிகாரிகள், மாவட்டச் செயலர், பிரதேச செயலர், கிராம அலுவலர் மற்றும் சமூகத்தினர் ஆகியோருக்கு இது சமர்ப்பணமாகின்றது.

பரீட்சை எழுதும் மாணவர்களின் மன உளைச்சலைப்போக்கி மன அமைதியைத் தரும் சூழலை உருவாக்கித் தர ஆராய்ச்சி மணியாளர் முன்வருவார்களா?

மாணவர் நலன் கருதி முன்வருவார்களென நிச்சயம் நம்புகின்றோம்.

**நாமகள்**
**யாழ்ப்பாணம்.**

## ஆண்களுக்கான பகுதி

நான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கற்கும் மாணவன். 10 வருடங்களாக நான் உங்கள் பத்திரிகையின் வாசகன். தற்போது உங்கள் பத்திரிகையில் வெளியாகும் பெண்களுக்கான பகுதியைப் பார்க்கிறேன். அதிலே வருவது போன்று ஆண்களுக்கான பகுதி ஒன்றை உருவாக்கி அதிலே ஆண்களுக்கென சந்தையில் வெளியாகும் புதிய ஆடைகள், அலங்கார அணிகலன்கள், புதிய கெயார்ஸ்ரைல்ஸ், எவ்வாறான உடலமைப்புக்ளைக் கொண்ட ஆண்கள் எவ்வாறான ஆடைகளை அணிய வேண்டும் என்ற முறைகளையும், உடல் பருமனான ஆண்கள் உடல் குறையச் செய்ய வேண்டிய குறிப்புக்களையும், உயரம் குறைந்த சிறுவர்கள், ஆண்கள் உயரம் அதிகரிக்கச் செய்ய வேண்டிய விடயங்களையும் கறுப்பான ஆண்கள் வெள்ளையாக வருவதற்கு செய்ய வேண்டிய விடயங்கள் மற்றும் ஆண்களுக்கான குறிப்புக்கள், ஆண்களுக்கென சந்தையில் வெளியாகும் ஜெல், கிறீம் போன்ற பல்வேறு விடயங்களை ஒரு பகுதிக்குள் தொகுத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தினமும் இந்தப் பகுதி வெளியாகாமல் விட்டாலும் சூரியகாந்தித் தொகுப்பிலாவது இதைப்பிரசுரிக்க வேண்டும். தங்களின் பத்துவருட வாசகனின் அன்பான வேண்டுகோள் தயவுசெய்து ஆண்களுக்கெனப் பகுதியை வெளியிடாமல் இருக்க வேண்டாம் என பணிவபுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**வாசகன்கே.எம்.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரியோ ஒலிம்பிக் தொடருக்கான சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்டுள்ள இந்தியக் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் ரெண்டுல்கர், பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத் தலைவர் தோமஸ் பெச்சுடன் இணைந்து, ரக்பி ஆட்டங்களை ஆரம்பித்து வைத்தார். (ம)

## வியட்நாமுக்கும் தங்கம்

ஆண்களுக்கான 10 மீற்றர் துப்பாக்கி சுடுதலில் வியட்நாம் தங்கத்தை வென்றது.

வியட்நாமின் சார்பாக களமிறங்கிய குவாங்ஸ்குவான் வின்ஞ் ஒட்டுமொத்தமாக 202.5 புள்ளிகளைப் பெற்று தங்கத்தைக் கைப்பற்றினார். பிரேஸிலின் பிலிப்பே அல்மடியா 202.1 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், சீனாவின் பாங்வீய் 180.4 புள்ளிகளைப் பெற்று வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-ரி4)





# 400 மீற்றர் தனிநபர் நீச்சல் போட்டியில் ஹங்கேரி வீராங்கனை உலக சாதனை

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு 400 மீற்றர் தனிநபர் நீச்சலில் ஹங்கேரி வீராங்கனை கதின்கா ஹோஸ்ஸூ புதிய உலக சாதனை படைத்து தங்கம் வென்றார்.

பந்தய தூரத்தை 4 நிமிடங்கள் 26 செக்கன்கள் 36 மில்லி செக்கன்களில் கடந்தே அவர் தங்கத்தைக் கைப்பற்றினார். இதற்கு முன்பு லண்டன் ஒலிம்பிக்கில் (2012ஆம் ஆண்டு) சீன வீராங்கனை யூ ஹிவான் 4 நிமிடங்கள் 28 செக்கன்கள் 43 மில்லி செக்கன்களில் கடந்ததே உலக சாதனையாக இருந்தது.

இந்த சாதனையையே கதின்கா தகர்த்தெறிந்தார்.

அமெரிக்க வீராங்கனை மெட்லின் வெள்ளிப்பதக்கமும் (4 நிமிடங்கள், 31 செக்கன்கள், 15 மில்லி செக்கன்கள்) ஸ்பெயின் வீராங்கனை காா்சியா வெண்கலப் பதக்கமும் (4 நிமிடங்கள், 32 செக்கன்கள் 39 மில்லி செக்கன்கள்) கைப்பற்றினர். (ம-ரி4)



# 92 வருடப்
# ரியோவில்
## ஸ்பெய்னை வீழ்

வன்முறையை ஏற்படுத்தும் விளையாட்டு என்ற அடிப்பன
மாக ஒலிம்பிக் தொடர்களில் தடை செய்யப்பட்டிருந்த ரக்பித்
ரியோ ஒலிம்பிக் தொடரில் மீண்டும் ஆரம்பமானது. இதன்படி
பெண்களுக்கான ஆட்டமொன்றில் பிரான்ஸ் ஸ்பெய்னை
1924 ஆம் ஆண்டு பிரான்ஸின் தலைநகர் பரிஸில் ஒலிம்
ரிக்கா, பிரான்ஸ் அணிகள் மோதிய ஆட்டத்தின் போது ர
பெரும் கலவரம் ஏற்பட்டது. இதில் பலர் படுகாயமடைந்தன

## ஆஸி. ஆதிக்கம்

ஒலிம்பிக் தொடரில் நேற்று நண்பகல் வரையிலான பதக்கப்பட்டியலின் அடிப்படையில் ஆஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது.

இரண்டு தங்கம், ஒரு வெண்கலம் என மொத்தம் மூன்று பதக்கங்களைப் பெற்றே ஆஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது. இரு தங்கங்களுடன் ஹங்கேரி இரண்டாம் இடத்திலும், ஓர் தங்கம் நான்கு வெள்ளிகளுடன் அமெரிக்கா மூன்றாவது இடத்திலும் உள்ளன. (ம-ரி4)




## குண்டுவெடிப்புச் சதி முறியடிக்கப்பட்டது

ரியோ ஒலிம்பிக்கை சீர்குலைக்கும் நோக்கில் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த குண்டுவெடிப்புச் சதி பாதுகாப்புப் படையினரால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

ஒலிம்பிக் தொடரின் முதல் நாளான நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியின்போது, போட்டி நிறைவடையும் இடத்தில் குண்டு வைக்கப்பட்டிருந்தது. போட்டி நிறைவடைய இரு மணிநேரம் 20 நிமிடங்கள் இருக்கையில், வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன. இது, ஒலிம்பிக் தொடர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது வெடிகுண்டு மீட்புச் சம்பவம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். முன்னதாக, வலைப்பந்து போட்டி இடம்பெற்ற பகுதியில் சந்தேகத்துக்குரிய வகையில் இருந்த இரண்டு பைகளில் வெடிகுண்டு மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவங்களையடுத்து ஒலிம்பிக் கிராமத்தில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. (ரி4)


ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஜிம்னாஸ்டிக் போட்டியில் கலந்துகொண்ட பிரான்ஸ் வீரர் சமிர் எயிட் இலக்கை தவறாகக் கணித்து தனது காலை முறித்துக் கொண்டார். (ம-ரி4)



## கத்தி
## மூன்ற

பெண்களுக்கான
எம்பெசி (ஹங்
(இத்தாலி), சன் ஜி
கும் இடையில் கடு
குறித்த போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ங்களின் பின்னர்
# ல் மீண்டும் ரக்பி

## ழ்த்தியது பிரான்ஸ்

படையில் நீண்ட கால
த் தொடர் நடப்பு வருட
டி நேற்று நடைபெற்ற
ன வீழ்த்தியது.
ம்பிக் தொடரில் அமெ
ு ரசிகர்கள் மத்தியில்
நனர். பல நாடுகளின்

எதிர்ப்பில் அடிப்படையில் மோதல் போக்கை ஏற்படுத்தும் ஆட்டம் என்ற அடிப்படையில் ஒலிம்பிக் தொடரில் ரக்பி தடை செய்யப்பட்டது. கிட்டத்தட்ட 92 வருடங்களின் பின்னர் பிரேஸிலின் தீவிர முயற்சியின் விளைவாக நடப்பு வருட ரியோ ஒலிம்பிக் தொடரில் ரக்பி இணைக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு ஓர் ஆட்டத்தில் பிரான்ஸ், ஸ்பெய்ன் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. 24:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பிரான்ஸ் தனது முதல் வெற்றியைப் பதிவுசெய்து முன்னேற்றம் கண்டது. (ம–ரி4)



# ச் சண்டையில் தங்கம் யாருக்கு?
## று வீராங்கனைகளிடையே போட்டி

ன கத்திச் சண்டையில்
ங்கேரி), றொசெல்லா
ஜிவன் (சீனா) மூவருக்
கடும்போட்டி நிலவுகிறது.
டியின் அரையிறுதி

யாட்டங்கள் இன்று நடைபெறவுள்ள நிலையில் ஹங்கேரியின் எம்பெசி 15 புள்ளிகளையும், சீனாவின் சன் ஜிவன் 15 புள்ளிகளையும், இத்தாலியின் றொசெல்லா 13 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். அண்மைக்கால [illegible] ஹங்கேரியின் எம்பெசி ஒலிம்பிக் [illegible] யனாவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் எனக் கணிக்கப்படுகிறது. (ம)

# சைக்கிளோட்டத்தில் தங்கம் கைப்பற்றினார் கிறைக் வான்

ரியோ ஒலிம்பிக் சைக்கிளோட்டத்தில் தங்கத்தைத் தனதாக்கினார் பெல்ஜியத்தின் கிறைக் வான்.

6 நிமிடங்கள், 10 செக்கன்கள், 5 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்தே கிறைக் தங்கத்தைக் கைப்பற்றினார். வெள்ளிப்பதக்கத்தை டென்மார்க்கின் ஜேக்கப், வெண்கலத்தை போலந்தின் ரபேல் இருவரும் கைப்பற்றினர்.

இலக்கை அடைய ஜேக்கப் 6 நிமிடங்கள், 10 செக்கன்கள், 6 மில்லி செக்கன்களையும், ரபேல் 6 நிமிடங்கள், 10 செக்கன்கள், 10 மில்லி செக்கன்களையும் எடுத்துக் கொண்டனர். (ம–ரி4)



# ஒலிம்பிக்கில் விலகல் செரபோவா உருக்கம்

ரியோ ஒலிம்பிக்கை தவறவிடுவதாக தெரிவித்தார் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனையான செரபோவா.

மெல்டோனியம் எனும் ஊக்கமருந்தைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் இரண்டு வருடங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளார் செரபோவா. இதனால் 2018 ஆம் ஆண்டு ஜனவரிவரை அவரால் பன்னாட்டு அந்தஸ்துபெற்ற தொடர்களில் களமிறங்க முடியாது. இந்த நிலையிலேயே செரபோவா இவ்வாறு தெரிவித்தார்.


ஒலிம்பிக் என்பது உலகில் உள்ள ஆகச்சிறந்த களம். ஒவ்வொரு வீரரும் வீராங்கனையும் இதில் பங்கெடுக்க வேண்டும் என்ற கனவைக் கொண்டிருப்பார்கள். நான் விதிவிலக்கல்ல. ஆனால் துரதிஸ்டவசமாக ரியோ ஒலிம்பிக் தொடரில் களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு தற்போது 29 வயதாகிறது. அடுத்த ஒலிம்பிக் தொடரின் போது 33 வயதாகிவிடும். எனவே அடுத்த ஒலிம்பிக் தொடரில் நான் பங்குபற்றுவது நூறு சதவீதம் உறுதியல்ல. எனது ஒலிம்பிக் கனவு கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டதாகவே கருதுகிறேன் என செரபோவா மேலும் தெரிவித்தார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கும் கிழக்கும் இணைந்தாலே இன அழிப்பைத் தடுத்து நிறுத்தலாம்

(12-13 ஆம் பக்கத் தொடர்ச்சி)



பொறுப்புக் கூறல் பற்றி ஒரு சில வார்த்தைகள். ஐக்கிய நாடுகள் சபை இரு கோரிக்கைகளை சென்ற வருடம் செப்ரெம்பர் மாதத்தில் முன்வைத்துள்ளது. போர் முடியும் தறுவாயில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு இலங்கை பொறுப்புக் கூற வேண்டும். அடுத்து போரினால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தில் இருந்து இராணுவ பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும் என்பனவே அவை. அண்மையில் சயிட் ராட் அல் ஹுசேன் போருக்குப் பின்னரான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் பொறுப்புக் கூறல் சம்பந்தமாக இலங்கை மிகக் குறைவான முன்னேற்றமே கண்டுள்ளது என்றார்.

பல விடயங்களில் பலமான மேற்பார்வை அவசியம் என்றார். அதாவது இராணுவத்தைக் கண்காணிக்கும் மக்கள் குழுவின் பலத்தை மேலும் வலிமையூட்ட வேண்டும் என்றார். பாதுகாப்புக் கொள்கைகள் பற்றி மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றார். மேலும் பல விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

வடமாகாண மக்களுடன் சீரிய உறவைப் பேண அரசு தவறிவிட்டது என்ற செய்தியையும் முன்வைத்தார். அத்துடன் 2015ல் தருவதாகக் கூறிய காணிகள் அனைத்தும் இது வரையில் விடுவிக்கப்படாதது பற்றியும் குறிப்பிட்டிருந்தார். அரசு பொறுப்புக் கூறல் விடயத்தில் உண்மையை அறிந்து கொள்ளும் விதத்தில் நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரியவில்லை. சிறப்பு உள்நாட்டு நீதிமன்றங்கள் அமைப்பதுபற்றித்தான் கூறப்படுகிறது. இலங்கை 2009 தொடக்கம் உள்நாட்டு நீதிமன்றங்கள் பற்றித்தான் கூறிவருகின்றது. இவற்றால் எந்தவித நன்மையும் கிட்டப் போவதில்லை. இதை நாங்கள் திரும்பத் திரும்ப எங்கள் மக்கள் கவனத்தில் நிலை நிறுத்த வேண்டும். அதனை உங்களின் ஒரு கடப்பா டாகவே காண்கின்றேன். தென் ஆபிரிக்கா பற்றி அரசும் கூறுகின்றது. ஆனால் அங்கு அரசமைப்பு பற்றிய முரண்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவந்த நிலையிலேயே உள்ளக விசாரணை மன்றங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இங்கு எமது குறைகள் இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. தீர்க்காத சூழ்நிலையில், பெரும்பான்மை மக்களின் கை ஓங்கியிருக்கும் இந்நிலையில், உள்நாட்டு நீதிமன்றங்கள் நீதியை வழங்குவன என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே பன்னாட்டு நீதிபதிகளே விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

எமது பெரும்பான்மையின நீதிபதிகள் சிங்களவர்களுக்குப் பக்கச்சார்பாக இதுவரையில் நடந்து வந்துள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு நூல் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயந்த அல்மெயிடா குணரத்ன, செல்வி கிசாலி பின்டோ ஜயவர்த்தனா மற்றும் ஜெகான் குணதிலக ஆகிய மூன்று சிங்கள சட்டத்தரணிகளால் சில வருடங்களுக்கு முன் வெளியிடப்பட்டது. இந்நாட்டின் உள்ளக விசாரணை நீதியைப் பெற்றுத் தரமாட்டாது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவே மேற்படி நீதித்துறை மனக்கிடக்கை என்ற நூல் அமைந்துள்ளது.

போர்க் குற்றங்கள் பற்றிய உண்மையை அறிந்தால் தான் நல்லெண்ணத்திற்கு வழி வகுக்கலாம். உள்ளக விசாரணைகள் குமாரபுரம் வழக்குப் போல முடிவடையும் என்பதில் சந்தேகம் இருக்கத் தேவையில்லை.

எனவே பொறுப்புக் கூறல் விடயத்தில் பன்னாட்டு நீதிபதிகளின் உள்ளேற்பே நீதியைப் பெற்றுத்தரும் என்ற விடயத்தை நாங்கள் ஊன்றிக் கூற வேண்டிய ஒரு கடப்பாடு உருவாகியுள்ளது. இந்த விடயத்தை எமது தூதரகங்களுக்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் கூறிக் கொண்டே இருப்பது அவசியம்.

அது மட்டுமல்ல. வழக்கு நடத்துநராக எமது சட்டத்துறைத் தலைமையதிப்தி இருக்கக்கூடாது. பன்னாட்டுப் புகழ் பெற்றவர்களைக் கொண்ட குழு சில காலத்துக்கு முன் எமது சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக்கள சட்டத் தரணிகள் பற்றி மிக மோசமாக விமர் சித்தார்கள். அவர்களும் இராணுவத்தினருக்குப் பக்கச் சார்பாய் நடந்து கொண்டதை எமக்கு உணர்த்திச் சென்றார்கள். மூன்றாவதாக போர்க் குற்றம் பற்றிய சட்டமானது இன்னமும் எமது சட்டவாக்கத்தினுள் உள்ளடக்கப்படவில்லை என்பதை நாங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும். தற்போதைய அரசமைப்பின் 13(6)வது சரத்தின் புறவுரையின் பிரகாரமே அவற்றை உள் ளேற்பதாகக் கூறியிருப்பினும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வழக்கு நடத்துநர், நீதிபதிகள் வெளியில் இருந்து வந்தாலும் விசாரணை நடத்தப் போதுமான சட்டம் இன்னமும் எமது சட்டவாக் கத்தினுள் உள்ளேற்கப்படவில்லை என்பதே உண்மை.

அரசியல் தீர்வைப் பேசி பொறுப்புக்கூறலை மறக்க வைக்க இடமளிக்கக் கூடாது.

அதே நேரம் அரசியல் தீர்வைப் பற்றியும் உரக்கக் கூற வேண்டியிருக்கின்றது. என்னால் முடிந்தமட்டில் வெளிநாட்டில் இருந்து வரும் பல உயர் அதிகாரிகளுக்கு எமக்குச் கூட்டாட்சியே ஒரே தீர்வு என்ற விடயத்தை எடுத்துக் கூறியே வருகின்றேன். அவர்களுடன் நீங்களும் பல்வித வெளிநாட்டு உள்நாட்டு நிறுவனங் களுடனும் உயர் அலுவலர்களுடனும் அளவளாவி கூட்டாட்சி வழிமுறை மேல் எங்களுக்கு இருக்கும் உடன்பாட்டை எடுத்தியம்ப வேண்டும்.

நேற்றைக்கு முன்னைய தினம் என்னைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அலுவலர் ஒருவர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். ஸ்பெயின் நாட்டில் கூட்டாட்சி என்ற கருத்தை சர்வாதிகாரி ப்ரான்கோவின் மறை வின் பின்னர் மக்கள் எதிர்த்தார்களாம். எனினும் சுயாட்சி என்ற கருத்தை உட்புகுத்தி அவர்கள் அரசியல் பிரச்சனைக்குத் தாங்கள் முற்றுப்புள்ளி வைத்ததாகவும் கூட்டாட்சி நிலையை ஏற்படுத்த உரிய சட்டங்களை வேறு விதமாகவும் பொறுப்புடனும் இயக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்றும் கூறினார். இதனை நடுவண் அரசுக்குத் தெரிவியுங்கள் என்றேன்.

> இலங்கை 2009 தொடக்கம் உள்நாட்டு நீதி மன்றங்கள் பற்றித்தான் கூறிவருகின் றது. இவற்றால் எந்தவித நன்மையும் கிட்டப்போவதில்லை. இதை நாங் கள் திரும்பத் திரும்ப எங்கள் மக்கள் கவனத்தில் நிலை நிறுத்த வேண்டும்.

மேலும் கடந்த இரு தினங்களாக இன்று வரையில் நீர்கொழும்பில் மாற்றுக் கொள்கைக்கான மையம் என்ற நிறுவனம் நடத்தும் அரசியல் தீர்வு பற்றிய கருத்தரங்கத்தில் என் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், எமது விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசன், எமது எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா ஆகியோர் கலந்து கொண்டு சமஷ்டி பற்றியும் எமது எதிர் பார்ப்புக்கள் பற்றியும் உரையாற்ற உள்ளனர்.

எனவே எமது அரசியல் தீர்வைப் பொறுத்த வரையில் எமது இன அடையாளம், எமது நில அடையாளம், எமது பாரம்பரிய கலாசார அடையாளம், மொழி அடையாளம், எமது சமூக ஒன்றிப்பு போன்ற பலவற்றை வலியுறுத்தியே எமக்கான சுயநிர்ணய உரிமையை நாங்கள் பெற வழி வகுக்க வேண்டும். மாண்புடன், பாதுகாப்புடன், நிலைபாட்டுடன் நாங்கள் வாழ வழிகாண வேண்டும்.

வடமாகாணத்தில் இருக்கும் பாரம்பரிய சிங்களக் கிராமங்களை அடையாளம் காணுவதும் அண்மையில் நியமிக்கப்பட்ட ரிசாட் பதியுதீன் தலைமையிலான ஜனாதிபதி செயலணியின் கடப்பாடுகளில் ஒன்று. வடமாகாணசபை இதனை எதிர்த்துத் தீர்மானம் கொண்டுவந்துள்ளது. இதனை எதிர்க்காவிட்டால் எமது தனித்துவம், எமது பாரம்பரியம், எமது சுய நிர்ணய உரிமை யாவும் பாதிக்கப்படும். அவ்வாறான செயலணியை மீளப் பெறவேண்டும் என்று குரல் கொடுப்பது அவசியமாகியுள்ளது.

வடமாகாணத்தில் சிங்களக் கிராமங்கள் சென்ற 100 வருடங்களுக்குள்ளேயே வளர்ந்து வந்துள்ளன. அதுவும் வவுனியா மாவட்டத்தின் தெற்குக் கோடியில் ஒரு பகுதியே அது. மற்ற இடங்களில் எல்லாம் பலாத்காரமாக அர்சு மக்களைக் குடியேற்றியே கிராமங்கள் உதித்துள்ளன. மணலாறு வெலிஓயாவாக அண்மையிலேயே மாறியது. அதைப் பாரம்பரிய சிங்களக் கிராமம் என்பது முழுப் பூசணிக் காயைச் சோற்றில் புதைப்பது போன்றதானது. எந்தெந்தக் கிராமங்களை மனதில் வைத்து அவற்றைப் பாரம்பரிய சிங்களக் கிராமங்கள் என்று அரசு குறிப்பிடுகின்றது என்பது விளங்கவில்லை.

ஒன்றை நாங்கள் கூறவேண்டிய தருணம் வந்து விட்டது. சிங்கள மொழி உருவாகியது கிட்டத்தட்ட கி.பி. 6ம் நூற்றாண்டிலேயே. அதற்குமுன், மொழி ரீதியாக சிங்களவர் என்று அழைக்கக்கூடியவாறு மக்கள் கூட்டங்கள் இந்நாட்டில் வாழவில்லை. பௌத்த மதத்தை எடுத் தோமானால் கிறிஸ்துவுக்குப் பின் இரண்டு மூன்று நூற்றாண்டுகள் தமிழ் மக்கள் பௌத்தர்களாக மாறியிருந்தார்கள் என்பதே உண்மை. அப்போது சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கு இடமே இல்லை. சில வருடங்களுக்கு முன்னர் இதனை எடுத்துக்காட்டி பேராசிரியர் சுனில் ஆரியரத்ன அவர்கள் தெமல பௌத்தயோ என்ற சிங்கள நூலை வெளியிட்டார். ஆகவே வடமாகாணத்தில் இருக்கும் பௌத்த எச்சங்கள் தமிழர்கள் பௌத்தர்களாக இருந்த காலத்துக்கு உரியவையே அன்றி அங்கு பாரம்பரிய சிங்களக் கிராமங்கள் எந்தக் காலத்திலும் இருக்கவில்லை.


கடைசியாக ஒரு விடயம். அது வடகிழக்கு இணைப்பு பற்றியது. வடகிழக்கை இணைக்காது தனித்தனியாக வைத்திருந்தால் என்ன என்று அண்மையில் என்னைச் சந்தித்த ஜனாதிபதி செயலணியின் செயலாளர் என்னிடம் கேட்டார். வடக்குக் கிழக்கு பாரம்பரியமாகத் தமிழ் பேசும் மாகாணங்கள். எனவே தமிழ் மொழி நிலைக்க, தமிழ் மொழியைப் பேசும் மக்களின் கலாசாரம் நிலைபெற, பிற கலாசாரங்களை உட்புகுத்தி இன அழிப்பை ஏற்படாது தடுக்க வடக்கும் கிழக்கும் இணைந்தே தீர வேண்டும் என்றேன். வட-கிழக்கில் வேண்டுமென்றால் இது பற்றிய ஒரு கருத்துக் கணிப்பை வைக்கலாம் என்றும் கூறினேன்.

கிழக்கில் சிங்கள மக்கள் பெருவாரியாகக் குடியேறி விட்டார்கள். முஸலீம்கள் வடகிழக்கு இணைப்புக்கு ஒத்து வர மாட்டார்கள் என்றெல்லாம் வடகிழக்கு இணைப்புக்கு எதிராகக் காரணம் காட்டுகின்றார்கள். இவ்வாறு கூறும் நம்மவர்கள் கிழக்கில் பெருவாரியாக வெளியார் குடியேற்றங்கள் நடைபெற்ற போது தமது குரல்களை உரத்துக் கத்தியிருந்தால் இவ்வாறான குடியேற்றங்களைக் குறைத்திருக்கலாம். இக்குடியேற்றங்களினால் எமக்கு ஏற்பட்ட பாதிப்பை நாங்கள் தணிப்பது என்றால் வடகிழக்கு இணைப்பு அவசியம். முஸ்லிம் மக்களுக்கு ஒரு நிர்வாக அதிகார சபையை வழங்குவதில் தமிழ் மக்களுக்கு எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது.

ஆனால் வடக்குக் கிழக்கு இணைந்த தமிழ் பேசும் அலகு என்பது எமது வருங்கால ஒற்று மைக்கும், தமிழ்ப் பாரம்பரிய நிரந்தரத்திற்கும் மிக்க அவசியமான ஒன்று என்பதைக் கூறி தமிழ் மக்கள் பேரவை மூன்று முக்கியமான விடயங்களை மக்கள் மனதில் விதைக்கப் பாடுபட வேண்டும் என்றும் கூறி வைக்கின்றேன். ஒன்று பொறுப்புக் கூறல் கடப்பாட்டில் இலங்கை அரசின் பங்கை ஆணித்தரமாக வலியுறுத்தல் வேண்டும். இரண்டு, அரசியல் தீர்வானது தமிழ் மக்கள் கேட்டவாறு கிடைக்காவிடில் நல்லிணக்கம் ஏற்படாது என்ற கருத்தை வலியுறுத்த வேண்டும்.

மூன்றாவது வட கிழக்கு ஒருங்கிணைப்பை வலியுறுத்த வேண்டும். இம்மூன் றையும் உங்கள் பேரவை மக்களிடையே எடுத்துச் சென்று உலக மட்டத்தில் வலியுறுத்தியும் வரும் என்று எதிர்பார்த்து என்னை அழைத்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவத் தமிழர்களின் பெருவிழாவே

# நல்லூர்த் திருவிழா

– கலாநிதி ஆறு.திருமுருகன்



> உள்ளத்துக்கு ஆறு தலைத் தேடுங்கள். நல்ல காட்சிகளைக் காண்பதற்கு வாருங்கள். மழலைச் செல்வங்களை நல்லூர் வீதி மணலிலே மகிழ்ந்து விளையாட விடுங்கள். பாரமின்றி, பயமின்றி, நோயின்றி, அவலமின்றி, அச்சமின்றி, ஆண்டவன் சந்நிதானத்தில் அகமகிழ்ந்து கும்பிட அரியதோர் வாய்ப்புக் கிட்டியுள்ளது. பாடுபட்டு உழைக்கலாம்; பலபடிப்பு படிக்கலாம். ஆனால் பயனுள்ள தவப் பொழுதைச் சந்திக்க தவறின் பலவற்றை நாம் இழந்தவராகி விடுவோம்.

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. நல்லைநகர் அழகு விழாக்கோலம் கொண்டு காட்சியளிக்கிறது. மக்கள் மனங்களிலும் இந்தத் திருவிழாக் காலம் பற்றிய எண்ணம் விரிந்து கொண்டிருக்கின்றது. நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு ஆலய அறங்காவலர் இருமாதங்களுக்கு முன்பே ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி விட்டார். ஆலயம் முழுவதும் வர்ணம் பூசப்பட்டு எழில் கோலமாகத் தென்படுகிறது. நான்கு வீதிகளிலும் சேவற்கொடிக் கம்பங்கள் நடப்பட்டு வெற்றிக்கொடி அழகாகப் பறந்து கொண்டிருக்கிறது. நல்லூரான் திருவிழாவை முன்னிட்டு தண்ணீர்ப் பந்தல்களாக தாகசாந்தி நிலையங்கள், அன்னதான மடங்கள் அனைத்தும் ஆரவாரமாக தம் பணியை தொடங்கி விட்டன. இருபத்தைந்து நாள்களும் புதியதோர் உலகில் சஞ்சரிப்பது போல் நல்லூர்ச்சூழல் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்துவிடும். காலம் தவறாத பூசைவழிபாடுகளுடன் வெவ்வேறு விதமான அலங்காரத்தோடு முருகப் பெருமான் வீதியுலா வருவது வழக்கம். அதிகாலை நான்கு மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் நல்லூரான் வாசலுக்கு வந்துவிடுவார்கள். கற்பூரஒளி இன்றுமுதல் இருபத்தைந்து நாள்களும் பெருஞ்சுவாலையாக ஓயாது காட்சியளிக்கும். முருகா! முருகா! என்ற ஓசைக்கு மத்தியில் பல நூற்றுக்கணக்கான இளைஞர் கள் நல்லூர் பெருவீதியில் அங்கப்பிரதட்சணம் செய்யும் காட்சியை வேறெங்கிலும் காணமுடியாது. அடியெடுத்துக் கும்பிடுகின்ற பெண்கள் அணி அணியாக வந்து அழகாகத் தம் வழி பாட்டை நிறைவேற்றுவார்கள். ஆலயத்தின் பிரதம குரு உருத்திராட்ச மாலைகள் நிறைந்த கழுத்தோடு, மந்திரத் தங்கக் காப்போடு, பட்டுப் பீதாம்பரங்களுடன் கொடியேற்றும் காட்சி முருகனே எழுந்து வருவது போல் உள்ளத்தை ஈர்க்கும். நல்லூரில் பணி செய்யும் சிவாச்சாரியார்கள் எல்லோரும் கழுத்தில் உருத்திராட்சம், ஒரே சீரான ஆடை ஆபரணங்களுடன் காட்சியளிப்பர். ஆலயப் பணியாளர்கள் அனைவரும் தமக்கே உரித்தான கடமைகளை சீருடையோடு ஆற்றுவர். அவரவர்க்கு உரிய கடமைகளை அவரவரே சரியாகச் செய்வர். அறங்காவலரை முன்னே காணமுடியாது. தூரத்திலே நின்று எல்லாவற்றையும் நுணுக்கமாக அவதானிப்பார். மௌனமாக நிற்பார். எப்படி இந்த திருக்கோயில் இவ்வளவு அற்புதமாகப் பேணிக்காக்கப்படுகின்றது என்பது திருவருளே. எல்லாம் முருகப்பெருமானின் பேரருளே. காலையிலே வீதிவலம் வந்த வாகனம் உரிய இடத்துக்குச் சென்றுவிடும். மாலையிலே வேறு வாகனத்தில் முருகன் வீதி வலம் வருவார். காலை அலங்காரம் வேறு; மாலை அலங்காரம் வேறு. இன்று வந்த அலங்காரம் நாளை கிடையாது. அலங்காரத்தில் அணியப்படுகின்ற ஆடையின் நிறமும் குடையின் நிறமும் அந்தணர் உடையின் நிறமும் தொடர்புபட்டிருக்கும். எல்லாமே ஆச்சரியமாக இருக்கும். கொடி ஏறியவுடனேயே ஒவ்வொரு திருவிழாவுக்கும் உரிய கடமைகள் தன் பாட்டிலே நடக்கும். சித்திரைத் தேரை மினுக்கத் தொடங்கி விடுவார்கள். தேர்த்திருவிழாவன்று திருத் தேர் பொன்னிறமாகக் காட்சியளிக்கும். நல்லூர் திருவிழாவில் நாம் கற்பதற்கு பல விடயங்கள் உண்டு.

"நல்லூர் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு பெருந்திரளான பக்தர்கள் தினமும் காலையிலும் மாலையிலும் நேரம் ஒதுக்கி வருவார்கள். இத்திருவிழாக் காலத்தில் உளரீதியாகவே மக்கள் மாற்றம் பெறுகிறார்கள். நோய்களால் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் கூட நல்லூர்த் திருவிழாக்காலத்தில் நோயற்றவர்களாகக் காட்சியளிப்பர். புதிய உத்வேகத்தோடு இந்த நாள்களில் மனமகிழ்ந்து உலாவுவர். பல இளைஞர்கள் தங்கள் வாழ்நாளில் சீர்பெறுவதுநல்லூரை அடிப்படையாகக்கொண்டே. இளைஞர்களிடையே நல்லூர்த் திருவிழாக்காலம் பெரும் மாற்றங்களை உருவாக்குவது இயற்கை. பல இளைஞர்கள் அதிகாலையிலே நித்திரையால் எழுவதற்குப் பழக்குவது நல்லூர் விழாக்காலமே. பல இளம் பெண்பிள்ளைகள் இறைநம்பிக்கையை வளர்ப்பது இக்காலத்திலேயே. நல்ல மனிதர்களின் உறவுகள் வளர்வதும் இத்தகைய திருவிழாக்காலங்களிலேயே. 'நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு. அதனால் நாட்டில் உள்ள பிணிகள் ஓடும்' என்று யோகர் சுவாமிகள் பாடியது மிகவும் உன்னதமான செய்தியாகும். நல்லூர் வீதியில் எத்தனை பேர் பாடிக் கும்பிடுவர். எல்லாம் மறந்த நலம் இங்கே கிடைக்கும். ஆதலால் இன்று தொடக்கம் அனைவரும் நல்லூருக்கு வாருங்கள். உள்ளத் துக்கு ஆறுதலைத் தேடுங்கள். நல்ல காட்சிகளைக் காண்பதற்கு வாருங்கள். மழலைச் செல்வங் களை நல்லூர் வீதி மணலிலே மகிழ்ந்து விளையாட விடுங்கள். பாரமின்றி, பயமின்றி, நோயின்றி, அவலமின்றி, அச்சமின்றி ஆண்டவன் சந்நிதானத்தில் அகமகிழ்ந்து கும்பிட அரியதோர் வாய்ப்புக் கிட்டியுள்ளது. பாடுபட்டு உழைக்கலாம்; பலபடிப்பு படிக்கலாம். ஆனால் பயனுள்ள தவப்பொழுதைச் சந்திக்கத் தவறின் பலவற்றை நாம் இழந்தவராகிவிடுவோம்.

"சைவத்தமிழர்களே! எம்வாழ்வின் முக்கிய வழிபாட்டுக்காலமாகக்கருதப்படும்திருவிழாக்காலத்தில் குடும்பம் குடும்பமாகக் கோவிலுக்கு வாருங்கள். பண்பாட்டு உடைகளோடு வாருங்கள். எமது பாரம்பரிய அடையாளங்களைத் தொலைத்து விடாமல் அவற்றைக் காத்திட வாருங்கள். தாய்மார்களே! உங்கள் பிள்ளைகள் கோயில் வழிபாட்டிற்குரிய உடைகளை அணிந்து செல்கிறார்களா என அக்கறை கொள்ளுங்கள். ஆடவர்களே! காற்சட்டையோடு நல்லைக்கந்தன் வீதிக்கு வராதீர்கள். இது தவப் பொழுதுக்குரிய காலம்; அவப்பொழுதுக்கு உரியதாக மாற்றாதீர். சைவத் தமிழர்கள் ஒன்றுபட்டு வழிபடும் காட்சியை பலர் வியந்து போற்றுகிறார்கள். அக்கௌரவத்தைக் காப்பாற்ற நல்லூர் திரு விழாக்காலத்தை பக்தி நெறியோடும் பண்பாட்டு நெறியோடும்அனைவரும் பேண முற்படுவோமாக.!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1220 - லிகுலா போரில் எஸ்தோனிய பழங்குடி மக்களால் சுவீடன் தோற்கடிக்கப்பட்டது.

1876 - தோமஸ் எடிசன் ஸ்ரென்சிலிருந்து பிரதி செய்யும் மைமோகிறாபிற்கான (றோணியோ) காப்புரிமத்தைப் பெற்றார்.

1908 - வில்பர் றைற் சகோதரர்களின் முதலாவது பகிரங்க விமானப் பறப்பு பிரான்ஸ் லெமன்ஸ் குதிரைப் பந்தயத்திடலில் மேற்கொள்ளப்பட்டது.

1946 - உலகின் முதலாவது அணு ஆயுத விநியோக போர் விமானமான கொன்வெயர் பி-36 விமானம் முதற் பறப்பு.

1963 - மிகப் பெரிய புகையிரதக் கொள்ளை: இங்கிலாந்தில் 15 பேர் கொண்ட குழுவினால் புகையிரதத்தில் 2.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் நாணயத் தாள்கள் திருடப்பட்டன.

1967 - இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகியவற்றால் தென்கிழக்காசிய நாடுகள் சங்கம் ASEAN உருவாக்கப்பட்டது.

1973 - தென் கொரிய அரசியல்வாதியும் பின்னாளில் தென் கொரிய ஜனாதிபதியுமாகிய கிம்டாயுங் கடத்தப்பட்டார்.

1988 - பர்மாவில் 8888 எழுச்சி தொடங்கியது.

1990 - குவைத்தை ஈராக் ஆக்கிரமித்து அதனை ஈராக்குடன் இணைத்துக் கொண்டது. இதன் காரணமாக வளைகுடாப் போர் மூண்டது.

1991 - ஒரு காலத்தில் அதிக உயரமானதாக அமைக்கப்பட்டிருந்த வோர்ஸோ வானொலிக் கோபுரம் சரிந்து வீழ்ந்தது.

2000 - கூட்டுப்படை நீர் மூழ்கிக் கப்பலான எச்.எல் ஹண்லி 30 வருடங்களுக்கு முன்னர் ஆழ் கடற்படுக்கையில் ஆழ்கடல் கண்டு பிடிப்பாளர் E.லீ ஸ்பொன்சால் கண்டு பிடிக்கப்பட்ட நிலையில் 136 ஆண்டுகளுக்கு முன்னர் மூழ்கிய அந்த நீர் மூழ்கிக் கப்பல் கடல் மேற்பரப்புக்குள் கொண்டுவரப்பட்டது.

2005 - தமிழருக்கான சம உரிமை, முஸ்லிம்களுக்கு கிடைப்பதை பிரபா உறுதிப்படுத்த வேண்டும் என ரிஷாத் பதியூதின் வேண்டுகோள்.


- இரத்தமலானையில் இரண்டு ரயில்கள் ஒன்றோடொன்று மோதி விபத்து. 26 பேருக்குக் காயம்

2006 - ஊடகவியலாளர் ஓய்வூதியச் சட்டம் சபையில் ஏகமனதாக நிறைவேறியது.

- அநாமதேய துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு தமிழ் - முஸ்லிம் பிரிவினையைத் தூண்ட முயற்சியென நாடாளுமன்றில் விசேட அறிக்கை விடுத்து ஹக்கீம் உரை.

2010 - வெள்ளத்தால் ஏற்பட்ட மண் சரிவில் சீனாவின் கன்சு சக்யு மாநிலத்தில் 1400 பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

2013 - சாவுச் சடங்கொன்றின்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பாகிஸ்தான் குவட்டா நகரில் 31 பேர் உயிரிழந்தனர்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

# உலகப் பழமொழிகள்

**பின்லாந்து**

- மீனுக்கு ஏரியின் அடித்தளம் தெரியும். ஆண்டவனுக்குச் சமுத்திரத்தின் அடித்தளம் தெரியும்
- பணம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை; பெருக்கவே செய்கிறது.
- எல்லோரிடமும் நன்றி விசுவாசத்துடன் இருப்பவருக்கு இறைவனின் நல்லாசி உறுதியாகக் கிடைக்கும்.
- வாசனை மலர்கள் சாலையோரங்களில் ஆபத்தில்லாமல் இருக்க முடியாது - அழகும் அப்படித்தான்.
- முதலாளியின் தயவு வேண்டுமானால் அவன் நாய்க்கு உணவு அளிக்க வேண்டும்.
- செயல் வீரன் சாதிப்பான் - போதிக்க மாட்டான்.
- செல்வத்தால் தேவைகள் பூர்த்தியாவதில்லை - பெருகவே செய்கின்றன.
- நம்மை ஏமாற்றாத நல்ல நண்பன் புத்தகம்.
- சம்பாதிப்பவன் சிறந்த மனிதன் அல்லன். அதைச் சேமிப்பவனே சிறந்த மனிதன்.
- பெண் முடிகிறபோது தான் சிரிப்பாள்; ஆனால் நினைத்தபோது அழுவாள்.
- பசி, உழைப்பு, வியர்வை ஆகியவை வாழ்க்கைக்கு மருந்துகள்.
- செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான்; செய்யத் தெரியாதவன் போதிக்கிறான்.
- வெள்ளாட்டுப் பாலிலிருந்து எடுக்கும் வெண்ணெயும் மனைவி கொண்டுவரும் ஆஸ்தியும் வீட்டுக்கு ஆகாது.

# திருடியவன் யார்?

இரத்தின வியாபாரி ஒருவன் வெளியூருக்குப் போகும் போது வழியில் ஒரு சத்திரத்தில் இரவு தங்க நேர்ந்தது. மடியில் இரத்தினத்தை முடிந்து பத்திரமாக வைத்துக் கொண்டு தூங்கினான்.

அங்கே படுத்திருந்தவர்களில் ஒருவன் இரத்தினத்தை திருடிக்கொண்டான்.

நடு இரவில் இரத்தின வியாபாரி விழித்துப் பார்த்த போது இரத்தினம் காணாமையால் திடுக்கிட்டான். 'அங்கே படுத்திருந்தவர்களின் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால். எடுத்தவனுடைய நெஞ்சு பயத்தினால் பதை பதைத்துக் கொண்டிருக்கும். அதனால் திருடியவனை அறிந்து கொள்ளலாம்" என்று நினைத்து அப்படியே தொட்டுப்பார்த்தான். "அவர்களின் ஒருவனின் நெஞ்வு பதை பதைத்தைக் கண்டு அவனே திருடியவன்" என்று கருதி அடை யாளத்துக்காக அவனுடைய குடுமியைக் கொஞ்சம் அறுத்து விட்டு வந்து படுத்துவிட்டான்.

அப்போது தூங்குவது போல் படுத்திருந்த திருடன் எழுந்து அங்கே படுத்திருந்த எல்லோருடைய குடுமிகளையும் தன் குடுமி யைக் கத்தரித்தது போல் கத்திரிக்கோலால் கத்தரித்து விட்டு படுத்துக் கொண்டான்.

பொழுது விடிந்ததும் இரத்தின வியாபாரி எழுந்து சத்திரத்து அதிகாரியிடம் போய் இரத்தினம் திருட்டுப் போன விவரத்தையும் குடுமியை அறுத்து அடையாளம் வைத்திருப்பதையும் சொன்னான். அதிகாரி பார்த்தான். எல்லோருடைய குடுமியும் ஒரே அளவாக வெட்டப் பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உண்மையை உணர்ந்திடு பெண்ணே...

■ உடுவிலூர் கலா

அறிவியல் வளர்ச்சியைவிட பெண்களின் வளர்ச்சி அதீதமாயுள்ளது. சாதாரண பெண்கள் தொடங்கி சாதனைப் பெண்கள் வரை பொறுமையாலும், பரிவாலும் பல திறமைகளை வெளிக்கொணர்கிறார்கள். ஆனாலும் ஆண்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வாழும் பெண்களும் உள்ளனர். பெண்மையை உணர்ந்து வாழ்பவர்கள் சாதனை படைக்கிறார்கள். ஆண்களின் வக்கிர கரங்களில் வதங்கும் பெண்கள் பம்பரமாய்ச் சுழல்கிறார்கள். ஏராளமான பெண்களின் பலவீனம் என்பது ஆண்கள் மீது நம்பிக்கை வைத்து தம் உயிரையே பணயம் வைத்து வாழ்வது தான். என்ன தான் படித்தவராக இருந்தாலும் ஆணுக்கு அடங்கி வாழ வேண்டும் என்ற கருத்தைத் தக்கவைத்து வாழ்வது பெண்மைக்கு இழுக்காகும்.

காதல் வாழ்க்கையிலும் சரி, கல்யாண வாழ்க்கையிலும் சரி பெண்கள் ஆண்களுக்கு அடங்கியே வாழ்கின்றனர். கேட்டால் ஆண்மீது உயிரையே வைத்திருப்பதாக உருக்கமான பதில் தருகிறார்கள். பெண்கள் ஆண்கள் மீது உயிரை வைத்ததும் ஆண்கள் அதனைச் சாதகமாகப் பயன்படுத்திப் பெண்களின் உயிரையே எடுக்கின்றனர். பெண் தனது முதுகெலும்பு என வாழும் ஆண்களே அநேகம். சாத்திரங்களிலும் இதிகாசங்களிலும், சமகால நிகழ்வுகளிலும் பாரபட்சமான நிலையையே அனுபவிக்கும் பெண்களைக் கண்டு, கேட்டு, பார்த்து, உணர்ந்த பெண்கள், மீண்டும் மீண்டும் ஆண்களை நம்பி மோசம் போகிறார்கள்.

திருமணம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியே தவிர, திருமணம் தான் வாழ்க்கையில்லை. திருமணத்தின் பின் கண்ணீர் வடிக்கின்ற, புலம்புகின்ற பெண்களால் பெண்களின் அவலம் தொடர்கிறது. அம்மி மிதித்து, அருந்ததி காட்டி தீ சாட்சியாய் மங்கல நாண் பூட்டி துணையாய் ஏற்றுக் கொண்டவளை மனித நேயத்தோடு எல்லா ஆண்களுமே நடத்துகிறார்களா? திருமணத்தின் பின் எல்லாப் பெண்களுமே சந்தோசமாக வாழ்கிறார்களா? குடும்பங்களைச் சுமக்கிற ஒவ்வொரு பெண்களுமே சுமைதாங்கிகள். தன்னுயிரையும் உடலையும் ஆணிடம் ஒப்படைத்து விட்டு கண்ணீரோடு வாழும் பெண்களையும், குடித்துவிட்டு வரும் கணவனின் சப்பாத்துக் கழற்றும் பெண்களையும், சாப்பாடு ருசிக்காவிட்டால் சலனப்படும் பெண்களையும், படுக்கை விரிக்காவிட்டால் பலவசை கேட்கும் பெண்களையும், திருமணத்தோடு புகுந்த வீடு மறக்கும் பெண்களையும் நாமறிவோம்.

படித்த அறிவுள்ள பெண்பிள்ளைகளின் தப்பான வாழ்க்கைத் தெரிவால் அவர்கள் மட்டுமல்ல பெண்களைப் பெற்றவர்களும் வேதனையோடு வாழ்கிறார்கள் பத்துமாதம் சுமந்து பாலூட்டிச் சீராட்டிப் பக்குவமாய் வளர்த்த தாயைக்கூட திருமணத்தின் பின் உறவாட முடியாமல் பெண்கள் உள்ளனர். சில படித்த ஆண்கள் சமூக சேவைகளில் தம்மை அர்ப்பணித்து விட்டு குடும்பம் என்ற ஒன்றினுள் இணைக்கப்படும் போது ஆண் சமூக சேவையோடு ஒன்றித்து வாழ்வதால் குடும்ப வாழ்வில் விரிசல் ஏற்பட்டு விவாகரத்துவரை செல்கிறார்கள். இதனால் பெண் துன்பத்துக்குள்ளாகிறாள். பருவவயதை அடைந்ததும் பெண்களுக்கு வாழ்க்கைத்துணையைத் தேடும் பெற்றோர் ஓர் ஆணிடம் நம்பியே தமது மகளை மட்டுமல்ல, அவளது எதிர்காலத்தையும் ஒப்படைக்கிறார்கள். குடும்பம் என்ற அழகிய கட்டமைப்பை உறுதியாகப் பாதுகாக்க வேண்டியது பெண்மட்டுமல்ல ஆணும்தான். திருமணத்தின் பின்னரும் குடும்பத்தை ஒருபக்கம் வைத்துவிட்டு பொது விடயங்களுக்காக நேரத்தை வீணாக்குவதால் இல்லற வாழ்வின் புனிதம் கெட்டுவிடுகிறது. இது நாளடைவில் பல கோணல்களில் திருப்பங்களை ஏற்படுத்தி வாழ்க்கையைக் கொன்று போடுகிறது.

இன்னும் சில ஆண்கள் தம் குடும்ப உறவுகளை முன்னிலைப்படுத்திக் குடும்பங்களில் விரிசலை உண்டுபண்ணுகின்றனர். இன்று விவாகரத்தை எதிர்நோக்கியிருக்கும் குடும்பங்கள் புரிந்துணர்வின்மையாலும் குடும்பம் மீது இறுக்கமான பிணைப்பின்மையாலுமே நீதிமன்ற வாசல்களில் நிற்கின்றன. எது எப்படி இருப்பினும் பெண்கள் சிந்தித்து வாழவேண்டும். வெறுமனே ஆண்களைக் குறை கூறுவதை விடுத்து அடிமைத் தளையறுத்து வாழ வேண்டும்.ஆணாதிக்கத்தின் வலையை அறுத்தெறிந்து வெளி வரவேண்டும் பெற்றோரால் தேடப்படும் வாழ்க்கைத்துணையோ அல்லது காதலில் தேடப்படும் வாழ்க்கைத் துணையோ நல்ல துணையாக இருக்காவிட்டால் ஒதுங்கி வாழவேண்டுமே தவிர சுமைதாங்கியாக வாழநினைக்கவே கூடாது. வாழ்க்கை என்பது மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமே தவிர விரைவில் சாவை ஏற்படுத்தி விடக்கூடாது. உணர்ந்திடு பெண்ணே.

## இதற்குத் தீர்வுதான் என்ன?

பொதுவான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் ஊடகங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன, உதாரணமாக ஒரு கிராமத்தினுடைய பிரச்சினைகள், அந்த மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்றவை, செய்தி வடிவில் ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன, இது மறுக்கப்படமுடியாத உண்மை, ஒருவருடைய தனிப்பட்ட விடயங்களை அவருடைய உறவினர்களிடம் பரிமாறிக் கொள்ள வேண்டுமானால் அதற்கும் ஊடகங்களைக் கையாளலாம், இதற்கு உதாரணமாக சாவு அறிவித்தல்கள், விற்பனைகள். போன்றவற்றைக் கூறலாம், இவற்றை விளம்பரங்கள் மூலமாக மேற்கொள்ள முடியும், பணம் படைத்தவர்கள், ஓரளவு வசதிகள் கொண்டவர்கள், படித்தவர்கள், இந்த விளம்பரங்களைப் பிரசுரிப்பார்கள், அவர்களுடைய உறவினர்களும் அவரால் வெளியிடப்படும் தகவல்களைப் படித்து விளங்கிக் கொள்வார்கள்.

ஒரு கிராமத்தில் உள்ள பாமர மக்கள் இந்த தனிப்பட்ட விடயங்களைப் பரிமாறிக் கொள்வதானால் என்ன செய்யவேண்டும்? அவர்களுடைய தகவல்கள் மற்றயவர்களுக்குச் சென்றடைய வேண்டுமானால் அதற்கான உத்தி என்ன? உதாரணமாக கிராமத்தில் உள்ள முதியவர் ஒருவர் சாவடைந்தால் அந்தத் தகவலை உறவினர்களிடம் பரிமாறிக் கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதே என்னுடைய கேள்வியாக இருக்கின்றது,

முன்னர் இத்தகைய சாவு அறிவித்தல்களை ஒலிபெருக்கிகள் மூலம் தெரியப்படுத்தியிருந்தோம், விடியற்காலையில் முச்சக்கர வண்டி ஒன்றில் ஒலிபெருக்கியைக் கட்டி எங்களுடைய உறவினர்கள் இருக்கும் பகுதிகளுக்குச் சென்று தகவல்களைக் கூறினோம், இந்தத் தகவல்கள் மூலம் அனைத்து உறவினர்களும் நடந்த விடயத்தைத் தெரிந்து கொண்டு விடியும் போது சாவு வீட்டிற்கு வருகைதருவார்கள். இது பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்தது. இப்போது கூட இது நடைமுறையில் உள்ள போதும் பொலிஸார் இதை அனுமதிப்பது இல்லை, மீறி அறிவித்தால் அனுமதி இன்றி ஒலிபெருக்கி பாவித்தார்கள் என்று கூறி ஒலிபெருக்கி, முச்சக்கர வண்டி மற்றும் அதனுடைய சாரதி என அனைத்தையும் நீதிமன்றில் முற்படுத்திவிடுகின்றனர். இவை பல இடங்களில் நடக்கின்றன. இந்த நிலையில் ஒரு சாவுச் செய்தியை வசதி இல்லாதவர்கள் எவ்வாறு ஏனைய உறவினர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியும். இதற்கு ஏதாவது உத்திகள் உண்டா?

அண்மையில் சுழிபுரம் பகுதியில் ஒரு முதியவர் இரவு வேளை இயற்கைச் சாவு எய்தியிருந்தார். அவருடைய சாவு அறிவித்தலை ஊடகத்தில் பிரசுரிப்பதற்கு அவர்களிடம் பணம் இல்லை, மாறாகப் பிரசுரித்தாலும் விடியும்போது அதை உறவினர்கள் பார்ப்பார்களா என்ற சந்தேகம். எனவே ஒலி பெருக்கி மூலமாக உறவினர்களுக்குத் தகவல்களை வழங்க முடிவு செய்யப்பட்டது, இருந்தாலும் அதற்கான அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும் என அங்கிருந்த பெரியவர்கள் தெரிவித்தார்கள், உடனே பொலிஸாரிடம் சென்று அதற்கான அனுமதியைப் பெற்றுவருவோம் எனக் கூறி நானும் தம்பியும் சென்றோம், பொலிஸ் நிலையம் என்றால் அங்கு எப்படி இருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லைதானே. அப்படியே அந்தப் பொலிஸாரும் இருந்தார்கள். அங்கிருந்த பொலிஸ் ஒருவரிடம் விடயத்தைக் கூறி அனுமதி பெற வந்தேன் என்றேன். அவர் இன்னும் ஒருவரிடம் கையைக் காட்டி அனுப்பினார், அவரிடம் சென்று மறுபடியும் விடயத்தை கூறி அனுமதி பெற வந்தேன் என்றேன். அவரும் இன்னும் ஒருவரிடம் கையைக் காட்டி விட்டார். அவரிடம் சென்று சில மணி நேரம் காத்திருந்தேன், அவர் சில பைல்களைப் புரட்டி எதையோ பார்த்து விட்டு "ஏன் வந்தாய்?" எனக் கேட்டார். மீண்டும் அவரிடம் விடயத்தைக் கூறினேன். அவர் என்னை மேலிருந்து கீழ் நோக்கி பார்த்து, சவுண்ட் சட்டம் தெரியுமா என கொச்சை தமிழில் சேட்டார். நான் தெரியாது என்றேன். சாவு அறிவித்தல்களுக்கு அனுமதியில்லை. மீறி எவராவது அறிவித்தால் கைது செய்வோம் என்றார். இதை மீறி நான் ஒன்றும் செய்ய முடியாது உடனே திரும்பி விட்டேன். சாவு அறிவித்தல்களைச் செய்யும்போது தமக்கு அறிவிக்காமல் அறிவித்தார்கள். அதனால் கைது செய்தோம் என்று பொலிஸார் கூறுவதற்கும் சந்தர்ப்பம் இருக்கின்றது, ஏற்கனவே பொலிஸாரைப் பற்றிய தகவல்கள் ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன. அவை பற்றியும் நான் அறிந்திருந்ததால் இந்த விடயத்தை சாவு வீட்டில் இருந்த பெரியவர்களுக்குத் தெரியப் படுத்தினேன். அவர்களும் சட்டத்திற்குக் கட்டு பட்டவர்களாக வாயை மூடி இருந்தார்கள். மறுநாள் சாவு வீட்டில் அந்த முதியவருக்கு வேண்டப்பட்ட பலர் வருகை தரவில்லை, ஓரிரு நாள்களின் பின்னர் விடயம் தெரிந்து அவர்கள் வந்திருந்தார்கள், வந்தவர்கள் தமக்குத் தெரியாது என்று கூறிக் கவலையடைந்தனர்.




ஆக இதற்கு என்ன தீர்வு உள்ளது? தொலைபேசி வாயிலாக எத்தனை பேருக்குத் தெரியப்படுத்துவது? இதைத் தெரியப்படுத்துவதற்கு அவர்களிடமும் தொலை பேசி இருக்க வேண்டுமே. சமூக வலைத்தளங்கள் ஊடாகத் தகவல்களைப் பரிமாறி கொள்வதற்கு அவர்களால் முடியாது, காரணம் ஏற்கனவே கூறியிருந்தேன். இதை போன்று பலர் சாவு அறிவித்தல்களைப் பரிமாறிக் கொள்வதில் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளார்கள். இவை கிராமப் புறத்தின் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. இதற்குத் தீர்வுதான் என்ன?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"சார்... கொஞ்சம் வெளிய வாரீங்களா..?"



"கொஞ்சம் பொறுங்கோ டாக்டர், ஒரே ஒரு ஸ்டேட்டஸ் போட்டுட்டு வாரேன்..."

இந்த உலகில் பாவப்பட்ட ஒரு பொருள் இருக்குமென்றால் அது செல்போன்தான்



எல்லார் பேச்சையும் கேட்க வேண்டி இருக்கே....



ஓரமாப் போடா பரதேசி...!!!


# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | 9 | | 3 | | 6 |
| | | 3 | | | 7 | 2 | | 9 |
| | 5 | | | 3 | | | | 7 |
| 3 | | 4 | | | | | | |
| | | | | | | 8 | 6 | 3 |
| 2 | | | 3 | | 9 | | 7 | |
| | | | 1 | | 4 | 7 | 3 | |
| | 4 | | 9 | | 3 | | | |
| | 3 | | | | 2 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 8 | 9 | 3 | 6 | 1 | 7 |
| 6 | 1 | 8 | 7 | 2 | 5 | 3 | 4 | 9 |
| 9 | 3 | 7 | 1 | 4 | 6 | 8 | 5 | 2 |
| 7 | 8 | 6 | 2 | 3 | 1 | 5 | 9 | 4 |
| 5 | 4 | 1 | 6 | 7 | 9 | 2 | 3 | 8 |
| 3 | 2 | 9 | 4 | 5 | 8 | 1 | 7 | 6 |
| 1 | 9 | 2 | 3 | 6 | 4 | 7 | 8 | 5 |
| 4 | 6 | 3 | 5 | 8 | 7 | 9 | 2 | 1 |
| 8 | 7 | 5 | 9 | 1 | 2 | 4 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





**சௌமியா** @sowmya_11

யாருக்கும் எதற்கும் அடிமை ஆகாத வரையே, உன் வாழ்க்கை நீ நினைத்தபடி சந்தோசமாக இருக்கும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நேர்மை எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். புதிதாக வீடு, வாகனம் வாங்க யோகமுண்டாகும்.

**இடபம்:** குடும்பப் பிரச்சினையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் படிப்படியாக வளர்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உடல்நலனுக்காக மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். குடும்பச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**கடகம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியான, புதிய வாய்ப்பு கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**சிங்கம்:** மனதில் தற்பெருமை எண்ணம் ஏற்படலாம். குடும்ப பெரியவர்களின் வார்த்தைகளை மதித்து செயற்படவும். தொழில், வியாபாரத்தில் சுமாரான அளவில் பணம் கிடைக்கும். போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம்.

**கன்னி:** பேச்சில் சாமர்த்தியம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணக்கடனில், ஒரு பகுதியை செலுத்துவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** பிறர் உங்களைத் தவறாக கருதும் சூழல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**தனுசு:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காக பாடுபடுவர். சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**மகரம்:** உடல்நலனில் அக்கறை தேவை. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். வருமானம் எதிர்பார்த்ததை விட அதிகமாகும். பிள்ளைகளின் செயற்பாடு மனதிற்கு மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** சிலர் சுயநலத்துடன் உங்களை அணுகுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மீனம்:** அன்றாடப் பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் மூலதனம் செய்வீர்கள். வருமானம் பன்மடங்கு உயரும். உறவினர்கள் அன்பு பாசத்துடன் நடந்து கொள்வர்.

# பூனை நடிகராக நடிக்கும் 'மியாவ்'

இந்திய திரை வரலாற்றிலேயே முதன் முறையாக, பெர்சியன் வகை பூனை ஒன்று நடிகராக நடிக்கும் 'மியாவ்' என்றொரு த்ரில்லர் படம் தயாராகி வருகிறது. இது தொடர்பாக படத்தின் இயக்குநர் சின்னாஸ் பழனிச்சாமி கூறியதாவது:

இது 'செல்ஃபி' என்ற பெயர் கொண்ட ஒரு பூனையை பற்றிய கதையாகும். குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் இந்தப் பூனை எவ்வாறு நான்கு இளைஞர்களை பழிவாங்க முடிவெடுக்கிறது என்பது பற்றியும், அதன் பின்பு அந்த இளைஞர்களுக்கும், பூனைக்கும் இடையே நடக்கும் போராட்டமே இந்த கதையின் மையப் புள்ளியாகும்.

நாம் நினைத்த அனைத்தையும் ஒரு பூனையைக் கொண்டு செய்ய வைக்க முடியாது என்பதை உணர்ந்திருப்பதாக கூறிய பழனிச்சாமி, "அதனால் பெரும்பாலான காட்சிகளை 'கணினி கிராபிக்ஸ்' முறையில் உருவாக்கியிருக்கிறோம்" என்று தெரிவித்தார். கிட்டத்தட்ட 550 காட்சிப் பதிவுகளில் 'மாஸ்டர் கிளாஸ்' கிராபிக்ஸ் காட்சிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிஜ பூனைக்கும், கிராபிக்ஸ் முறையில் உருவாக்கப்பட்டுள்ள பூனைக்கும் இடையே எந்த வித்தியாசத்தையும் கண்டுபிடிக்க முடியாது.

இந்தப் படத்தை இளைஞர்கள் மற்றும் குடும்பத்துடன் சேர்ந்து பார்ப்பதற்கு ஏற்ற வகையிலான 'காமெடி த்ரில்லர்' என்று கூறிய அவர், இந்தப் படம் வளர்ப்புப் பிராணிகளை வைத்திருப்போருக்கு சமர்ப்பணம் என்றும் தெரிவித்தார். இந்தப் படத்தை பார்த்த பிறகு பூனைகளின் மேல் ஒரு காதலே உண்டாகும் என்றும் அவர் தெரிவித்தார்.





மருத்துவர் : இந்த மருந்தை காலையில வெறும் வயிற்றில சாப்பிடுங்க.
நோயாளி : ... கூடப் போட்டிருக்கக் கூடாதா டாக்டர்?



உன் காதலனைக் கட்டி வைச்சு உதைக்கப் போறேன்...! முதல்ல கட்டி வையுங்க. நானே உதைச்சுக்கிறேன்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சூடேற்றும்போது விஷமாக மாறக்கூடிய உணவுகள்



மீதமுள்ள உணவை வீணாக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் அவற்றைச் சுட வைத்து மீண்டும் சாப்பிடுவது என்பது நம்மில் அனைவருமே செய்யக்கூடியவை. அப்படி செய்வது சிக்கனம் தான் என்றாலும், அதனை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படி செய்கையில் சில உணவுகள் விஷத் தன்மையைப் பெற்றுவிடும். இதன் படி 7 பயங்கரமான உணவு வகைகள் உள்ளன. இவ்வகை உணவுகளை மீண்டும் சுட வைக்கும் போது, அவை அதன் ஊட்டச்சத் துக்களை இழந்துவிடும். அதில் சில வகை உணவுகள், விஷமாகக் கூட மாறிவிடும். அந்த வகை உணவுகளை மீண்டும் சுட வைப்பதைத் தவிர்க்கவும்.

- **உருளைக்கிழங்குகள்:** இந்த வகை கிழங்கு நம் உடல் ஆரோக்கியத்திற்கு பெரிய நன்மையை அளிப்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. அதில் ஊட்டச்சத்துக்கள் மிக உயர்ந்த அளவில் உள்ளது. ஆனால் எவ்வளவு தூரம் அதனை குளிர்சாதன பெட்டியில் வைக்கிறீர்களோ, அவ்வளவு தூரம் அதன் ஊட்டச்சத்துக்களை அது இழந்துவிடும். அவற்றை மீண்டும் சுட வைப்பதால், அது நச்சுத்தன்மையை அடைந்துவிடும்.
- **கோழிக்கறி:** இன்றைய அவசர உலகில், மீண்டும் சுட வைக்கப்படும் உணவில் முக்கிய பங்கை, கோழிக்கறி பெறுகிறது. ஆனால் அதனை மீண்டும் சுட வைத்து, உண்ணுவது மிகவும் ஆபத்தானதாகும். அதற்கு காரணம் இந்த உணவில் உள்ள அளவுக்கு அதிகமான புரதம். இதனை மீண்டும் சுட வைக்கும் போது நமக்கு செரிமான பிரச்சினைகளை ஏற்படுத்தும். அப்படி உண்ண வேண்டுமானால், அதை அப்படியே குளிர்ச்சியாகவே உண்ணுங்கள்.
- **காளான்கள் :** இதனை தயார் செய்த உடனேயே சாப்பிட்டு விட வேண்டும். அதனை ஆறப் போட்டு விட்டால் அதிலுள்ள புரதத்தின் அளவுகளில் மாற்றம் ஏற்படும். இதனால் செரிமானம் கஷ்டமாக இருக்கும்.
- **கீரை வகைகள்:** எந்த வகை கீரைகளையும், மீண்டும் சுட வைப்பது கூட ஆபத்தானதே. கீரைகளிலும் நைட்ரேட்டின் அளவு அதிகமாக இருக்கும். அதனால் அதனை மீண்டும் சுட வைக்கும் போது, ஒட்டு மொத்த கீரை முழுவதுமே 100 வீதம் நைட்ரேட்டாக மாறிவிடும். இது உடலுக்கு புற்றுநோய் ஆபத்தை ஏற்படுத்தக் கூடும்.

## நாளை

**ஆடி-25**

செவ்வாய்க்கிழமை 09.08.2016
திதி: ஷஷ்டி மு.ப.08.08 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.ப.12.34 வரை
ராகுகாலம்: 03.04-04.34 வரை
சுபநேரம்: 10.34-12.04 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | – | 700 |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 500 | – | 480 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 400 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 200 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஒரா | 400 | 400 | – | – | 500 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | – | 340 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | – | – |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 200 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 100 | – | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 120 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 80 | 100 | 100 | 100 | 80 | 80 | 90 | 80 |
| கரட் | 140 | 160 | 160 | 160 | 140 | 180 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 50 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 50 | 60 | 80 | 30 | – | 100 | 100 | 100 |
| பாகல் | 120 | 140 | 160 | 140 | 120 | 160 | 240 | 200 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 160 | – | 80 | – | 120 | 180 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 80 | 80 | 70 | 100 | 90 | 70 |
| பூசணி | 60 | 60 | 80 | 80 | 70 | 100 | 70 | 100 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 | 60 | 150 | 120 | 70 |
| வாழைக்காய் | 120 | 100 | 60 | 120 | 100 | 80 | 70 | 70 |
| கீரை | 20 | 20 | 40 | 20 | 30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 350 | 300 | 280 | 600 | 400 | 400 |
| புடோல் | 40 | 70 | 40 | 60 | 60 | 80 | 70 | 60 |
| கோவா | 120 | 120 | 120 | 140 | 120 | 80 | 90 | 120 |
| வெண்டி | 60 | 50 | 40 | 80 | 60 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 180 | 200 | 160 | 190 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 160 | 120 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 22 | 40 | 25 | 20 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 | 120 | 120 | 200 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 200 | 240 | 160 | 200 | 200 | 200 | 170 |
| இராசவள்ளி | 160 | 300 | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 140 | 120 | 100 | 400 | 200 | 120 |





## எள்ளுருப்பா

### தேவையான பொருள்கள்

எள்ளு – 500 கிராம்
சீனி – தேவையான அளவு
உளுத்தம்மா – 200 கிராம்

### செய்முறை

முதலில் ஒரு மிக்சியில், அரைவாசி எள்ளை இட்டு நன்றாக அரைத்துக் கொள்ளுங்கள். நன்றாக அரைபட்டதன் பின்பு அதை எடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்துவிட்டு, மீதி எள்ளையும் முன்பு அரைத்தது போல் நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் உளுத்தம்மா, சீனி, அரைத்த எள்ளுமா என்பவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு கலக்கிக் கொள்ளுங்கள். மீண்டும் மிக்சியில் நீங்கள் கலந்த கலவையை நன்றாக அரைபடக்கூடிய அளவு போட்டு சிறிது நேரம் நன்றாகக் கலந்துகொள்ளுமாறு அரைத்துக் கொள்ளுங்கள். அரைத்த கலவையை வேறு பாத்திரத்தில் போட்டுவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் அரைத்து முடித்த பின் நன்றாகக் கொதித்த வெந்நீரை கலவையினுள் விட்டுக் கொள்ளுங்கள். கலவையை களிபோன்று வரும் வரை வெந்நீர் சேருங்கள். கொஞ்சம் கூடினால் சிறிது நேரம் விட்டு விட்டால் இறுக்கமாக வந்துவிடும். பின் உங்களுக்கு விரும்பிய அளவில் உருண்டைகளாக பிடித்துக் கொள்ளலாம். உருண்டைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டால் தான் அதிலிருந்து எண்ணைத்தன்மை வெளியேறி உருண்டை பிடிப்பதற்கும் இலகுவாக இருக்கும். மிக்சியில் அரைப்பதை விட வீடுகளில் உரல் உள்ளவர்கள் உரலில் எள்ளை இடித்து எள்ளுப்பா செய்யும்பொழுது அதன் சுவை இன்னும் அதிகமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடியா சுவர் சிறுவர் போசாக்கு புதிய பொதியிடலுடன் அறிமுகம்



உலகத்தரம் வாய்ந்த பீடியா சுவர் (PediaSure) சிறுவர் சத்துணவை புதுத்தோற்றத்துடன் இலங்கை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதாக பீடியா சுவர் உற்பத்திகளை மேற்கொள்ளும் அபோட் நியூட்ரிசன் நிறுவனத்தின் உள்ளூருக்கான ஒரே முகவர் நிறுவனமான சி.ஐ.சி நிறுவனம் அண்மையில் அறிவித்தது.

பீடியா சுவர் புதிய பொதியை அறிமுகப்படுத்தும் வைபவம் மிகக் கோலாகலமாக கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. அந்த வைபவத்துக்கு சி.ஐ.சி ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் குழும முகாமைத்துவ உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் அபோட் நியூட்ரிசன் நிறுவனத்தின் தெற்கு ஆசிய வலயத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

6 புதிய பொதியிடல் மூலம் வெளிவந்துள்ள, பீடியா சுவர் மேலதிக போசாக்கானது வெனிலா மற்றும் சொக்கலட் சுவைகளிலும் உள்ளதுடன், நாட்டிலுள்ள பிரதான கடைகளில் அவற்றைக் கொள்வனவு செய்ய பாவனையாளர்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

1 முதல் 10 வயது வரையான சிறுவர்களுக்கு முழுமையான மற்றும் சமமான போசாக்கை வழங்கும் பீடியா

**வணிகம்**

சுவர் பால் கிளாஸ் ஒன்றின் ஊடாக சிறுவர்களின் போசாக்குக்குத் தேவையான புரதம் உள்ளிட்டவை கிடைப்பதால் சிறுவர்களின் உயரம், பாரம், சரீரம் மற்றும் மூளை வளர்ச் சிக்கு அதன்பங்களிப்பு இன்றியமையாதது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அபோட் நியூட்ரிசன் நிறுவனத்தின் இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் மற்றும் மாலைத்தீவு தொடர்பான சிரேஷ்ட முகாமையாளர் சுபாதோஷ் சௌத்ரி, பீடியா சுவர் புதிய பொதியிடல் புதிய விலையின் கீழ் அறிமுகப்படுத்தக் காரணம், பாவனையாளர்களுக்கு பீடியா சுவர் உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே.

தற்போது சந்தையில் இருக்கும் புதிய பீடியா சுவர் பொதியிடலை கொள்வனவு செய்து தமது பிள்ளைகளுக்குத் தேவையான போசாக்கை வழங்க பெற்றோரால் முடியும் என குறிப்பிட்டார். (த)

# டி.எவ்.சி.சி அறிமுகப்படுத்தும் அபூர்வமான சேமிப்புத் திட்டம்

கூடுதலான வட்டி சம்பாதிக்கும் வாய்ப்பைத் தனிப்பட்ட மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வர்த்தன எக்ஸ்ட்ரீம் சேவர் என்ற புதிய சேமிப்புத் திட்டத்தை டி.எவ்.சி.சி வங்கி அண்மையில் அறிமுகப்படுத்தியது. மாதாந்தக் கணக்கு மீதிக்கேற்ப வேறுபடும் விதத்தில் கவர்ச்சியான 6 வீதம் முதல் 9வீதம் வரையான வட்டியை இந்தக் கணக்கு வழங்குகின்றது என்று கூறப்பட்டது.

வர்த்தன எக்ஸ்ட்ரீம் சேவர் கணக்கை ஆரம்பிப்பதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச வைப்புத் தொகை ரூ.5,000 மட்டுமே எனவும், வட்டி நாளாந்த மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்டு மாதாந்தம் கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும், ரூ.1,000 குறைந்த பட்ச மீதியாகக் கொண்டிருப்பவர்களும் கூடிய வட்டியைப் பெற முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

கணக்கு வைப்பாளர்கள் நாடெங்குமுள்ள 3,500க்கு மேற்பட்ட டி.எவ்.சி.சி வங்கி மற்றும் லங்காபே ஏ.ரி.எம்கள் ஊடாக எவ்வளவு தொகைப் பணத்தையும் கட்டணமின்றி மீளப்பெறலாம் என்பதுடன் வாடிக்கையாளர்கள் தமது சேமிப்பில் 90வீதம் வரையான தொகையை சலுகை வட்டியின் அடிப்படையில் முற்பணமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டது.

புதிய சேமிப்புத் திட்டம் பற்றி வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்ஜுன் பெர்னாண்டோ தகவல் தருகையில் தமது சேமிப்புக்களிலிருந்து கூடிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள கணக்கு வைப்பாளர்களுக்கு இடமளிக்கும் வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர் கணக்கை அறிமுகப்படுத்துவது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

பல்வேறு மட்டங்களிலுள்ள வாடிக்கையாளர்களுக்கும் இலகுவான மற்றும் அதிக பெறுமதி தரும் சேமிப்புத் திட்டம் ஒன்றை வழங்குவதே எமது நோக்கமாகும்-என்று கூறினார். (த)



## ஏற்றுமதி மூலம் 2400 மில்லியன் ரூபா வருமானமாக கிடைத்தது

கடந்த வருடம் கடலுணவு ஏற்றுமதி மூலம் 2400 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டதாகக் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில இடம்பெற்ற நிகழ்வில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையில் கடற்றொழில் உற்பத்தியானது மேம்படுத்தப்படவேண் டும். அதன்மூலம் அந்நியச் செலாவணியை அதிகரிக்க முடியும் எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (த)

# 'பே மாஸ்ரர்' புதிய வடிவத்தை உருவாக்கிய கொமர்ஷல் வங்கி

பே மாஸ்ரரின் (Pay Master) புதிய வடிவத்தின் அறிமுகம் பற்றி கொமர்ஷல் வங்கி அறிவித்தது.

வங்கிதனது கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு மொத்தமான கொடுப்பனவுக்காக அறிமுகம் செய்த அதிநவீன முறையே இதுவாகும் என்று கூறப்பட்டது.


மேம்படுத்தப்பட்ட செயற்பாடுகள், கட்டுப்பாடுகள் மற்றும் புதிய மட்ட பாதுகாப்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதே இந்த முறையாகும் என வங்கி கூறியுள்ளது.

கம்பனிகளால் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுக்காக இது பரவலாகப் பாவிக்கப்படுகின்றது. தமது வாடிக்கையாளர்களுக்கு தரகுகள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான பல்வேறு வகை கொடுப்பனவுகள் என்பனவற்றுக்காகவும் இதுபயன்படுத்தப்படுகின்றது என்றும், பே மாஸ்ரர் தற்போது மொத்தமாக கொடுப்பனவு செய்வதற்காக இரட்டை மற்றும் பல் மட்ட அங்கீகார முறை என்பனவற்றைக் கொண்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டது.

பாவனையாளர் நிர்வாக வசதி மற்றும் குழு ரீதியான செயற்பாடுகளுக்கான வசதி என்பனற்றையும் இது கொண்டுள்ளதாக வங்கி அறிவித்தது.

பாதுகாப்புத் தொடர்பான எல்லா மேம்படுத்தப்பட்ட வசதிகள் செயற்பாடுகள் மற்றும் ஏனைய இயல்புகளையும் இந்தப் புதிய பிரதி கொண்டுள்ளது. இவை கொமர்ஷல் வங்கியின் இணைய வங்கி சேவையால் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## நுட்பம்



### தானாகவே அழியக் கூடிய மின்கலம் கண்டுபிடிப்பு

தானாக அழியக் கூடிய மின்கலம் ஒன்றை லோவா ஸ்டேட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாட்டில் மின்சாரம் என்பது அவசியமாகும். மின்சாரத்தை வழங்குவதில் மின்கலங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

தற்போது உருவாக்கப்படும் மின்கலங்கள் நீண்ட காலத்திற்கு பயன்படுத்தக்கூடிய வகையில் காணப்படுகின்றன. பாவனைக் காலம் முடிந்ததும் அவை இலகுவில் அழிக்க முடியாது இருப்பதால் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இதைக் கருத்திற்கொண்டு தற்போது தானாக அழியக் கூடிய மின்கலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை லோவா ஸ்டேட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

இம் மின்கலமானது லித்தியம் அயனைக் கொண்டு 2.5 வோல்ட் மின்னழுத்தத்தை வழங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கல்குலேட்டர் ஒன்றுக்கு தொடர்ச்சியாக 15 நிமிடங்கள் வரை மின்சாரத்தை வழங்கக்கூடிதாகவும், நீரில் இட்டவுடன் 30 நிமிடங்களில் தானாகவே அழியக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தானாக அழிவதால் இம்மின்கலத்தினால் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

### வேறு பெயரில் வருகிறது ஓர்குட்

ஓர் குட் சமூக வலைதளம் மீண்டும் வர உள்ளது. ஆனால் மீண்டும் வரப்போவது ஓர்குட் சமூக வலைதளம் அல்ல அதனை உருவாக்கிய ஓர்குட் பைகோட்டன் என்பவரின் புதிய சமூக வலைதளமான ஹலோதான்.

கடந்த பத்து வருடங்களில் இணையவாசிகளை அதிகம் கவர்ந்த சமூக வலைதளம் என்றால் அது ஓர் குட் தான். ஆனால் முகப்புத்தகம், டுவிற்றர் போன்ற சமூக வலைதளங்களின் வரவால் ஓர் குட்டால் ஈடுகொடுக்க முடியவில்லை.

2014ஆம் ஆண்டு ஓர் குட் ஆனது மூடப்பட்டது. இருப்பினும் இப்பொழுது அதே போன்ற சமூக வலைதளம் ஹலோ என்ற பெயரில் வந்துள்ளது.

இந்த சமூக வலைதளமானது அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, கனடா, மற்றும் பிரேசில் போன்ற நாடுகளில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இந்தியாவில் ஓகஸ்ட் மாதம் அறிமுகப்படுத்தவும் அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஆனால் பிரபலமாக உள்ள பேஸ்புக், டிவிட்டர், இன்ஸ்டகிராம், மற்றும் ஸ்னப்சாட் போன்ற சமூக வலைதளங்களுடன் போட்டி போட்டு ஹலோ சமூகவலைதளத்தால் மக்கள் மத்தியில் பிரபலமடைய முடியுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்தின் மத்திய தளமாக இலங்கையை மாற்றவேண்டும்




தேரவாத பௌத்த மதம் தொடர்பில் புரிந்துணர்வை வழங்கும் உலகின் மத்திய தளமாக இலங்கையை மாற்ற வேண்டும். இதன் மூலம் நற்குணமுள்ள சமூகத்தை உருவாக்க முடியும். இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பௌத்தயா தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொலன்னறுவை கல்விகாரைக்கு ஒளியேற்றும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில், நச்சுப் பொருளற்ற அரிசி வகைகளினால் சமைக்கப்பட்ட 108 சோறுவகைகளும், 1008 கறிவகைகளும் கொண்ட பௌத்த பூசையும் ஒரு லட்சம் பக்தர்களுக்கான அன்னதானம், சிறுநீரக நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உலர் உணவுகள், மருந்துப் பொருள்களை அன்பளிப்புச் செய்தல், பாடசாலைப் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இடம்பெற்றன. அதேபோன்று 5 ஆயிரம் தேரர்களுக்கு எண்வகைப் பூசைப் பொருள்களை வழங்குதல், கிரிவெஹர விகாரைக்கு ஆகாயத்திலிருந்து மலர்களைத் தூவுதல் உட்பட கல்விகாரைக்கு 1008 மருந்து வகைகளைக் கொண்டு ஒரு மருந்துப் பூசையும் செய் யப்பட்டது.

வாசனை எண்ணையைப் பயன் படுத்தி 84 ஆயிரம் விளக்கு களைக் கொண்ட ஒரு பூசையும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்திற்கு மத்தியில் 84 ஆயிரம் வர்ண மின்சார விளக்குகளைக் கொண்ட கிரிவெஹர விகாரைக்கு ஜனாதிபதி ஒளி யேற்றி வைத்தார். (வ-5)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ ஆரம்ப தினமான இன்று கொடியேற்றத் திருவிழா இடம்பெறவுள்ள நிலையில் நேற்று மாலையில் சாந்தி இடம்பெற்று வைரவர் வீதி உலா வரும் காட்சி. (வ-101)

# அரசியல்வாதிகள் பலருக்கு மனநோய்

## பிரதி அமைச்சர் எரான் தெரிவிப்பு


கொழும்பு, ஓக. 8

அரசியல்வாதிகளில் பலர் இன்று மன நோயாளிகளாக இருக்கின்றார்கள் என பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்தியாவிற்காக பாலம் ஒன்றை நிர்மாணிக்க போவதாக அரசியல்வாதிகள் சிலர் கூறி, அதற்கு அவர்கள் எதிர்ப்பை வெளியிடுகின்றனர்.

உண்மையைக் கூறப் போனால், இந்தியாவிற்கு பாலம் அமைத்து கொடுப்பதற்கான எந்தவித அவசியமும் அரசுக்குக் கிடையாது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே இதயபூர்வமான பாலம் அமைப்பதே தேவையாகவுள்ளது. இந்தியாவிற்கு அவர்களது பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பன்னாட்டு உறவுகளை முன்னெடுத்து செல்வதே அவசியமாகவுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இந்திய சந்தை வாய்ப்புக்கள் அவசியம் - என்றார். (வ-5)



# கிளிநொச்சி வைத்தியசாலையில் கழிவு நீர் சுத்திகரிப்புத் தொட்டி

*நிதி கிடைத்ததும் பணிகள் ஆரம்பம் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஓக. 8

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை, மீள் சுழற்சி செய்து சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மாவட்டச் செயலகத்தினால் சுத்திகரிப்புத் தொட்டி அமைப்பதற்கான நிதி வழங்கப்பட்டதும், இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜெயராசா.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் வைத்தியசாலையின் பின்புறமாகவுள்ள ஆனந்தபுரம், இரத்தினபுரம் கிராமங்களை ஊடறுத்து கிளிநொச்சி நகரக் குளத்தில் கலப்பதாக மக்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். இந்தக் குளத்து நீரை அருந்தும் கால் நடைகளும் இறப்பதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ஒரு நாள் தேவைக்கு 70 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் பயன்படுத்தப்படுகின்றது. அங்கிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்கான தொட்டி அமைக்கப்பட்டு சில வாரங்களிலேயே அது பழுதடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் குளோரின் இடப்பட்டே வெளியேற்றப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

பொதுமக்களின் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து, கழிவு நீரைத் தேக்கி சுத்திகரிப்புச் செய்து அதனைப் பூந்தோட்டங்களுக்குப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

"மாவட்டச் செயலகம் மீள்சுழற்சி செய்வதற்கான தொட்டி அமைப்பதற்கு நிதி வழங்குவதற்கு இணங்கியுள்ளது. நிதி கிடைக்கப் பெற்றதும் பணிகள் ஆரம்பிக்கப்படும்" என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இவ்வாறான பொதுச் சுகாதாரத்துடன் தொடர்புடைய விடயங்களைப் பிரதேச சபையும் கண்டுகொள்ளவில்லை என்ற பொதுமக்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில், கரைச்சிப் பிரதேசசபைச் செயலரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் அது பலனளிக்கவில்லை. (வ-5-ரி3-426)

## பொன்னாலை வரதராஜப் பெருமாளுக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக.8

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் பெருந் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி வரலக்சுமி விரதபூசையும், எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். சிறப்பு உற்சவங்களைத்தவிர தினமும் காலை 8 மணிக்கும் மாலை 6 மணிக்கும் உற்சவங்கள் நடைபெறும். அத்தோடு உற்சவ காலங்களில் இரவு 7 மணிக்குகலைநிகழ்வுகளுடன், ஆன்மிக சொற்பொழிவுகளும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (வ-ரி)

## ஒரு கிலோ கஞ்சாவுடன் குடும்பத்தலைவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 8

புன்னாலைக்கட்டுவன்-ஈவினைப் பகுதியில் ஒரு கிலோ கஞ்சாவுடன் குடும்பத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இந்தக் கைது இடம்பெற்றதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இரகசியப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், ஈவினைப் பகுதியில் வைத்து மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்படும் போது அவரிடம் 100 கிராமாகப் பொதி செய்யப்பட்ட 10 கஞ்சாப் பைக்கெட்டுக்கள் இருந்ததாகப் பொலிஸார் கூறினர். நீதிமன்றத்தில் அவரை [illegible] (வ-5-101-107)

# வரி செலுத்தாத இலத்திரனியல் பொருள்களுடன் நால்வர் கைது

சுங்க வரி செலுத்தாது இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான அலைபேசிகள் உட்பட இலத்திரனியல் பொருள்களுடன் நான்கு பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறப்பு அதிரடிப்படையின் கொனஹேன முகாமின் அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்ட தேடுதலில் விமானநிலையத்தில் இருந்து வெளியேறும் பிரதான வாயிலில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

2 ஆயிரத்து 309 செல்போன் மற்றும் டெப்கள், சிப்கள், அலைபேசி உதிரிப்பாகங்கள், சிகரட்டுக்கள், முக அலங்காரத் திரவியங்கள் என்பன அவர்களிடம் அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன. இவற்றின் பெறுமதி இரண்டு கோடியே 34 இலட்சத்து 33 ஆயிரத்து 978 ரூபா என அதிரடிப்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நான்கு பேரும் மேலதிக விசாரணைகளுக்காக சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். சந்தேக நபர்கள் 4 பேருக்குமாக 21 இலட்சம் ரூபா தண்டமாக விதித்தார் சுங்க அத்தியட்சகர். (வ-21)

# திருநெல்வேலியில் பால்குட நடைபவனி



யாழ்ப்பாணம்,ஓக. 8

ஆடிப்பூரத்தினையொட்டி மேல் மருவத்தூர் சுயம்பு ஆதி பராசக்தி வழிபாடு திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இருந்து புறப்பட்ட பக்தர்களின் நடைபவனியுடன் நேற்று இடம் பெற்றது.

மேல்மருவத்தூர் சுயம்பு ஆதி பராசக்தி வார வழிபாட்டு யாழ்ப்பாண மன்றத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆடிப்பூர பெருவிழா நடை பவனியின் ஆரம்பத்தில், முத்துமாரி ஆலய முதன்மைக் குருவின் பூசை வழிபாட்டுடன் பக்தர்கள் பால் குடம் ஏந்திவந்தனர்.

குறித்த பவனியானது கல்வியங்காடு ஆதிபராசக்தி வழிபாட்டுமண்டபத்தினை அடைந்து சுயம்பு ஆதிபராசக்திக்கு பால் அபிசேக ஆராதனைகள் இடம் பெற்று, அதனைத் தொடர்ந்து பக்தர்களிற்கு கஞ்சியும் வழங்கப்பட்டது.

குறித்த வழிபாட்டினில் குருமார் முதல் பக்தர்கள்வரை பக்தி பூர்வமாக சிவப்பு ஆடை அணிந்த நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலையை

நிலையத்துக்கு முன்பாகவும் முன்னெடுக்கப்படவுள்ளன.

கவனவீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ள அருட்தந்தை சக்திவேல் தெரிவித்ததாவது:

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது இந்த அரசிலும் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றது. அரசும், தமிழ் அரசியல் கட்சிகளும் பல்வேறு வகையான வாக்குறுதிகளை வழங்கியபோதிலும், அவற்றில் எவற்றையும் நிறைவேற்றவில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று அரசு கூறி வருகின்றது. தற்போது சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் என்பது அதன் நிலைப்பாடு.

தமிழ் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகள் காரணமாக அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளைப் பொறுத்தவரையிலும் அவர்கள் மனோநிலையால் பாதிக்கப்பட்டனர்.

தற்போதைய ஜனாதிபதி, தன்னைக் கொல்வதற்கு முயன்றவர் எனக் குற்றம் சுமத்தப்பட்டவரை விடுதலை செய்தார். அவர் மீதான வழக்குகள் அனைத்தும் மீளப் பெறப்பட்டன. இது அவருடைய தனிப்பட்ட விடயம். அவருடைய தனிப்பட்ட அரசியல் நோக்கத்துடன் தொடர்புபட்டது. அரசியல் தீர்வு என்பது மிகவும் முக்கியமான விடயம். அரசியல் தீர்வுக்கு அவசியமான விடயம் அரசியல் கைதிகள் விடுதலை.

தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் நிகழ்ச்சி நிரலில் இந்த விடயத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அரசுக்கு இதற்கான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். தமிழ் அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் மௌனம் காக்கின்றன. அரசியல் கைதிகளைப் பொறுமை காக்குமாறு கோருகின்றன. இது அவர்களின் இரட்டை வேடத்தைப் புலப்படுத்துகின்றது.

தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்பில் அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்கின்றதா என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். அரசு, தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் வழங்கிய வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை. அதன் பின்னால் உள்ள அரசியல் நோக்கம் என்ன?

தமிழ் அரசியல் கைதிகளை பொறுமை காக்குமாறு கோருவதை தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக, தமிழ் அரசியல் கட்சிகள் குரல்கொடுக்கவேண்டும் – நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அவர்களை எந்த வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். புனர்வாழ்வுகூட தேவையில்லை. விடுதலையேவேண்டும். இதனை முன்நிறுத்தியே நாங்கள் இன்று போராட்டத்தை முன்னெடுக்கின்றோம் - என்றார்.

(வ-5, 4,106)

## நல்லைக்

விழாவும் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

பெருந்திருவிழாக்கான கொடிச் சீலை எடுத்துவரும் நிகழ்வுகள் நேற்றுக் காலை 10 மணியளவில் சம்பிரதாய பூர்வமாக இடம் பெற்றிருந்ததுடன் மாலை 5 மணியளவில் வைரவர் சாந்தியும் திருவீதியுலாவும் இடம்பெற்றன. அத்துடன் ஆலயச்சூழலில் புனிதத்தை பேணுமாறு வேண்டப்பட்டுள்ளதுடன் அதனை அறிவுறுத்தும் வகையிலே ஆலய வீதியைச் சூழ்ந்து சிவப்பு வெள்ளை வர்ணம் பூசப்பட்ட துணிகள் கட்டப்பட்டுள்ளன.

இதேவேளை, நல்லூர்க் கந்தனிடம் வரும் அடியவர்களின் பாதுகாப்புக்காக 750 பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். பெரும்பாலான பொலிஸார் அடியவர்களாகவே இந்து கலாசார உடையில் கடமையாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், சி.சி.ரி.வி கமரா ஊடாக ஆலயச் சூழல் கண்காணிக்கப் படுகிறது. (வ-ரி2)

## குற்றப்பத்திரிகை

பல இடம் பெற்றிருந்தாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.

வடக்கு மாகாண ஆளுநர் பளிகக்காரவினால், தலைமைச் செயலர் ஊடாக விசாரணை மேற்கொள்ள மூன்று பேர் கொண்ட குழு கடந்த ஆண்டு ஜூன் மாதம் நியமிக்கப்பட்டது.

9 பேருக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அவர்களிடமிருந்து விளக்கமும் கோரப்பட்டது. இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு விசாரணை அறிக்கை பாரப்படுத்தப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஆரம்ப விசாரணை என்பதையும், விசாரணை அறிக்கையில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகையும் முன்வைக்கப் படவேண்டும் என்றும், இந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது எனவும் மறுதலித்திருந்தது.

இதனையடுத்து வடக்கு மாகாண தலைமைச் செயலரினால், குற்றப்பத்திரிகை தயாரிப்பதற்கு மூவர் கொண்ட குழு நியமிக்கப் பட்டது. அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர், குற்றச்சாட்டுக்குள் உள்ளாகியிருக்கும் ஒருவர் தன்னுடைய நண்பர் என்பதால் தான் இந்த விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்க முடியாது என்று தலைமைச் செயலருக்கு கடிதம் அனுப்பினார். குழுவில் அங்கம் வகித்த மற்றொருவரான சுகாதார அமைச்சின் செயலாளர், இன்னொரு குழு மேற் கொண்ட விசாரணையின் அடிப்படையில், நாம் குற்றப்பத்திரிகை தயாரிக்க முடியாது. விசாரணை மேற் கொண்ட குழுவே குற்றப் பத்திரிகை தயாரிக்க வேண்டும் என்று தலைமைச் செயலருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

குழுவின் உறுப்பினர்கள் விலகியதைத் தொடர்ந்து தலைமைச் செயலர் அ.பத்திநாதன், தானே நேரடியாக குற்றப் பத்திரிகை தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளதாக அறிய முடிகின்றது.

(வ-5-101)

## அழகிய

குழந்தையை மீட்டுப் பாதுகாப்பு அளித்ததோடு பொலிஸார் ஊடாக வைத்தியசாலையில் சேர்த்தார்.

இளவாலை வடலியடைப்பு பிள்ளையார் கோயிலுக்கு பின்புற வீதியோரமாக உள்ள ஒருவரது வீட்டுக் கேற்றுக்கு முன்பாக நேற்று அதிகாலை 4.30 மணியளவில் குழந்தை மீட்கப்பட்டது.

அந்தக் குழந்தை தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. சிகிச்சையின் பின்னர் குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தில் விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதிகாலை நேரம், அமைதியான சூழல். வீட்டில் இருந்த போது குழந்தையின் அழுகுரல் கேட்டு விழித்தெழுந்தேன். கேற்றடிக்கு வந்து பார்த்தபோது, சதுரமான கடதாசிப் பெட்டிக்குள் அழகான ஆண்குழந்தை ஒன்று அழுது கொண்டிருந்தது என்று அந்தக் குழந்தையை முதலில் கண்ட தாய் ஒருவர் தெரிவித்தார்.

குழந்தை துவாய் ஒன்றினால் சுற்றப்பட்டுக் காணப்பட்டது. அது தொடர்பில் இளவாலைப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு விரைந்த பொலிஸ்குழு, குழந்தையை மீட்டனர். அந்தக் குழந்தையைக் கண்டெடுத்த தாயாரின் உதவியுடன் குழந்தை அதிகாலை 5.30 மணியளவில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

குழந்தையை பரிசோதித்த மருத்துவர், குழந்தைபிறந்து 20 தொடக்கம் 30 நாள்களுக்குட் பட்டதாக இருக்கலாம் என்று தெரிவித்தார்.

குழந்தையைக் கண்டவுடன் தனது பிள்ளைகள் மோட்டார் சைக்கிளில் வீதிக்குச் சென்று யாராவது சந்தேகத்திற்கிடமாக உள்ளார்களா என்பதை தேடிப் பார்த்தனர். வீதியால் பால் கொண்டு வந்த நபர் ஒருவரை விசாரித்த போது, பெண் ஒருவர் தனியாகச் சைக்கிளில் வேகமாகச் சென்று கொண்டிருந்ததனைக் கண்டேன் எனக் கூறினார் - என்றார் சிசுவை முதலில் கண்ட தாய். அது தொடர்பாக விசாரணை மேற் கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,36,101,106,109)

## ஒரு

நான்கு சிறுவர்கள், நான்கு பெண்கள் உள்ளடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட வந்திருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அளவெட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தில் பயணித்த பெண் ஒருவரின் பணம் மற்றும் அலைபேசி என்பன திருட்டுப் போயிருந்தன. இதனையடுத்து சுன்னாகம் பொலிஸார் பேருந்தில் பயணம் செய்த மற்றொரு பெண்ணைச் சோதனை செய்தபோது, அவரிடமிருந்து திருட்டுப்போயிருந்த பணம் மற்றும் அலைபேசி என்பன மீட்கப்பட்டன.

அந்தப் பெண்ணுடன், அவரது தாய் மற்றும் தந்தையும் பேருந்தில் பயணம் செய்திருந்த நிலையில் அவர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டிருந்தனர். புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், தற்காலிகமாக நாவற்குழியில் உள்ள பொது மண்டபத்தில் இவர்கள் தங்கியிருந்தனர் என்றும் விசாரணையில் கண்டறியப்பட்டது. இவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 6 பேர் நாவற்குழியில் தங்கியிருந்த நிலையில் அவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(வ-5-4-107)

**தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து)**
**பொதுச்சபைக் கூட்டம்-28.08.2016**

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்படி வைத்தியசாலை மண்டபத்தில் நடை பெறும்.
பொதுச்சபையில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள பிரேர ணைகள் இருப்பின் அங்கத்தவர்கள் 14.08.2016 இற்கு முன்னர்
செயலாளர், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், தெல்லிப்பழை
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு
கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
ஆ.சுதன், செயலாளர், தெல்லிப்பழை வைத்தியசாலை சங்கம்.

**முழங்காவில் ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் ஆலய தேர்முட்டி அமைத்தலுக்கான கூறுவிலை கோரல்**

மேற்படி ஆலயத்தில் தேர்முட்டி அமைப்பதற்கான கூறுவிலை கோரப்படுகிறது. கூலி ஒப்பந்த அடிப் படையில் செய்துதர விருப்பமுடைய முன் அனுபவம் கொண்ட ஒப்பந்ததாரர்கள் ஆலய தேர் திருப்பணி சபைத் தலைவர்/செயலாளர் உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: தலைவர் - 077 4102470
செயலாளர் - 077 8708115

ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர்
ஆலய தேர்த் திருப்பணி சபை.

**முத்தான முதலாம் ஆண்டு நினைவலைகள்**



**பூபாலு கோணேஸ்வரலிங்கம்**
(கரிகாலன் - வல்வெட்டித்துறை)
மண்ணில் 25.01.1960
விண்ணில் 21.08.2015
திதி: ஷஷ்டி

அழுத கண்ணீர் காயும் முன்னே -
அப்பா ஓராண்டு ஓடியதோ
உங்கள் கோலத் திருமேனி - என்றும்
எம் அழியாச் சித்திரமே!
போன வழி நீங்கள் - மறந்தாலும் அப்பா
நாம் பார்த்தவிழி - இன்னும் மூடவில்லை
உங்கள் நினைவு
-எம் உயிருள்ளவரை மாறாதப்பா!

**பிள்ளைகள்.**

**Personal Class**
தரம் 03-A/L வரையான மாணவர்களுக்கு ஆங்கிலம்,Spoken With Grammar,சிங்களம் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
077 8361521

**வேலை ஆள் தேவை**
யாழ் நகரில் உள்ள வீடொன்றிற்கு தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பெண் வேலை ஆள் ஒருவர் தேவை.
077 9040413, 077 8649163

**வீடு விற்பனைக்கு**
இலக்கம் 40/18, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் நிலப்பரப்பு 01 குளி 1.10 நிலப்பரப்பில் அமைந்த 03 அறைகள், குசினி, கோல், குளியலறை, சுற்றுமதிலுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
076 88 38 116, 077 62 58 246

**அவதானமாக இருங்கள்**

**மிக குறைந்த கட்டணத்திலான வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

✔ பொதிகள் சேவை தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் ஒழுங்கை மீறும் வகையில் குறைந்த கட்டணத்தில் அனுப்பப்படும் பொதிகளினால் வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்கள் சட்ட சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும்.

காத்திரமான பொதிகள் சேவை துறையில் 20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை கொண்ட நாம்

மிகச் சரியான தெரிவு அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் Tel : 021 222 3536
இல 10, கஸ்தூரியார் வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கைவேண்டும்

## *இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்து*

கொழும்பு, ஓக. 8
எந்தவித குற்றச்சாட்டுகளும் இன்றி பல வருடங்களாக சிறைச்சாலைகளில் வாடுகின்ற அரசியல் கைதிகளை நிபந்தனையின் அடிப்படையிலாவது விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்துகிறார் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்.

அரசியல் கைதிகளின் விடுதலை கோரி இன்று திங்கட்கிழமை கொழும்பு மற்றும் யாழ்ப்பாண பகுதிகளில் இரு வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். இலங்கை அரசு சர்வதேச ரீதியில் பல சவால்களை முகம்கொடுத்து வருகின்ற நிலையில், இந்தப்பிரச்சினை மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தும்.

எந்தவித குற்றச்சாட்டுகளுமின்றி சிறைகளில் வாடுகின்ற அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நான் பல தடவைகள் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி உரையாற்றியுள்ளேன்.

கடந்த காலங்களில் பல அரசியல் கைதிகள் நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர். இது போன்று நிபந்தனைகளின் அடிப்படையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் கைதிகள் பிரச்சினை ஒரு சமூகம் சார்ந்த பிரச்சினையாகப் பார்க்காது, இதனைப் பொதுப் பிரச்சினையாகக் கருதவேண்டும் – என்றார். (வ-5)

## வடக்கில் பௌத்த கலாசாரத்தை திணிப்பதும் இனப்படுகொலையே

*சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு*

வவுனியா, ஓக.8
இஸ்ரேல் நாடு யூதர்களுக்கு என்று சொல்லப்பட்டது போன்றே, இலங்கை பௌத்தர்களுக்கான நாடு என்று சொல்லப்படுகின்றது. வடக்கு மாகாணத்திற்குள் பௌத்த கலாசாரத்தை திணிப்பது கூட ஒரு விதமான இனப் படுகொலையாகும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

வவுனியா- சிந்தாமணி ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை அரசியல் யாப்பு நூல் வெளியீட்டு விழாவில் அவர் கலந்துகொண்டார்.

இதன்போது சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

தமிழர்களுக்கு என்று கசப்பான அனுபவங்கள் உள்ளன. பல்வேறுபட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட வரலாறுகள் உள்ளன. நல்லாட்சி அரசின் கீழ் முழுக்க முழுக்க பௌத்த கோயில்கள் உள்ளன. முல்லைத்தீவில் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலம் இராணுவம் மற்றும் கடற்படையிடம் உள்ளது. வடக்கில் புத்தர் சிலையை வைப்பது நோக்கமல்ல. தமிழ் மக்களுடைய கலாசாரங்களை எவ்வாறு அழிப்பது என்பதன் நோக்கமே.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் ஒன்றரை இலட்சம் இராணுவம் இருக்கின்றது. இராணுவக் குடியிருப்புக்கள், முகாம்களுக்குப் பக்கத்தில் பௌத்த கோயில்கள். இதனை விட சிங்கள குடியேற்றங்கள் உள்ளன. சிங்கள –பௌத்த கோயில்களை சீரமைக்கச் செய்வதற்காக அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாக்கல் செய்திருக்கின்றார். அரசு தங்களுடைய நிலைப்பாட்டில், நிகழ்ச்சி நிரலில் மிகத் தெளிவாக இருக்கின்றது. முழு இலங்கையையும் சிங்கள பௌத்த கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றது.

தென்பகுதியில் சைவ ஆலயங்கள் உள்ளன, தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள், ஆனால் வடபகுதியில் சிங்கள மக்கள் இல்லை, ஆனால் இராணுவம் பாரிய கோயில்களை உருவாக்குகின்றது என்றால் கலாசார மாற்றங்களை ஏற்படுத்தவதற்காகவே என்றுதான் கூற வேண்டும். இவ்வாறான சம்பவங்களை ஏன் தமிழ்த் தலைமைகள் அரசுடன் பேசவில்லை. சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு ஈடுபடுகின்றார்கள். 120 பேருக்கு மேற்பட்டவர்களை விடுவிப்பதில் என்ன பிரச்சினை உள்ளது?

உருவாகவுள்ள அரசியல் சாசனத்தில் பௌத்தம் என்பது முதலிடத்தில் உள்ளது. அதில் மாற்றம் இல்லை. வடக்கில் பௌத்த கோயில்கள் திணிக்கப்படுவதும், பௌத்தம் என்பது அரச மதமாகவும், அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டதன் காரணமாகவே இவற்றை அரசு மேற்கொள்கின்றது. (வ-21)

## முதல்வருக்கு


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவில்லை. தற்போது ஆதாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதனாலேயே, ஓய்வுபெற்ற நீதிபதிகள் இருவரையும், ஓய்வுபெற்ற முன்னாள் மாவட்டச் செயலர் ஒருவரையும் உள்ளடக்கி விசாரணை நடத்த அனுமதி கோரியுள்ளேன். இந்த விசாரணையின் போது எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்க முடியும் – என்றார். (வ-5-101-106)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சோதிநாதன்

**(ஓய்வு பெற்ற பிரதம எழுதுநர் - கச்சேரி யாழ்ப்பாணம் நிருவாக அலுவலர், அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம்)**



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சோதிநாதன் (07.08.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான அருணாசலம் - சின்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கண வரும் உமையாள், முகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயஷங்கர், ஷர்மிளா ஆகியோரின் அன்பு மாமனும் மலரோன், மயிலோன், நவினா, கேஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர் களான சிவராசா, புஸ்பமணி, மகேந்திரன் மற்றும் சிவயோகநாதன், திருப்பதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.08.2016 புதன்கிழமை மு.ப. 9 மணியளவில் பகவான் பாதை இருபாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரு பாலை கொடிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பகவான் பாதை,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
குடும்பத்தினர்
**சோ. முகுந்தன் (மகன்)**
**தொ.பே. 021 4925164**

### யேசுரத்தினம் பெலிக்சிஸ் றெனாட்

( J.F.Renard) **(றொணி) உப அதிபர் - அஸ்ஹர் மத்திய கல்லூரி, அக்குறணை, ஸாஹிரா மத்திய கல்லூரி, அக்குறணை)**

**மலர்வு** 10.10.1968
**உதிர்வு** 05.08.2016



முல்லைத்தீவு அளம்பிலைப் பிறப்பிடமாகவும், கண்டி அக்குறணையை வசிப்பிடமாகவும் கொண்ட யேசுரத்தினம் பெலிக்சிஸ் றெனாட் (05.08.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற அந்தோணிபிள்ளை யேசுரத்தினம் மற்றும் கொலஸ்ரிக்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி யேசுதாசன் தம்பதியரின் அன்புமருமகனும் கிறிஸ்ரில்டாகொன்சி அவர்களின் அன்புக்கணவரும் அனோஷியன், ஜெஸ்ரியன், பெலக்ஷீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலிஸ்ரஸ்றெஜினோல்ட், அலக்சிஸ் லெனாட், அன்ரனிஜெராட், அருட்தந்தை யூட்ஸ்பேனாட் (அ.ம.தி), அகஸ்ராயேசுதயாளினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிரியந்தினி, பிருந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும் சர்மிளா, வத்சலா, றொசானி, நிமால், பசில் மத்தியாஸ் ஜெனிற்ராபிரேமிளா, அன்ரனிஜீவரட்ணம் கலிஸ்ரா கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் றெனோ, டனி, கரி, கனுசியா, நியூலின், டனிலா, டெலானி, அஜய், ஆஷாஸ் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இன்று (08.08.2016) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் அளம்பில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**[illegible]**
**முல்லைத்தீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்கள்

### சீனியர் அப்புத்துரை



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் அம்மன் கோயிலடி சூராவத்தை சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சீனியர் அப்புத்துரை நேற்று (07.08.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.08.2016) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக றொட்டியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

### நடராசா அன்னம்மா

**(வாரிவளவு காரைநகர்)**



காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நடராசா அன்னம்மா (07.08.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர் களான கணபதிப் பிள்ளை - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சபாபதிப் பிள்ளை - பார்பதிப் பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான பரமநாதர், இராமநாதன், மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை நடராசா (முன்னாள் வர்த்தகர் பசறை) அன்பு மனைவியும் கணேசன் (கணபாலா - கனடா), நாகரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் திலகவதி (கனடா), செல்வராணி (UK) ஆகியோரின் அன்புமாமியும் பாலசுப்பிரமணியம்- வனிஜா (கனடா) ஜங்கரன் - இதயவாணி (கனடா) ,திருக்குமரன் - கலைமகள் (கனடா), திருமாறன் - சிவதர்சினி (கனடா), கஜவதனி-வித்தகன் (கனடா) திவாகரன் (UK), ராகவன் (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தருணிகா, அபிர்வசி, சிறிவர்சன், வசியன், கஜவருணி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.08.2016) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 9 மணிக்கு பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வாரிவளவு ,**
**காரைநகர்.**

**தகவல்:**
குடும்பத்தினர்
076 6369256

திருமதி

### தங்கமுத்து வல்லிபுரம்



அல்வாய் வடக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து வல்லிபுரம் நேற்று (07.08.2016) ஞாயிற்றுக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா வல்லி புரத்தின் பாசமிகு மனைவியும் விஜயகுமாரன் (ஓய்வு நிலை எழுது வினைஞர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) கமலாதேவி, நாகேஸ்வரி (நூலக உதவியாளர் பிரதேசசபை, சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புவனேஸ்ரி , றங்கநாதன் ஆகியோரின் அன்புமாமியும் வித்தகன், வினோதினி, பிரியதர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆர்த்திகா, அபிநயா, சாருகா ஆகி யோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.08.2016) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணியளவில் கட்டைபறிச்சான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**புகையிரத நிலைய வீதி,**
**கொடிகாமம்.**
**தொ.பே. 077 6966997**

**தகவல்:**
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை சுருட்டியது இங்கிலாந்து இறுதிநாளில் அரங்கேறிய திரில் வெற்றி



இங்கிலாந்து- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 141 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இங்கிலாந்து, தொடரில் 2:1 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான், முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 297 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பலன்ஸ் 70 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக சொகைல்கான் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் சகல இலக்குகளையும் இழந்து 400 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அசார் அலி 139 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் வோக்ஸ், புரோட் இருவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 103 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய இங்கிலாந்து, மொயின் அலி, பரிஸ்ரௌவ் இருவரினதும் வேகமான அரைச்சதத்தின் உதவியுடன் 445-6 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக மொயின் அலி ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ஆமிர், சொகைல்கான், சாஜ் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

343 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய பாகிஸ்தானை, இங்கிலாந்தின் வேகப் பந்துவீச்சு மிகையாகவே சோதித்தது. அஸ்லாம் நிலைத்து நின்றாலும் ஹபீஸ், யுனிஸ்கான் இருவரும் முறையே புரோட், அன்டர்சன் கூட்டணியால் வீழ்த்தப்பட்டனர். 10 ஓட்டங்களுடன் மிஸ்பாவை வெளியேற்றினார் பின். சபிஹ், அகமட் இருவரையும் ஓட்டங்களைப் பெறவிடாது பவிலியனுக்குத் திருப்பினார் வோக்ஸ். அரைச்சதம் கடந்த அஸ்லாமை போல்ட் செய்தார் பின். பாகிஸ்தான் 125-7 என்ற நிலையில் இருந்த பொழுது, நாள் முடிய 35 பந்துப் பரிமாற்றங்கள் எஞ்சியிருந்தன. முடிவில் 201 ஓட்டங்களில் சுருண்டது பாகிஸ்தான். இந்த வெற்றியின் மூலம் நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 2:1 என்று முன்னிலையில் உள்ளது. (ம)

## ஆஸ்திரேலிய அணியின் மோசமான சாதனை


ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் ஆட்டங்களில் உலகின் முதல்தர அணியாக இருந்த போதிலும் ஆசியக் கண்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது கிடையாது. இலங்கைக்கு எதிராக காலி மைதானத்தில் கிடைத்த தோல்வியுடன், தொடர்ந்து எட்டு ஆட்டங்களில் ஆசிய மண்ணில் ஆஸ்திரேலியா மண்ணைக் கௌவியுள்ளது.

2012ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான தொடரை 4:0 என இழந்தது, 2013ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை 2:0 என இழந்தது. நடப்பு வருடத்தில் இலங்கைக்கு எதிரான தொடரை 2:0 என இழந்துள்ளது. மொத்தத்தில் ஆஸ்திரேலிய அணி ஆசிய மண்ணில் இறுதியாக எதிர்கொண்ட எட்டு ஆட்டங்களில் தொடர்ச்சியாக தோல்வியடைந்து, மோசமான சாதனையை வைத்துள்ளது. (ம)





அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரும் இங்கிலாந்தில் வசித்து வருபவரு மான பாகிஸ்தானின் மலாலா, இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள பாகிஸ்தான் அணி யினரை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்ததுடன், அணியின் வீரர்கள் அனைவரும் கையொப்பமிட்ட நினைவுப்பரிசிலையும் பெற்றார். (ம)



## விரைவான 50 இலக்குகள்; டில்ருவான் பெரேரா சாதனை

மிக விரைவாக 50 இலக்குகளை வீழ்த்திய இலங்கை வீரர் என்ற சாதனையைப் படைத்தார் டில்ருவான் பெரேரா.

இலங்கை- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் காலியில் நடைபெற்றது. இதில் இலங்கை அணி 229 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதற்கு இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான டில்ருவான் பெரேரா முக்கிய காரணமாகத் திகழ்ந்தார். முதல் இன்னிங்சில் 4 இலக்குகள், இரண்டாவது இன்னிங்ஸில் 6 இலக்குகள் என ஒட்டுமொத்தமாக 10 இலக்குகளைக் கைப்பற்றினார். இந்த 10 இலக்குகளின் உதவியுடன் அவர் விரைவாக 50 இலக்குகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார். 11 ஆட்டங்களில் பெரேரா இந்த மைல்கல்லை எட்டினார். முன்னாள் சுழல் வீரரான அஜந்த மெண்டிஸ் 12 ஆட்டங்களில் 50 இலக்குகளை எட்டியமையே இதுவரை சாதனையாக இருந்தது. (ம)

## அஸ்வினைப் பயன்படுத்த கோக்லிக்குத் தெரியவில்லை

### கங்குலி காட்டம்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின்தான் இந்தியாவின் துருப்புச் சீட்டு, அவரை கோக்லி சரியாகப் பயன்படுத்தவில்லை என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திய அணி 4 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ளது. முதல் டெஸ்டை இந்தியா வென்ற நிலையில், ஜமைக்காவில் 2ஆவது டெஸ்ட் நடந்தது. இதில் இந்தியாவுக்கு வெற்றிவாய்ப்பு அதிகமாக இருந்தது. ஆனால் இந்திய அணியின் சில தடுமாற்றங்களால் அந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இந்த நிலையில் கோக்லி, அஸ்வினைச் சிறந்த முறையில் பயன்படுத்தவில்லை என கங்குலி குற்றம் சுமத்தியுள்ளார். ஐந்து சிறப்பான பந்துவீச்சாளர்களை வைத்துக்கொண்டும் கோக்லியால் ஆட்டத்தை வெல்லமுடியவில்லை. அஸ்வின்தான் இந்தியாவின் முக்கிய பந்துவீச்சாளர்.

இரண்டாவது இன்னிங்சில் அஸ்வினுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கியிருக்க வேண்டும். கோக்லியின் அணுகுமுறை அஸ்வினை மையமாக வைத்து அமைந்திருந்தால் ஆட்டத்தின் முடிவு இந்தியாவுக்கு சாதகமாக அமைந்திருக்கும் என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 8

**வொலிகிங்ஸின் தொடர்**

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரவு 7 மணிக்கு மல்லாகம் நியூவொரியஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

**இளமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடர்**

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தத்திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. இதன்படி இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா அணியும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதவுள்ளன.

**பாரதியின் தொடர்**

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணியும், பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும். இரண்டாவது ஆட்டத்தில பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணியும் மோதவுள்ளன. (ம-108-422)



# மாகாணமட்ட எல்லேத் தொடரில் கிண்ணம் வென்றது கிளிநொச்சி

யாழ்ப்பாணம், ஓக. 8

மாகாணமட்ட எல்லேத் தொடரில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதியது. இரண்டு இன்னிங்ஸ்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துகளில் 10 ஓட்டங்களையே பெற்றது.

3 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கிளிநொச்சி மாவட்ட அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காக 18 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டினேஸ் 6 ஓட்டங்களைப் பெற்றார்.

22 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி ஏழு ஓட்டங்களில் கட்டுப்பட்டதையடுத்து 14 ஓட்டங்களால் வாகை சூடியது கிளிநொச்சி மாவட்ட அணி. மூன்றாமிடத்தை முல்லைத்தீவு மாவட்ட அணி தனதாக்கியது. (ம-422)

## உருத்திரபுரம், ஞானமுருகன் வென்றன

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் உருத்திரபுரம், ஞானமுருகன் அணிகள் வெற்றிபெற்றன.

எவரெஸ்ட்டின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 6.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணி கிளிநொச்சி இரணமாதாநகர் சென். மேரிஸ் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை மயிலங்காடு ஞானமுருகன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23-108)



## இமையாணன் மத்தியின் தொடர்; இறுதியில் கரவெட்டி ஞானம்ஸ்

கரணவாய், ஓக. 8

இமையாணன் மத்தியின் துடுப்பாட்டத் தொடரில் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டமொன்று குறித்த மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பருத்தித்துறை வீனஸ் விளையாட்டு கழகமும் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிய இந்த ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஞானம்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுகந்தன் 38 ஓட்டங்களையும், பிரகாஸ் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வீனஸ் அணியின் சார்பில் பிரசாந் 2 இலக்குகளையும், அமிர், ராஜா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

91 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய வீனஸ் அணி 8 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் 50 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் 40 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது ஞானம்ஸ் அணி. அதிகபட்சமாக பிரதீபன் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சேந்திரன் 4 இலக்குகளை வீழ்த்தினார். (ம-108)

# அன்ரனிஸ் அணி முன்னேற்றம்



யாழ்ப்பாணம், ஓக. 8

நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணி முன்னேற்றம் கண்டது.

நவசக்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மணற்காடு அன்ரனிஸ் அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது. அன்ரனிஸ் அணியின் ஜீவதாஸ் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் சென். அன்ரனிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே மணற்காடு சென். அன்ரனிஸின் நிமல், கமல் தமது அணிக்கான கோல்களைப் பதிவு செய்தனர். தற்போது நிலைமை 4:0. பதிலுக்கு போராடிய மனோகரா அணி கிரியின் உதவியுடன் ஓர் கோ[illegible] பிறி[illegible] 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மணற்காடு சென். அன்ரனிஸ் வி.கழகம். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரஷ்யாவுக்கு முதல் பதக்கம் உணர்ச்சிவசப்பட்ட ரசிகர்கள்


ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்றையதினம் ரஷ்யா தனது முதல் பதக்கத்தை பல ஏக்கங்கள், தடைகளைக் கடந்து கைப்பற்றியது.
ரியோ ஒலிம்பிக் தொடர் தொடங்குவதற்கு முன் ரஷ்யா ரியோ ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளுமா? என்ற சந்தேகம் நிலவியது. 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் தொடரிலும், 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பீஜிங் ஒலிம்பிக் தொடரிலும் ரஷ்யாவின் சார்பாக களமிறங்கிய வீர, வீராங்களைகளில் 70 சதவீதமானோர் ஊக்கமருந்தைப் பாவித்தமை இந்த வருடத்தின் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டது. இதனால் ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்யா களமிறங்குவதில் சிக்கல்கள் இருந்தன. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகள் ரஷ்யாவுக்கு பகிரங்கமாக தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தின. இதனால் ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாவதற்கு முதல் நாள் வரை (ஓகஸ்ட் நான்காம் திகதி வரை) ரஷ்யா களமிறங்குவதில் சந்தேகம் நிலவியது. ஓகஸ்ட் நான்காம் திகதியே ரஷ்யக் கொடி அனுமதிக்கப்பட்டதுடன் சில வீர, வீராங்கனைகள் களமிறங்குவது உறுதியானது. இத்தகைய சர்ச்சைகளின் பின்னணியில் கிடைத்த முதல் பதக்கம் என்பதால் ரஷ்ய ரசிகர்களும் வீர, வீராங்கனைகளும் சிறிது உணர்ச்சிவசப்பட்டனர்.
ஆண்களுக்கான ஜூடோ போட்டியில் (60 கிலோ எடைப் பிரிவு) ரஷ்யா சார்பில் கலந்துகொண்ட பெஸ்லான் மட்ராணவ் என்பவரே அவ்வாறு முதல் தங்கத்தை கைப்பற்றினார். அவர் தனது இறுதிப் போட்டியில் கஜகஸ்தானின் ஸெல்டோஸ் ஸ்மெடோவை வீழ்த்தினார்.
தங்கத்தைக் கைப்பற்றிய பிற்பாடு, எங்கள் நாட்டுக்கு உளரீதியாக சொல்லில் அடங்காத அழுத்தங்கள் இருந்தன. எனவே இந்தப் பதக்கம், பதக்கப்பட்டியலில் எம்மை நிலைநாட்ட வேண்டிய ஊக்கத்தை வழங்கும் என பெஸ்லான் நம்பிக்கை தெரிவித்தார். (ம)

## விழிப்புலன் பாதிக்கப்பட்டோரின் சத்தப்பந்து துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக.8
விழிப்புலன் பாதிக்கப்பட்டவர்களுக்கான துடுப்பாட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.
பரந்தன் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தில் வடமாகாண விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் அணியை எதிர்த்து கிழக்கு மாகாண விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் அணி மோதவுள்ளது. யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் ஏற்பாடு செய்கின்றது. அதற்கான அனுசரணையை லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் நம்பிக்கை ஒளி அமைப்பு வழங்குகின்றது. (ம-106)

## 100 மீற்றர் நீச்சல் போட்டியில் கிமிக்கோ ரஹீம் நான்காமிடம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று இரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற பெண்கள் பிரிவு 100 மீற்றர் பின்பக்க நீச்சலில், தகுதிச் சுற்றில் நான்காமிடத்தைப் பெற்றார் இலங்கையின் கிமிக்கோ ரஹீம்.
குறித்த போட்டியில் கிட்டத்தட்ட அறுபது வீராங்கனைகள் கலந்துகொண்டனர். அரையிறுதிக்கான தகுதிச் சுற்று நேற்று நடைபெற்றது. இதன் இரண்டாவது தெரிவுப் போட்டியில் கிமிக்கோ ரஹீம் இடம்பெற்றிருந்தார். இந்தப் பிரிவில் அவரால் நான்காவது இடத்தையே பெற முடிந்தது. இதனால் அரையிறுதிக்கான வீராங்கனைகளின் பெயர்ப் பட்டியலில் (முதல் பதினாறு வீராங்கனைகள்) அவரால் இடம்பிடிக்க முடியவில்லை. (ம)



## ஒலிம்பிக் தீபத்தை கடைசியாகப் பெற்ற பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் சாவு

ரியோ ஒலிம்பிக் தொடருக்கான தீபத்தை கடைசியாகப் பெற்ற பிரேஸில் நாட்டின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை மேதை இவோ பிதான்கய், நேற்று மாரடைப்பால் சாவடைந்தார்.
தொடரோட்டம் மூலம் கொண்டு வரப்பட்ட ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் தொடருக்கான தீபத்தின் இறுதிப் பயணம் கவீயா என்ற இடத்தில் முடிந்தது. தீபத்தை இவோ பிதான்கய் பெற்று முடித்து வைத்தார். இந்த நிலையில் அவரது இந்த மறைவு ஒலிம்பிக் கிராமத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.
பிரேஸிலின் நிடேரோயில் உள்ள வேடிக்கை விடுதியொன்றில் கடந்த 1961 ஆம் ஆண்டு தீப்பிடித்து நூற்றுக்கணக்கானவர்கள் உடல் கருகி பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு பிதான்கய் பிளாஸ்டிக் சிகிச்சை அளித்து குணப்படுத்தினார். இதனையடுத்து 'பிரேஸிலின் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை மேதை' என பிதான்கய் புகழப்பட்டார். (ம)

**காணிதேவை**
ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் நீர்வேலி, ராஜவீதிப் பகுதிகளில் வீட்டுடன் அல்லது தனிக் காணி 15 - 20 பரப்பளவில் தேவை. விற்க விரும்புவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொ.பே. 070 202 6746

## ஆண்களுக்கான 400 மீற்றர் நீச்சல்; பதக்கங்களைக் குவித்தது ஜப்பான்

ஒலிம்பிக் தொடரில் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் நீச்சலில் ஜப்பான் தங்கம், வெண்கலம் என இரு பதக்கங்களை வென்றது.
ஜப்பானின் சார்பாக களமிறங்கிய கோசுகி ஹகினோ 4 நிமிடங்கள், 6 செக்கன்கள், 5 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றினார். அமெரிக்க வீரரான சேஸ் கலிஸ் 4 நிமிடங்கள், 6 செக்கன்கள், 75 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஜப்பானின் பிறிதொரு வீரரான டய்யா செட்டோ 4 நிமிடங்கள்,9 செக்கன்கள்,71 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# கதிகலங்கியது பார்சிலோனா கவனித்தனுப்பியது லிவர்பூல்

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்கள் பங்கேற்று விளையாடி வரும் பன்னாட்டு சம்பியன்ஸ் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனாவை முறையாகக் கவனித்தது லிவர்பூல் அணி.
மெஸ்ஸி உட்பட பல நட்சத்திர வீரர்கள் இருந்தமையால் பார்சிலோனாவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்றே கருதப்பட்டது. ஆனால் ஆரம்பம் முதலே லிவர்பூல் ஆதிக்கம் செலுத்தியது. 15 ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் மானே முதல் கோலைப்



பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியின் இறுதிக் கோலுமாக அமைந்தது.
இரண்டாவது பாதியின் 47 ஆவது நிமிடத்தில் லிவர்பூலின் சார்பாக பிறிதொரு கோல் பதிவானது. இந்தக் கோலின் மூலம் லிவர்பூல் அணி 2:0 என மேலும் வலுப்பெற்றது. தொடர்ந்து 48 ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் மற்றொரு வீரர் ஓரிஜி, 93 ஆவது நிமிடத்தில் குருஜிக் கோல்களைப் பதிவு செய்ய முடிவில் லிவர்பூல் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.